ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

வருட சந்தா முன்பணம்	—	ரூ.	3—0
6-மாத சந்தா	,,	— ,,	1-12
வெளி நாட்டிற்கு	,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங்: 1 க்கு அ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு அ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7	ஈரோடு, பிரஜோத்பத்தி௵ ஆனி௴ 14௳ (28—6—1931)	மலர் 9

சென்னை, திருச்சி, மதுரை, கொழும்பு முதலிய பல இடங்களில் நடைபெற்ற வைத்திய மகாநாடுகளிலும், மருந்து கண் காட்சிகளிலும், அரசாங்க அதிகாரிகளாலும் பரீட்சிக்கப்பட்டு முதல்தரமான மருந்துகளென்று அநேக தங்க பதக்கங்கள் பரிசு பெற்றவரும், வைத்திய சிம்ஹம், வைத்திய பூபதி, வைத்திய ஆசிரியர், ஸ்பெஷலிஸ்ட் என்று பல பட்டங்களைப் பெற்றவருமாகிய,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

(ஓர் யோகீஸ்வரரின் அநுபவ முறைப்படி தயார் செய்யப்பட்டது)

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிகப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளெழுத்து, நித்திரையின்மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல், காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

ஒரு முறை இந்தத் தைலத்தை உபயோகித்தவர்கள், அவர்களே மற்றவர்களுக்கும் சிபார்சு செய்து வருகிறார்கள். இதன் உண்மையை நீங்களும் ஒரு முறை பரீட்சித்துப் பார்ககவும். ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் அசதி, சோம்பல், இடுப்பு வலி, நரம்புத் தளர்ச்சி, சொப்பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் ஏற்படும் துரித ஸ்கலிதமும், முதலிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த நரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மனதுக்கு உற்சாகத்தையும் சுறுசுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுபவிக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் காகரப்பு, குலை எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்செரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் ஏற்படும் வயிற்றுப்போக்குகள், சாவரோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்தமான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தாலும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச்சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச்சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப்பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

குழந்தை மருந்துகள்

கோரோஜனை மாத்திரை பாட்டில் அணா 8. கஸ்தூரி மாத்திரை பாட்டில் அணா 8. கட்டுவாதி மாத்திரை அணா 8. காரமாத்திரை அணா 8. சுகபேதி மாத்திரை அணா 8. கரப்பான் எண்ணெய் ரூ. 2—0—0 மாந்தக்குடோரி எண்ணெய் ரூ. 1—0—0.

இன்னும் எல்லாவித நோய்களுக்கும் மிகவும் குணமுள்ள மருந்துகள் கிடைக்கும்.

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இனாமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சினாப்பள்ளி

ஓர் அதிர்ஷ்ட ஜோதிமுத்து.

டாக்டர் B. A. எதிராஜுலுவினல் தயாரித்து 31 ஆண்டு களாக அனுபவித்து கைகண்ட, பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெயை உபயோகியுங்கள்.

(கோஷாயி ஒருவரால் அனுக்கிரகிக்கப்பெற்று தர்மார்த்தமாக குறைந்த விலைக்கு வெளியிட்டு வருகிறது.)

சகோதர, சகோதரிகளே, வெட்டவாய்வு (அஷ்ட) எட்டு வித ங்களாக, கெர்ப,—விந்து ஸ்தானங்களில் தங்கி, வெளியாகிக்கொண்டிருப்பதை அக்காலங்களில் கண்டித்து நீக்காமல் விட்டு நீடித்து நின்று மேகவாய்வு என்று பெபர் பெற்ற கொடியோன் கபாலத்தில் தங்கி, கபால இடி, குத்தல் நேத்திரத்தில் பார்வை மங்கல், பல குற்றங்களும், நாசி, செவி, தந்தங்கள், கண்டம் இவைகளில் குற்றங்களும், நெஞ்சில் தங்கி, மாரடைப்பு, தமரகவாய்வு, தெனரல், கொக்கிருமல், காசமாகவு ◦, கீல்களில் தங்கி, சூலைகளாகவும் நரம்புகளில் தங்கி முன்-பின் (வீச்சுகள்) பலவித இழுப்புகளாகவும் வயற்றில் தங்கி, சகலவித குன்மங்கள் வாய்வு, சூதககட்டிகள், பக்க விலா இழுப்பு குத்தல் கெர்ப குற்றங்கள் நித்திரை அற்ற நீர்தாரை ரோகங்கள், மூலங்கள், திமிர், மத மதப்பு, சகலவித மேகச்கள், சிட்டைகள் ரண குஷ்டங்களாகவும், மலப்போக்கு அல்லது சிக்கல் பட்டு ஜெனிக்கும் (விரிக்கின் பெருகும்) அனந்த வெட்டவாய்வு ரோகிகளும், 3 நேரம் கம், பிரம்ம முடி கோஷாயி மேக எண்ணெ சாப்பிட்ட 7வது நாளே, எல்லா உபத்திரவத்திலிருந்து விலகி 15வது நாள் பாலிய தேசசுடன், விருத்தரும் பாலிய உணர்ச்சி பெற்றுவருவது பிரத்தியக்ஷம்

யோகாப்பியாசிகளுக்கு சடலத்திலுள்ள நார்நீர்களை அகற்றி எல்லா அவயவங்களிலும் சுத்த இரத்தத்தை ஊட்டி, அறிவு இடத்தில் புத்தியை நிறுத்தி (ஜோதியாகிய) தன்னை தெரிசிக்க, காயத்தை இருகச்செய்து காக்கும் காயகர்பம். 3 நேரம் உபயோகிக்கும் பிரம்ம முடிகோஷாயி மேக எண்ணெ கொண்ட சீசா 1க்கு ஏழைகளுக்கு ரூ. 7—0—0.

பத்திய விபரம் மருந்துடன். பாக்கிங்தபால் செலவு பிரத்தியேகம். மலாய் வாசிகள் ஆர்டருடன் முன் பணம் அனுப்பவும் வேண்டும்.

பிரம்மமுடி வைத்தியசாலை,
தென்னூர், திருச்சி.

வெளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!
முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ த்திற்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்௵ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவாகளால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி. பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

அகத்தியர் ஆராய்ச்சி.

இது சென்னை இராஜதானி கலாசாலை தமிழ் ஆசிரியரும் கலாவல்லவருமான பண்டிதர் உயர்திரு. கா. நமச்சிவாய முதலியார் அவர்களால் அனேக நூல்களை ஆராய்ச்சி செய்து பல ஆதாரங்களைக்கொண்டு எழுதப்பட்டதாகும்.

விலை அணு 0—2—0 தான். வேண்டுவோர் 3 அணு ஸ்டாம்பு அனுப்பவும்.

பகுத்தறிவே விடுதலை.

அல்லது ஜீவாத்மா இல்லை, என்னும், இப்புத்தகம் சிறந்த ஆராய்ச்சி நூலாகும். முன், பின், ஜென்மம், முடப்பழக்கவழக்கங்கள் முதலியன ஆராயப்பட்டிருக்கின்றன. சடங்குகள், அதன் சிலவு, கடவுள் ஆராதனை விக்ரக வணக்கம் முதலியன கண்டிக்கப்பட்டிருப்பதோடு பல ஆதாரங்களினாலும், மேற்கோள்களாலும் விளக்கப்பட்டிருக்கின்றது. சித்திரப்படங்களுடன் 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணு 6, 7 அணு ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

குடி அரசு புஸ்தகசாலை, ஈரோடு.

நிமிஷக்கணக்கில் குணமடைவதைவிட்டு ஏன் கவலைப்படுகிறாய்?

சுவாச காச நிவாரணி.

ஆயிரக்கணக்கான பேர்கள் குணமடைந்திருக்கின்றனர். சுவாச காச ரோகத்தினால் நுரையீரல், சுவாசக்குழல், மார்பு இவைகளில் உண்டாகும் கபம், இருமல், இளைப்பு, சீதளம், மார்ச்சளி, நெஞ்சுவலி, கஷ்டசுவாசம், மூக்கடைப்பு தொண்டையில் உண்டாகும் இரைச்சல், அடைப்பு, கரகரப்பு, எரிச்சல் வலி, புண் முதலியவற்றையும், சாதாரண ஜலதோஷம், தும்மல், பீனிசம், வாயிலும் நாசியிலும் நீர்வடிதல், குழந்தைகள் மார்ச்சளி முதலியவைகளையும் நமது ஆஸ்தமா பௌடர் உபயோகித்த அந்த நிமிஷத்திலேயே நிவர்த்திசெய்வதுடன் இரத்தத்தை சுத்திசெய்தும் கெட்டியான கபத்தை இளகச் செய்தும், கபத்தை வெளியில் தள்ளியும், சுலபமாய் மூச்சு விடும்படியாயும், தாராளமாய்ப் பேசும்படியாயும், பசி தீபனத்துடன் ஆகாரம் உட்கொள்ளும்படியாயும் இராத்திரியில் நன்றாய் அயர்ந்து சுகமாய் நித்திரை செய்யும்படியாயும் செய்கிறது. 48 நாள் ஒரு மண்டலம் உபயோகிக்கக் கூடியடின் 1க்கு 1-4-0. தபால் கூலி அணு. 4.

புரொப்ரைட்டர், திருநாவுக்கரசு மேடிகல் ஹால்,
அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம். S. I.

சோல் ஏஜண்டுகள்:—
தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெரு மதராஸ்.
K. S. மேதா & Co., 234, சைனுபஜார் ரோட் மதராஸ்.
வெள்ளச்சாமி, No. 300, சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்

சுத்தகதர்! உயர்ந்தகதர்!!
நேர்த்தியான கதர்!!!

அகில இந்திய (கதர்) காங்கிரஸ் சங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. எங்களிடம் கதர் சம்மந்தப்பட்ட எல்லா ரகங்களும் இருக்கின்றன. வெளிநாட்டு ஆர்டர்கள் கிரயம் முழுமையும் அனுப்பினால் கவனிக்கப்படும்.

ஊ. மு. ஸ்ரீ ஈ. ரூ. வே. & Co.,
கதர் ஸ்டோர்,
சேன்னிமலை ஈங்கூர் (S. I. Ry.)

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது
ஒரு முறை பரீட்சியுங்கள்.
புட்டி 1க்கு ரூ. 1—0—0
டஜன் 1க்கு ரூ. 10—0—0
ஏஜண்டுகள் தேவை
அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்புக

சி. பி. சாமி, சித்தமருந்து செய்சாலை பழனி S. I.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஆதிதிராவிடர்களே யோசித்துப்பாருங்கள். புத்திமான் பலவான்.

(கைவல்யம்)

வைதீகமென்னப்பட்ட கொடுமையால் வளர்க்கப்பட்ட உயர்ந்த ஜாதிகள் உங்கள்பேரில் அடிமேல் அடியாக அடிப்பதை உணர்கிறீர்கள். ஆனால் அடி எங்கிருந்து வருகிறதென்பதை நீங்கள் அறியீர்கள். உங்களை இந்து தெய்வங்கள் தள்ளியிருப்பதாகச்சொல்லுகிறார்கள். சாஸ்திரங்களும், விலக்கியிருக்கிறதாம். புரோகிதன், குருக்கள், ஆச்சாரி, உயர்ந்த ஜாதி, இவர்களெல்லாம் பக்கத்தில் சேர்த்தால்பாவமென்கிறார்கள். இவைகளையெல்லாம் கண்டும், கேட்டுமசல சமூகங்கள் உங்களை அலட்சியப்படுத்துகின்றன. தெய்வமானது தெய்வத்தின் தன்மையோடு கூடியிருக்குமா? உயர்ந்த ஜாதியென்னப்பட்ட மனிதனுக்குள்ள ஆணவத்தோடும், அக்கிரமத்தோடும், அதற்கு உடந்தையாகவுமிருக்குமா என்பதை ஆலோசித்துப்பார்க்க இந்து சமூகத்திற்கு மட்டும் இனியும் புத்திவரவில்லை. உலோகப்பொதுவிதிக்கு விரோதமாக கடவுளோ, பெரியவர்களோ, சாஸ்திரங்கள் செய்திருப்பார்களா? என்று நினைத்துப்பார்க்கும் படித்தவர்கள் கூட இல்லையென்றே சொல்லவேண்டும். உண்மை தெரிந்த படித்தவன் கூட இன்னொருவனின் முதுகைப் பார்த்து பேசுகிறானேயல்லாது ஜன சமூகத்தின் முகத்தைப் பார்த்து பேசப்பயப்படுகிறான் காங்கிரஸோ தீண்டாமையை கைகழுவிவிட்டுவிட்டது. சிலகூச்சலாலும் நீங்கள் கூட்டின சில சபைகளினாலும், காங்கிரஸ் என்னும் கூட்டத்தில் சமீபமாக தீண்டாமை போகவேண்டுமென்று ஒரு பேச்சுப்பேசி வைக்கிறார்கள். மதுரையில் நடந்த மாகாண மகாநாட்டில்பொதுஸ்தலபாத்தியதையை உங்களுக்குக்கொடுப்பதற்கு வைதீகர்களிடம் கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானமாயிருக்கிறது. சுயராஜ்யம்மட்டும் இந்துக்களுடைய பிறப்புரிமை பொதுஸ்தலபாத்தியதைகளை வைதீகர்களிடம் காங்கிரஸ் கேட்டு உங்களுக்குக்கொடுக்கும்படியாக உயர்ந்தஜாதி இந்துக்களிடம் சீட்டு வாங்கும்பாத்யதை பார்ப்பனருடைய பிறப்புரிமையோ? வைதீகன் என்பவன்யார்? இவர்களுக்கு இந்த பாத்தியதை எப்படிவந்தது? கொடுப்பவன்யார்? வாங்குகிறவனையார்? என்ற விஷயங்களைப்பற்றி இப்பொழுது பேசுவதில் பிரயோஜனமில்லை.

இந்த தேசத்தில் உங்களுக்கு எதுவும் விரோதமாக விருக்கையில் உங்கள் மனம் யாரைப்போய் அண்டலாம் என்று நினைக்கக்கூடும். நீங்கள் மகமதியரைப்போய் சேர்ந்தால் நெருப்போடு காற்றுங் கூடினாற்போல் மகமதியர்களுக்கு ஆள்பலம் அதிகமாகுமேயல்லாமல் உங்களுக்கு லாபமில்லை. கிறிஸ்தவர்களிடம் சேர்ந்தாலும் நீங்கள் நீங்களாகவேயிருக்கவேண்டும். ஆனதால் நீங்கள், நீங்களாகவேயிருந்து கொண்டு உங்கள் கூட்டங்களுக்கு விஷயங்களை கூடுமானவரையிலும் தெரியப்படுத்தி எல்லாருக்கும் விஷயம் தெரிகிறவரையிலும் ஆங்கிலேயர் உதவியை நாடுங்கள்.

இனிவரும் காலத்தில் இதைவிட உங்கள் சமூகத்தில் கல்விபரவியே தீரவேண்டும். அப்பொழுது உங்கள் நிலைமை வித்தியாசப்படும். அசம்பாவிதத்திற்கு நெடுங்காலம் ஒருவன் இடம் கொடுத்து தனது விதிகளே ஜகத்தின் விதியென்று பாவனை செய்தால் அப்போது திடீரென்று சரித்திரமானது ஒரு புதிய தலைப்பில் இடித்துக்கொண்டு விழுந்து விடுமென்பதையும் உண்மையாகக்கூறலாம். இப்படிப்பட்ட அசம்பாவிதத்தின் [illegible]பாரம் இன்னும் நெடுநாள் ஸ்திரமான வெளியில் இருக்குமா? இதற்கு செதிப்படி ஒரு தீர்ப்பு செய்யாவிடின் பழைய சரித்திர சோகநாடகமே உண்டாகுமென்பதும் மெய்தான். அந்த சமயத்திற்கு நீங்கள் தயாராய்க்கொண்டு வாருங்கள் அப்பொழுது வைதீகர்களிடம் காங்கிரஸ் உங்களுக்காக சிபார்சு செய்ய வேண்டியதில்லை.

மனிதர்கள் மரம் கல்லாகவிருந்தால் அடக்கிவைப்பதே சிறந்த வைதீகம். ஆனால் மனிதர் ஜீவஜந்துக்கள் உயிரும், விருத்தியும், முன்னேற்றமும், நாடுவோர் எல்லாக்காரியங்களிலும், உங்களைப்பிரித்து மனமேங்க விடுதல் குரூரமான கொடுமை. என்னசெய்வது, தெய்வம், சத்தியம், நீதி, நியாயம், தைரியம், முதலியவைகளெல்லாம், திருப்பி எழுதிப்படிக்கும் தேசமாகவிருக்கிறதே. அதனாலேதான் 18 தொப்பிக்காரர்கள் இந்த தேசத்தை ஆளவேண்டுமாம் என்று நான் சிறுவயதிலிருந்தே கேட்டதுண்டு இப்பொழுது ஐந்தாறு தொப்பிக்காரர்களின் ஆளுகைதான் தீர்ந்திருக்கிறது. எப்படி இருந்தாலும் கால சக்தியின் தூதாக பிரிட்டிஷ் தொப்பி நமது நாட்டிற்கு வந்திருக்கிறது, அவர்களிடமே தைரியமாய் உங்கள் குறைகளைச் சொல்லுங்கள். அவர்களுடைய வார்த்தைக்கும் காதுகொடுக்காதீர்கள் உங்கள் சொந்த ஆலோசனையின் பேரில் இனியும் ஆங்கிலேயர்களையே நம்புங்கள். அவர்கள் நாட்டில் நியாயம், விடுதலை முதலியவைகளுக்கு பரிந்துபேசுகிறவர்களிருக்கிறார்கள். அவர்களிடம் இனியும் உங்கள் குறைகளைச் சொல்லி வழக்காடுங்கள் அதனால் உங்களுக்கு நன்மை வந்தாலும் தீமைவந்தாலும் இப்பொழுது நீங்களிருக்கும் நிலைமையைவிட இனியும் தாழ்ந்த நிலைமைக்கு யாரால்கொண்டுவர முடியும். உங்களுக்கு நன்மை உண்டாகவேண்டுமானால் உங்களுக்குள் விஷயம் பரவுதலினால் கட்டுப்பாடும் ஆங்கிலேயர்களின் நல்லெண்ணமும் ஒன்றுசேர்ந்தாலொழிய வேறுவழியில்லை.

கனம் ஸி. பி. ராமசாமி அய்யர் இப்பொழுதடைந்த உத்தியோகம் வைதீகர்கள் தயவினாலா? தேசாபிமானத்தினாலா? ஆங்கிலேயர்கள் தயவினாலா? ஆங்கிலேயர்களோடு சேர்ந்துகொண்டு நமது நாட்டிற்குத்தப்பு செய்தாலும், பார்ப்பனர்களும், அவர்கள் பத்திரிகைகளும், ஒன்றும் பேசமாட்டார்கள். அவர் உத்தியோகம் வைதீகர்களுக்கும், பார்ப்பனர்களுக்கும், அனுகூலமென்பது அவர்களுக்குத்தெரியும். முன் உத்தியோகம் கொடுக்கமறுத்த இந்தியாகவர்மெண்டு இப்பொழுது எதனால் உத்தியோகம் கொடுத்தது? தென் தேசத்து தேசியப்போக்கையும் வடதேசத்து தேசிய வாதிகளின் வைராக்கியத்தையும் கூகை, துணையில்லாமல் மடிகட்டி சீர்திருத்தத்தைச் செப்பனிட்டுவிடலாமென்று சொல்லி ஆங்கிலேயர்களைத் திருப்திப்படுத்தி இருக்காவிட்டால் ஸி. பி. அய்யருக்கு உத்தியோகம் கிடைக்குமா? இவைகளையெல்லாம் பார்ப்பனர்களும் பேசமாட்டார்கள், அவர்கள் பத்திரிகைகளும் பேசாது. தன் காடு புறங்காடு என்று உணராதவர்களைத் தாண்டி விட்டு பேசச் செய்யவும்மாட்டார்கள். ஆகைகளால் தங்களுக்கு நன்மையென்பதும் சமயம்கிடைக்கையில் அவரைக்கொண்டு மற்றவர்கள் தலையில் கையை வைத்து தாங்களே நன்மையடையலாமென்பதும் அவர்களுக்குத்தெரியும். அங்கிருந்தார் இங்கிருந்தார் ஆக்கின சோற்றுக்குப் பங்கிருந்தார் ஆங்கிலேயர்களுக்கு அருமை கண்டருமானார். அதைவிடவா நீங்கள் ஆங்கிலேயரிடம் உங்கள் குறைபாடுகளை சொல்லிக்கொள்ளுவதில் குற்றம் வந்துவிடும் என்றாலும் அன்னியர்களுக்கு தேசத்தைக் காட்டிக்கொடுக்கிறவர்களென்று அழுத்தந்திருத்தமாக அவர்கள்சொல்லுவார்கள் அதை உங்கள் தலைவர்கள் கவனிக்கவேண்டியதில்லை.

பெரியவர்களால் எல்லாதேசங்களிலும் புகழப்படுவதாகிய பெரியவிடுதலையில் தாழ்ந்தவர்கள் விடுதலை இந்நாட்டில் மதிக்கப்படுவதில்லை, உண்மையில் சிலர் இருந்தாலும் அவர்கள் எண்ணங்கள் பல எதிர்ப்புகளால் பாதிக்கப்படுகின்றன. இயற்கை அன்பில்லாமையுடன் ஜாதிப்பெருமையும், வைதீக ஆணவமும் முன்னால் நிற்க தெய்வ சம்மதமும் சாஸ்திர நிச்சயமும் அதில் சேர்ந்துகொண்டிருக்கையில் எந்த சீர்திருத்தம் வந்தாலும் மூச்சைப்பிடிக்கும் வழக்கமென்னும் சம்பிரதாயங்களுக்கு சட்டத்தை உபயோகப்படுத்திக்கொள்ளும் மனோபாவமுடைய அதிகாரிகளும் சீர்திருத்தத்தை நடத்துகிறவர்களாகவிருந்தால் அந்த இடத்தில் நியாயமும் தருமமும் சீர்திருத்தத்தால் கிடைத்துவிடுமென்று யாரால் நம்பமுடியும். என்றாலும் தமது குணத்தில் ஓரம்சம் மற்றோர் அம்சத்தை வஞ்சிக்கவிடுதல் எக்காலத்தும் இயலாது. அவ்விதமாகவே பெரியஜாதிக்காரர்கள் சுயநலக்கோட்டை கட்டிக்கொண்டேபோவார்களானால் ஆபத்தும் பயமும் நமது நாட்டைவிட்டு அகலாது இனிவரப்போகிற எதிர்காலத்தில் நீங்களும் மனிதர்கள்தான் மிருகமில்லை என்றும் இயற்கையில் பொருக்குதல் என்ற ஜந்து சாஸ்திர விதியைத்தான் கடந்தவனென்றும் ருசுப்படுத்துவீர்கள், ருசுப்படுத்தும் கடமை உங்களைச் சேர்ந்தது. பலவான்களுடன் தோழமைப்படுத்தும் சக்தி யாசகத்திலும் இரவலிலும் கிடைக்காது. அந்த சக்தி ஆனந்தமான தூக்கத்தையும் சிரமத்தையும்பொருப்பது.

தனக்குத்தானே நாயகனாக விருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரியதுவென்பதை எல்லா தேசமும் ஒத்துக்கொள்ளுகிறது. ராஜாங்க சட்டங்களும் விரோதிக்கவில்லை. கடவுள் சொன்னதாகச் சொல்லப்படும் எல்லா சமயங்களிலும் தள்ளவில்லை ஆனால் நமது நாட்டில் அவ்வுரிமை நூல்வசனங்களாலும், பழமொழிகளினாலும், கிரியைச் சடங்குகளினாலும் மறுக்கப்பட்டிருக்கிறது. அநேக காலமாக தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதரை மனிதன் கீழ்படுத்தி அவமதிக்கும்படிச் செய்துவிட்டார்கள். இதையெல்லாம் கண்ட ஆங்கிலேய அதிகாரிகள் தங்கள் வாழ்க்கையில் ஒருமுகம் கச்சேரிமுத்திரை மற்றொருமுகம் இன்பமுத்திரை இவற்றோடு ஒட்டவிருந்து ராஜ்ஜியத்திலும், வியாபாரத்திலும் நன்கு ஸ்திரப்பட்ட மேன்மையின் சுகங்களை அனுபவித்துக்கொண்டு வருகிறார்கள், இவைகள் என்றுமிருக்கவேண்டுமென்றும் நினைக்கிறார்கள். சுயசித்தையும் சுயகாரியமும் நமக்குதவாதென்றும் ராஜ்ஜியத்தை ஒழுங்குபடுத்தி ஆளுவதில் நாம் பழகவில்லை என்றும் சொல்லிவந்தார்கள், அவர்கள்கூட இப்பொழுது மனித ஜாதியை அவமானப்படுத்தி அதற்கெதிரே பொய்த் தேசாபிமான காவத்தை துயாமல் நிருத்துவதனால் ஆபத்தும் துன்பமுமேயல்லாமல் இன்பமில்லைஎன்று கண்டறிந்ததினாலும் நியாயம் உண்மை விடுதலை என்கிற வைகளை நம்புகிறவர்களானதினாலும் நமது நாட்டிற்கு வேண்டிய அளவு நம் காரியத்தை நமக்கேவிட்டுவிட இசைந்திருக்கிறார்கள்.

அவர்களால் விடுவதைப் பகிர்ந்தெடுக்கும் வழக்கில் நீங்களும் சேர்ந்தவர்

(தொடர்ச்சி 22ம் பக்கம் பார்க்க)

பெண் மக்களும் சுதேச சமஸ்தானங்களும்.

(திருமதி S. நீலாவதி.)

உலக உற்பத்தியில் முக்காலே மூன்றுவீசம் பங்கெடுப்பவர்கள் பெண்களேயென்பதும், மக்கள் அபிவிருத்தி, ஆண், பெண் இரு பாலர் தம் கூட்டுறவாலேயென்பதும், ஆணின்றிப்பெண்ணோ, பெண்ணின்றிஆணோ உலகில் ஜனிப்பது கிடையாதென்பதும், எவரும் மறுக்க முடியாத, மறைக்க முடியாததோர் உண்மையாகும். இரு பாலர் ஒற்றுமையால் உதிக்கும் இரு பொருள்களில், ஒன்று உயர்ந்ததாகவும், ஒன்று தாழ்ந்ததாகவும் கொள்ளப்படும் மதியை, எவ்வித அலங்கார மொழிகளால் வாழ்த்துவதென்பதை அறியாமல் தவிக்கின்றேம். உயர்ந்தது இன்றித்தாழ்ந்ததும், தாழ்ந்தது இன்றி உயர்ந்ததும், உண்டாக வழியில்லாதிருக்கும் போது ஏன் பேதங்காட்டிப்பிரித்து வாழவேண்டுமென்பது தான் எனது கேள்வி. இரு கைகள் இருப்பதில், ஒன்றை உயர்வாய் மதித்தும், மற்றதைத்தாழ்வாய் நினைத்தும், ஒன்றை அணிகலன்கள் இட்டு அலங்கரித்து, அடுத்ததை ஆபாசப்படுத்திக்கெடுக்கின்றோமில்லையே! அங்ஙனமிருக்க மக்களாய்ப் பிறந்த பெண்பாலரை மட்டும் கேவலம் கால் தூசிக்குச்சமமாய் மதிக்கப்படுவதேனோ? ஒன்றை அடக்கி, ஒன்று வாழப்பார்ப்பது, உருப்படியாகி முன்னுக்கு வருவதற்குத்தானா? அல்லது குட்டிச்சுவராகி, மட்டமாகி, மறைவதற்கா? என்றே கேட்கிறேன். ஆணும் பெண்ணும் சரி நிகரெனக்கொள்வதால் அறிவிலோங்கி, வீரம் நிறைந்து இவ்வையந்தழைக்குமா? அன்றி, ஆணும், பெண்ணும் பேதமெனக்கொண்டு, கீழ் மேல் காட்டிவாழ்வதால், அறிவில்ஓங்கி இவ்வையந்தழைக்குமா? என்பதை யோசித்துப்பார்க்கும்படி, அறியாமையால் அடாதுபேசித்திரியும், ஆண்மக்களின் பொறுப்பிற்கே விட்டுவிடுகிறேன். நிற்க,

இந்தியாவில் பெண்கள் நிலை.

நமது இந்தியாவில் பெண்களின் நிலை பெரிதும் பரிதாபப்படக்கூடியதாகும். ஆறறிவு படைத்த மக்கள் கூட்டத்தில் பிறந்தும், விலங்கினத்தோடு பெண் மக்களை சேர்க்கப்பட்டது எவ்வளவு தூரம் விசனிக்கத் தக்கதென்பதை அறிவுடையோரே ஆராய்ந்துபார்க்கட்டும். இந்தியாவில் தீண்டப்படாதார் என்போர்களின் நிலை எவ்வளவு மோசமோ, அதைவிடப்பன்மடங்கு மோசமானது பெண்கள் நிலையாகும். தீண்டப்படாதார் நிலையளவு பெண்மக்கள் நிலை யில்லையென சிலர் வாதாட முன் வரலாம். அது தவறு எனவே நான் ரூபிக்கத்தயாராயிருக்கிறேன். தாழ்த்தப் பட்டோர்தெருவில் நடக்க உரிமையில்லாதவர்களாக எவ்வாறு கருதப்படுகின்றார்களோ, அவ்வாறே பெண் மக்களும் வெளியில் வரக்கூடாதவர் களாகத் தடுக்கப்பட்டிருக்கின்றார்கள். தாழ்த்தப்பட்ட மக்கள் சில பொருள்களை, அநுபவிக்கக்கூடாதவர்கள் என்பது போலவே, பெண் மக்களும் குறிப்பிட்ட சில பொருள்களை அநுபவிக்க உரிமையில்லையென மறுக்கப்பட்டிருக்கின்றது. தாழ்த்தப்பட்டசமூகம், கல்விகற்க, அறுகதையுடையதல்லவென ஒதுக்கப்பட்டது போலவே, பெண்கள் சமூகத்தையும், படிக்க பாக்கியமில்லாதமென தள்ளப்பட்டு, நடை முறையில் அக்கொள்கை அநேகநாட்களாக அனுஷ்டிக்கப்பட்டும் வருகின்றது. தீண்டப்படாதார் நிழல் மேலே படுவதும், பாவம், என்பதற்குத்துணையாக பெண் மக்கள் முகத்தில் விழிப்பதும் பாவம், என்று, மகாப்பெரியஞானிகள், வீடுபேற்றை (மோட்சமென்றும், மோச உலகத்தை மதியின்றி நம்பித்திரிந்த மடையர்கள்) விரும்பி நின்றவீரர்கள், தாம்பாடிய கவிகளில் தெளிவுற விளக்கி விட்டார்கள். தாழ்த்தப்பட்டமக்கள் எவ்வாறு எக்காலமும் அடிமைகளாயிருக்கப்பிறந்தவர்கள் என சொல்லப்படுகின்றதோ, அவ்வாறே பெண் மக்களும் சாகும் வரை ஆண் மக்களுக்கு அடிமை களாயிருக்கப்படைக்கப் பட்டவர்கள் என்று கூறப்பட்டு, அதன்படியே அமுலில், அச்சட்டம் செலாவணியாகி வருகின்றது. தீண்டப்படாதார் தம் கடன், கால் வயற்றுக்கஞ்சிக்குப்பொழுதெல்லாம் கடின உழைப்பு உழைத்திடலேயென எப்படிசட்டமிருக்கின்றதோ அப்படியே, பெண்மக்கள் கடனும், அடுப்பூதுதலே யென்று, அறையப்படுகின்றது. இன்னும் விவரித்துகொண்டே போனாலும், தாராசுதட்டுகள் மட்டும் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்வாய்ப்போகவேபோகாது. போகக்காரணமில்லை இது தான்ஒன்றுக்கொன்று "உங்களப்பன் இளைத்தவனா? எங்களப்பன் இளைத்தவனா?" என்றிருக்கின்றதே? அப்புறம் எது உயர்விற்கும், மட்டத்திற்கும் வரப்போகின்றது? அன்பிற்குறிய வாசகர்களே! இது காறும்கூறிவந்ததிலிருந்து, இந்தியாவில், இந்து மதத்தில், தீண்டப் படாதவர்களென் போர்களும், பெண் மக்களும், ஒரேவிதத்தில், ஒரேவித சட்டத்தின் கீழ் ஒரேவித சமத்துவமாக நடத்தப் படுகின்றார்களென்பதுத் தெள்ளிதிற்புலனாகின்றதல்லவா? எனவே புண்ணிய பூமியாகிய நம்மிந்தியாவில் குறிப்பிட்ட இரு சமூகங்களும் ஒரே மாதிரியான கொடுமைகளையே அனுபவித்து வருகின்றதென்பதில் எவருக்கும் ஆட்சேபமிருக்க நியாயமில்லையே? நம்மிந்தியா நாட்டின் முன்னேற்றம் இவ்விரு சமூகங்களின் முன்னேற்றமேயென்பதை எண்டுசுட்டிக்காட்ட விரும்புகின்றேன். நிற்க, மற்ற மேல்நாடுகளென்று சொல்லப்படும் தேசங்களில் பெண்கள் நிலை சகல விதத்திலும்உயர்வடைந்துவிட்டது. அந்தோ! பாழும் இந்தியாவில் பெண்கள் நிலை இன்னும் அடிக்கும் புழுவையே ஒத்திருக்கிறது. எவ்வித உரிமையுமில்லை. எவ்வித சுதந்தரமுமில்லை. எக்காலும் அடிமைகள் என்றும் மிருகங்களிலும் தாழ்வாய் வாழவேண்டியவர்கள். ஐயோ! இவ்வநியாயம் என்று ஒழியும்? வயற்றுச்சோற்றினிமித்தம்மண்டை மடியுமளவும்மூவருக்கு,(தகப்பன் புருஷன் பிள்ளை) அடிமைப்பட்டிருக்கவேண்டிய அதிக்கிரமக்கொடுமையை என்னென்றுக் கூறுவேன்? எவ்விதம் எடுத்துரைப்பேன்? எத்தனைவிதத்தில் கொடுமைப்படுத்தப்படுகின்றார்கள்? இந்தியாவில்உதித்திட்ட எந்த புண்ணியவானுக்கும் நெஞ்சில் எள்ளளவுஈரங்கூட இல்லாது போயிற்றன்றோ?

மதமும் சட்டங்களும்.

நிற்க, மதத்தையும் சட்டங்களையும் எடுத்துக்கொள்ளுவோம். மதம் என்பது ஆதியாகவும், சட்டங்கள் அதனோடுபிணைக்கப்பட்டும் இருக்கின்றது. மதம்என்ன கட்டளையிட்டதோ, அதையொட்டியே சட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. சட்டங்களை அசைக்குங்கால், அதன் அடிவேரான மதமும் ஆட்டங்கொடுக்கின்றது. மதத்தை ஒட்டி நிற்கும், சாதி, சாஸ்திரம் சட்டம், இவைகளை நாம் தொட்டுப்பார்க்கும் போது தான், வைதீர்கள், மத வெறியர்கள், 'மதம்போச்' சென்னும் கூச்சலைக்கிளப்புகின்றார்கள். மதம், சட்டம், முதலியது மக்கள் நலத்திலே நாட்டம் செலுத்துவதானால் அதைப்பற்றி விவகாரம் ஒன்றும் கிடையாது. அப்படிக்கில்லாமல் மனிதஉரிமைகளை பாதித்துமக்களில் ஒரு கூட்டத்தாருக்கு, மற்றொரு கூட்டத்தார், என்றும் அடிமை களாயிருக்கச்செய்யும், ஒருமதம், ஒருசட்டம், எவ்வளவுகொடுமையானது; அநீதியானது; என்பதைப்பொது மக்களே யோசித்துப்பார்க்கட்டும். மக்களை என்றும் மிருகப்பிராயத்தில் அழுந்தச்செய்யும், ஒரு மதத்தையும், சட்டத்தையும், இன்னும் எத்தனை நாட்களுக்குத்தான் கட்டிக் கொண்டழுவது? என்று தான் கேட்கிறேன். இத்தனை காலம் கட்டியழுததில், கடுகளவேனும் நன்மைகண்டோமா? விஷயத்தை அறியாமல் சிறியசீர்திருத்தக்காரர்கள், மதத்தை அழிக்கவேண்டியதில்லை. சீர்திருத்திவிடலாம். சீர்திருத்த முடியும், மதத்திலுள்ள சில்லரை ஊழல்களை முன்னிட்டு அதனை அடியோடு ஒழிக்கவேண்டுமெனக் கூறுவது தவறு! தவறு!! அது முடியாத காரியம் என்று கர்ஜிக்கின்றார்கள். அவர்தம் விருப்பப்படியே பார்த்தாலும் எத்தனை நாட்களுக்குத்தான் சீர்திருத்துவது? எவ்வளவு காலத்திற்குத்தான் சீர்திருத்தப்படும். சீர்திருத்தப்படும் என்று வாயைப்பிளந்துகொண்டு காத்திருப்பது? சீர்திருத்த வேண்டும் என்ற எண்ணம் தோன்றித்தான் எத்தனை வருடமாகிறது? ஒரு நெல்லின் மூக்களவு சீர்திருத்தங்கூட இதுகாறும் ஏற்பட்டதாகத் தெரியவில்லையே? ஒரு சாரதா சட்டம் படுகிறபாட்டைப் பார்த்தீர்களா? அதிலும் ஒரேயடியாய் அழிக்கவேண்டுமென்று புரப்பட்ட பின்னர் தானே, ஓரளவு சீர்திருத்தி

[தொடர்ச்சி 21ம் பக்கம் பார்க்க]

தற்கால காக்ஷி.

(தமிழன்)

தமிழ்நாடு, தெலுங்குநாடு, இரண்டிலும், பிராமண ஜாதிக்கு துணை நின்ற பிராமண ஜாதியை மேன்மையும், பெருமையும் படுத்தி கீழ் போக முடியாமலும், மேலும் செல்ல முடியாமலும் பரதவிக்கும் கூட்டங்கள் தமிழ்நாட்டில் சைவர்கள், தெலுங்கு நாட்டில் கோமுட்டிகள் ஜாதிகளும் ஆவார்கள். இம்மக்களைப்போல் இந்தியாவில் இதர பிரதேசத்திலும் துணையில்லாமல் இல்லை இச்சாதிகள் நம் நாட்டிற்குக்கோடாலிக்காம்புகளாயிருக்கின்றனர். அச்சாதியைப்பற்றி முதலில் குடி அரசு பத்திரிகை. தன் முழுபலத்தினுல் தாக்கி உடைத்து எறிய முயன்று வருகின்றது. ஆனுல் அநேக இடையூறுகள் உண்டாகாமல் ஒருகாரியம்முடியுமா? குடி அரசுக்கு மறுப்பு கூற கிளம்பியது ஆஸ்திக சங்கம். குடி அரசு சொல்லது போல் அடிக்க, அடிக்க பந்து மேல் கிளம்பும்: எதிரி ஏற்பட, ஏற்பட, பொது மக்களுக்கு நன்மை தீமையை அறிந்து கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைக்கின்றது. எக்காரியத்தை எடுப்பினும் அதில் பிரயாசை இல்லாமல் முடியுமா? பிரயாசையால் எடுக்கப்பட்டது நன்மையானுலும்கவலைஇல்லை, தீமையானுலும் கவலை இல்லை, பிறர் அவதூருக்கும் கவலை இல்லை. மனச்சாக்ஷி எதைப் பொதுவாக விரோதமில்லாமல் நன்மை என்று கோறி செய்யச்சொல்லுகின்றதோ: அதை எவன் செய்கின்றுனே அவனே பர உபகாரி: தயாளு, அமமாதிரி திருவாளர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தன் அநுபோகம் காங்கிரஸிலும், மற்ற இடங்களில் கண்டதை கோடாலிக்காம்பாயிருக்கும் ஜாதியை தற்போது உடைத்தெறிய தம் பெருமுயற்சியால் மேல் கண்ட ஜாதி மக்கள் கண்மூடிகளாயிருக்கிருர்கள்: கண்களை விழித்துக் கொள்ளச் சொல்லுகின்றுர் வைக்கம்வீரர். அவர்களில் சில மக்கள் அயர்ந்து தூங்குகிறுர்கள். அப்படிப்பட்டவர்களில் சிலர், ஒன்று இரண்டு சத்தத்தால் விழிப்பார்கள். சிலர் வேண்டு மென்று படுக்கை விட்டு எழுந்திருக்ககூடாது என்பவர்கள் எத்தனை சத்தம்செய்தாலும்:எழுந்து என்ன என்றுகேழ்க்கமாட்டார்கள். அது போல், எம்மாதிரி உலகம் நடந்து கொண்டிருக்கிறது என்று கொஞ்சம்.விழித்துப்பார்ப்பார்களானுல் அப்போது உண்மை தெரிய வரும். இல்லாமல் போனுல். எவனே வெயிலில் வாடி, வதங்கி, அரைக்கால் வயிற்றுக்குக்கூட கஞ்சிக்கு, இல்லாமல்பிராணனை விடும்கூட்டம், கஷ்டப்பட இருக்க, நாம் என் விழித்துப்பார்க்கவேண்டுமென்று நினைப்பார்களேயானுல் அதைவிட மதியீனம் வேறுஉண்டோ!!

தற்காலம் காங்கிரஸின் பெயரால் சில மக்கள் அந்நிய நாட்டுத்துணியை வாங்கக்கூடாது என்கிறுர்கள். டவுன்களில் கடைக்கு, கடை, தொண்டர்கள் (ஆண், பெண்) போய் உட்கார்ந்து கொண்டு, ஐயா, அன்னிய நாட்டுத்துணியைவாங்காதீர்கள் என்று நமஸ்கரித்து, கதர் துணியை வாங்குங்கள் என்று சத்தியாகிரகம் செய்கின்றோம், என பல வித பறை சாற்றுகின்றுர்கள். எளிய வியாபார கூட்டத்தில் பிராமணரல்லாத மக்களே பெரும்பாலும் உள்ளவர்கள். அவர்கள் கண்ணில் மண்ணைப்போட ஆரம்பித்து இருக்கிருர்கள். அவர்கள் அதை துடைத்து விழிப்பார்களா? அல்லது அதனுல் கண்கள் மூடப்படுமா என்பதுதான் கேள்வி? எவ்விதத்திலும் அவர்கள் கண்கள் மூடப்படுமென்று தான் என்னுடைய தாழ்மையான அபிப்பிராயம். எப்படியெனில் இச் சத்தியாக்கிரகிகள் எத்தனை விதமான தீர்மானங்களை காங்கிரஸில் ஏற்பட்டிருப்பினும், அதில் ஒன்றிலாவது அவ்வளவு சிரமம் எடுத்துக்கொள்ளவில்லை. வியாபாரத்தில் தான் நடுத்தர மனிதர்கள் உள்ள இடம்; அவர்களுக்கு சரியான படிப்பும் இல்லை, மேல் போவதற்கும் வழியில்லை; கீழ் செல்வதற்கும் மார்க்கமில்லை. சூரியவெப்பத்தில் வெந்து வாடி, வதங்கி வத்தலாய் போய்விடுவோம் என்ற பயம், என்செய்வார்! பரிதாபநிலை!! இச்சத்தியாக்கிரகிகள் தங்கள் ஆன்மசக்தியிலோ, மனவலிமையிலோ, தெய்வத்தன்மையிலோ, ஏசுகிறுஸ்துமேல் நாட்டிற்கு அவதரித்ததுபோல் இந்தியாவிற்கு அவதரித்த சாதுவாகவோ, இருப்பார்களானுல் முதலில் ஆங்கில பாஷை படித்த கூட்டத்தாரிடம் சென்று அநேக ஆயிரம் நமஸ்காரம் செய்து, தாங்கள் இனி ஆங்கில அரசாங்கத்தின் உதவியை எதிர் பார்ப்பீர்களானுல், மானிடவர்க்கத்திற்குக் கேடு சூழ்ந்தவர்கள் ஆவீர்களென்று சொல்லுவார்களா? கள்ளுக் கடை மறியல் செய்யப்படுமிடங்களில் காப்பிக்கடை மறியல் செய்யப்படுகின்றதா? பார்ப்பனரல்லாதார் எந்த வழிகளில் கெட்டுப்போக முடியுமோ அந்த வழிகளில் காங்கிரசைத் தங்கள் வசப்படுத்தி வருகின்றுர்கள். கள்ளு எவ்வளவு உடம்பிற்கு நன்மையோ, அதைவிடக் காப்பி மேலானது அல்ல. காப்பியில் உள்ளது நீரோகம், தலைவலி. கள்ளில் அவை கிடையா. அளவுக்கு மிஞ்சினுல் மயக்கமும், தெருவில் விழுந்து புரளும்படி ஏற்படுகிறது. பார்ப்பனர்கள் செய்யும் வியாபாரத்தில் எங்கேயாவது மறியலால் குறைவதற்கு ஏற்படுகின்றதா? அவர்களிடம் சத்தியாக்கிரகம் செய்யப்படுமானுல் அதற்கு காது கொடுத்து கேட்போர் உண்டா? வேலை இல்லாத மனிதர்கள் என்று வாய்கூசாது சொல்லத் தயங்கமாட்டார்கள் இச்சத்தியாக்கிரகக் கூட்டத்தில் உள்ளவர்கள் யார் என்று கணக்கு எடுக்கப்படுமானுல் அக்கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவருக்கும், சொந்தகாரர் ஒருவர் சர்க்கார் உத்தியோகத்தில் இல்லாமல் இருக்கமாட்டார்கள். இவர்கள் ஒரு பக்கம் பொது ஜனங்களை ஆவேசம் உண்டு பண்ணபேசி, பேசியபடி நடக்கவும்செய்து அரசாங்கத்தாரிடம் தன் சொந்தகாரர் மூலமாய் ஏதோ ஊரில் விபத்து ஏற்பட்டு விட்டதாக சித்திர பேதம் செய்து, அரசாங்கத்தார் அதை அடக்க தங்கள் ஆயுத பலத்தால் ஏற்பாடு செய்வார்கள். இப்படி பொது ஜனங்களுக்கு எவ்விதத்திலும், நன்மை இல்லை. ஆனுல் தீமைக்கும் குறைந்தபாடில்லை; ஆவேச பேச்சைக்கேட்ட மக்கள், படிப்பு இல்லாமையால் வஞ்சனையையும் அறியாமல், அரசாங்க தடிஅடிக்கும், துப்பாக்கிக் குண்டுக்கும் இரையாகவும் நேரிடுகிறது.

தீண்டாமையை விலக்கி சகோதர பாவமாய் இருக்கவேண்டும் என்று சொல்லுகிற சத்தியாகிரகிகள் எங்கேயாவது இருக்கின்றுர்களா? தேடித்தேடி அலைந்து திரிந்தாலும் அவர்களின் எண்ணிக்கை விரல் விட்டு விடலாம். தேசம் எதனுல் அந்நிய ஆக்ஷிக்கு உட்பட்டது என்று ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளாமலில்லை. நம் மக்களுக்குள் பல் வேறு ஜாதி, பலவிதமான வித்தியாசம, ஒற்றுமைக்குறைவு, இவைகளை எதிரி தெரிந்து, பலக்குறைவினுல் தன் வசப்படுத்தி, ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டு இருக்கிருர்கள் என்று தெரிந்துகொள்ளாமலில்லை.

தமிழ் மக்களே தாங்கள் அந்நிய அரசாங்கத்தை தேசத்தினின்று போய்விடவேண்டுமென்று கேள்கும் காங்கிரஸ்மக்கள், வஞ்சனையான மனநிலையை நன்ருய் ஆராய்ந்து பார்த்து, தீண்டாமையை விலக்கி,நன்மை உண்டாகும் வழியில்; எப்பொழுதும் சுயமரியாதை உள்ள வழியில், ஆலோசித்து நம் சந்ததியார்கள் பிற்காலத்தில் கேவலமாக பேச இடம் கொடாமல் ஆச்சரியப்படும் வழிகளில், சுயமரியாதைக் கொள்கையை நிலைநிறுத்த வேண்டுமாய் அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இஸ்லாம் மார்க்கத்தால் அடிமை விலங்கை நீக்கி சமத்துவம் அடைந்த நற்செய்தி.

அருப்புக்கோட்டை 19—6—31

அன்புள்ள பத்திராதிபர் அவர்களுக்கு வீர. சு. பு. வீரய்யா எழுதியது. இதனடியிற்காணும் விஷயத்தை தயவு செய்து எனக்காக நமது குடி அரசு பத்திரிகையில் பிரசுரம் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

அன்புள்ள சகோதர சகோதரிகளே!

நமது இந்தியாவில் ஜாதி உயர்வு தாழ்வு ஏற்பட்டு, பலமின்றி அடிமைத்தனத்தில் ஆழ்ந்து கிடக்கிறது. பன்றி, நாய், மலம் ஆகியவற்றிலும் கேவலமாய் 7 கோடி மனிதர் சகிக்க முடியாத துன்பத்தில் பல ஆயிர வருஷ காலமாய் அலைந்து திரிகின்றதே. இதன் பலனுலே 150 வருஷகாலமாய் பிரிட்டிஷார் அரசாட்சி ஏற்பட்டு இருப்பதில் நாம் அவர்களிடம் அதிர்ப்திப்பட்டு எதிர்த்துப் போராடுகிறேம். அதற்கும் அந்த பிரிட்டிஷ் அரசாங்கம் இடமும் கொடுத்து வருகிறது. ஜாதி உயர்வு தாழ்வு கொடுமையினுல் அல்லவா நமது இந்திய மக்கள் பலம் குறைந்து 6000 மைல்களுக்கப்பாலுள்ள ஆங்கிலேயர் ஆட்சி ஏற்பட இடம் கொடுத்தது என்பதை நாம் தெரிந்தும் தெரியாதவர்கள் போலவே நடந்து கொள்ளுகிறேம். இனியாவது நாம் ஜாதி உயர்வு தாழ்வு பிரிவினைகளை நீக்கி ஒற்றுமை என்ற கோட்டையை கட்ட இந்துமத ஜாதிப் பிரிவினையும் சமூகக்கட்டுப்பாடும் என்கின்ற முட்டுக்கட்டை இடமளிக்கவில்லையே. ஆகையால் ஜாதி யென்ற பிரிவினைக்கட்டடத்தை அழித்து விடவேண்டுமானுல் இஸ்லாம் மார்க்கம் என்னும் வெடிகுண்டு பாய்ந்தால்தான் இடிபட்டு அழிந்து ஒழிய முடியுமாதலால் இதைத்தவிர அது ஒழிய வேறு மார்க்கமில்லை என்பது எனது அபிப்பிராயம். ஐக்கிய முள்ளதும் மனிதனுக்கு விடுதலை தரக்கூடிய இஸ்லாம் மார்க்கமானது ஒரே கோட்டையாகவும் "வெளிச்சமாயும சுகாதார முறைப்படி" கட்டப்பட்டிருக்கிறது. புழுக்கமுடையதும் நாற்றமுடையதும் வெளிச்சமில்லாததுமான ஜாதி என்னும் கட்டடத்தில் அடைபட்டு கஷ்டப்படுகிற மக்கள் சுகாதார முறைப்படி கட்டப்பட்டிருக்கிற கட்டடத்தில் வாழ்வது தான் சுகமும் சௌகரியமுமாகும். காங்கிரஸ், தீண்டாமை விலக்கு, ஜாதிஉயர்வு தாழ்வு கொடுமை விலக்கு ஆகிய பிரசாரங்கள் செய்தும் முற்போக்குக்கான அடிப்படையான வேலையில் கொஞ்சம்கூட முன்னேற

தொடர்ச்சி 20-ம் பக்கம் பார்க்க

இந்தியாவும் சுய அரசாட்சியும்.

(சி. ச. சுப்பையா)

உலகத்திலுள்ள தேசங்களை பெரும்பாலும் அந்தந்ததேசத்தார்கள் ஆளப்பட்டு வருவதில், இந்தியாதேசம் இந்தியரல்லாத அந்நியநாட்டாரால் ஆளப்பட்டு வரப்படுகிறது.

இப்படி நம்முடைய தேசத்தை அந்நியரால் ஆளப்படுவதில் நம்மில் சிலர் நமக்கு சுய அரசாட்சி வேண்டுமென்றும், சிலர் சுய அரசாட்சி வேண்டியதில்லையென்றும், சிலர் எந்த அரசாட்சியானாலுஞ் சரியென்று சொல்லக்கூடியதாகவுமிருக்கிறது.

இந்தியாவில் மதப்பிரிவுகளும், சாதிப்பிரிவுகளும், இருந்து வருவதினால் இந்தியாவிலுள்ள சகலரும் சமத்துவமாகவும், ஒற்றுமையாகவுமிருந்து முன்னேற்றமான காரியங்களை கவனிக்கக்கூடிய தன்மைகளாக இல்லாமையால் இந்தியாவை இந்தியர்களால் ஆளப்பட்டபோது, பெரும்பாலும் ஜனங்கள் சமத்துவமாகவும், ஒற்றுமையாகவும், வசிக்காமல் விரோதங்களாகவும், சாதிமதசம்பந்தமான தொல்லைகளாகவும், துவேஷங்களாகவும், சண்டைகளாகவும், சச்சரவுகளாகவும், கொள்ளைகளாகவும், கொலைகள் முதலிய காரியங்களாகவுமிருந்து வந்தபடியால் இந்தியாவை ஆங்கிலேயர்களால் எளிதாய் கைப்பற்றி ஆளப்பட்டு வரப்படுகிறது.

இந்தியர்களில் சிலர் கவர்ன்மெண்ட் உத்தியோகத்தையும், மற்றும் மேலான காரியங்களையும் ஏகபோக பாத்தியமாய்க்கைப்பற்றி இராஜபோகத்தை அனுபவித்தும், சிலர் நாய், பன்றி, கழுதை முதலியவைகளுக்கும் கேவலமாய் வைக்கப்பட்டும், குப்பைத்தொட்டிகளில் ஆகாரத்தைக்கிளறிப் பொறுக்கி யெடுத்துப்புசிக்க வகைசெய்யப்பட்டும், மொத்த ஜனங்கள் சுமார் முப்பத்து ஐந்து கோடியில் சுமார் ஏழுகோடி ஜனங்கள் பொதுக்குளங்களிலும், பொதுக்கிணறுகளிலும், பொதுவீதிகளிலும், பொதுச்சாவடிகளிலும், பொதுக்கோவில்களிலும், இன்னும் அநேக வகைகளிலும், பிரவேசிக்கவிடாமல் தடுக்கப்பட்டும்வரப்படுகிறது.

முன்னாளில் திருஞானசம்பந்தர் என்னும் பிராமணருடைய கொள்கைக்கு விரோதமாயிருந்த ஜீவகாருண்யமுள்ள சமணர்களை கழுவில் ஏற்றிக் கொன்றதாகச் சொல்லப்படுவதோடு இப்பொழுது பலவூர்களிலும் நடக்கும் உற்சவங்களில் மேற்படி கதையைப்படிப்பதோடு, கழுவில் போட்டுக்கொன்றமாதிரியாகவுங் காண்பிக்கப்படுகிறது. ஜீவகாருண்யமில்லாத திருஞானசம்பந்தரையும், இப்பொழுது உற்சவங்களில் அந்தக் கதையைப்படிக்கப்படுவதையும், கழுவில் போட்டுக் கொன்றமாதிரிகாண்பிக்கப்படுவதையும்பற்றி பகுத்தறிவுள்ளவர்களின் இரத்தம் கொதிப்படையாமலிருக்கமுடியாது.

ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவிலுள்ள விவரங்களும், பாஷைகளும் பழக்கவழக்கங்களும், நன்றாய் தெரியமாட்டாது. இப்படியிருந்தும் அவர்களை வரவேற்று வேண்டிய உபசாரங்களைச்செய்தும், விவரங்களைச் சொல்லிக்கொடுத்தும், ஒத்தாசையாயிருந்தும் வரப்படுகிறது. இதுவும் நம்மில் முன்னேற்றமடைந்தவர்களின் காரியமாயிருக்கிறதேயொழிய ஆங்கிலேயர்களின் சுய அதிகாரத்தால் இந்தியவில் எதையுஞ் செலுத்திவிடக் கூடியதாயில்லை.

சுமார் இருபது வருஷத்திற்கு முன் சுதேசி ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி என்று ஏற்பட்டிருந்ததைச் சிலர் சுயநலங்கருதி அன்னியநாட்டுக் கப்பல் கம்பெனிக்காரர்களைத் தூண்டியும், அவர்களுக்கு ஒத்தாசையயிருந்தும், பல விதத்தால் சூட்சிகள் செய்து நமது சுதேசி ஸ்டீம்நாவிகேஷன் கம்பெனியைத் தொலைத்துப் போட்டார்கள். இப்பொழுதும் நடந்து வரப்படுகிற இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியை நம்மில் எல்லோரும் ஆதரிப்பதாயில்லை. சிலர் மேற்படி கம்பெனியை ஆதரிக்க வேண்டுமென்று பிரசாரம் செய்கிறார்கள். வேறு சிலர் இதற்கு கூடியமட்டும் விரோதங்களையும், கெடுதல்களையும் செய்வதோடு அன்னியநாட்டுக்கம்பெனிகளுக்கான அனுகூலங்களும், பிரசாரங்களும், மற்றதுகளுஞ் செய்து வருகிறார்கள். இதனால் நமது இந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனியானது இப்பொழுது ஜீவநாதம் குறைந்து வரக்கூடியதாயிருக்கிறது. இதைப்போலவே இந்தியர்களால் உற்பத்தி செய்யப்பட்ட எத்தனையோ கூட்டு வியாபாரங்களும், பாங்குகளும், மில்களும், கைத்தொழில்களிலும், மோசத்தாலும், நாசத்தாலும், சுயநலத்தாலும், சாதிமதத்துவேஷத்தாலும், சண்டையாலும், சச்சரவாலும், கெட்டு நின்றுபோய் இருக்கிறது.

இப்பொழுது நமக்குக்கொடுபட்டிருக்கிற யூனியன், முனிசிபாலிட்டி, கார்ப்பரேஷன், தாலூகா போர்டு ஜில்லா போர்டு முதலானதுகளில் விகாரப்பட்டு கோர்ட்டுகளுக்குப் போகாத எலக்ஷன்கள் பெரும்பாலுங் காண முடியாது. சுபேட்சையான அதிகாரங்களும், நம்பிக்கையில்லாத் தீர்மானங்களும், ஏமாற்றங்களும், அடிதடிகளும், விரோதங்களும், மோசங்களும் நாசங்களும், கோர்ட்டுவிவகாரங்களும் நடந்துவருவதனால் இதுகளிலேயொழிய சகலரும் சமத்துவமாகவும், ஒற்றுமையாகவுமிருந்து நல்லெண்ணத்தோடும், சட்டதிட்டங்களுக்குக்கட்டுப்பட்டும், நடந்துவரக்கூடியது பெரும்பாலுமில்லை.

ஆங்கிலேயரிடம் சுய அரசாட்சி வாங்குவதற்காக படைகளும், ஆயுதங்களும் தயார் செய்யவாவது, யுத்தங்கள் செய்யவாவது, சத்தியாக்கிரகஞ்செய்யவாவது அன்னியநாட்டு ஜவுளி மறியல்கள் செய்யவாவது கள்ளுக்கடை மறியல்கள் செய்யவாவது வேண்டியதுமில்லை. இதுமூலமாய் கஷ்டநஷ்டங்களை அடையவேண்டியதுமில்லை நமக்குள் மதப்பிரிவுகளையும், சாதிப்பிரிவுகளையும், ஒழித்து எல்லோரும் சமத்துவமாய் வாழும்படி செய்து வைக்கப்படுமானால் அன்னியநாட்டார்கள் நம்முடைய அனுமதியில்லாமல் இந்தியாவில் காலைக்கூட வைக்கவேமாட்டார்கள். இதற்கான பிரசாரங்களும், மறியல்களும், சத்தியாக்கிரகங்களும் நடைபெறப்படவில்லையே!

இந்தியாவுக்கு சுயஅரசாட்சி வேண்டுமென்பதாக உப்புசத்தியாக்கிரகமும், அன்னியநாட்டு ஜவுளி மறியல்களும் கள்ளுக்கடை மறியல்களும் செய்யப்பட்டு இதுமூலமாய் பெருங் குழப்பங்களும் அடிதடிகளும், கஷ்டங்களும், நஷ்டங்களும், உண்டாகியதில் கடைசியில் கோர்ட்டுகளில் வசிக்கப்பட்டவர்கள் உப்பைக்காய்ச்சிக்கொள்ளவும், கதரை விற்றுக்கொள்ளவும், அன்னியநாட்டு ஜவுளி மறியல்கள் செய்து கொள்ளவும் சுதந்திரம் கிடைத்தும் இன்னும்வேறு சில கிடைக்கக்கூடியதாகத் தெரிகிறது. கைக்கொண்டும் இப்பொழுது நாட்டின் பலவிடங்களிலும் ஆடம்பரங்களும் ஊர்வலங்களும், கூட்டங்களும், கொண்டாட்டங்களும், பிரார்த்தனைகளும் செய்யப்பட்டு வரப்படுகிறது.

உப்புவரியையும் கள்ளுக்குத்தகையையும், முற்றிலும் எடுத்து விட்ட போதிலும், ஆங்கிலேயர்கள் சுய அரசாட்சியைத்தந்து விட்டபோதிலும், அல்லது அவர்கள் இந்தியாவை விட்டுப்போய் விட்டபோதிலும் இந்தியா மேலான நன்மைகளை அடைந்துவிடுமென்று எதிர்பார்க்கமுடியாது. இந்தியர்களில் வலிமையுள்ளவர்களும், முன்னேற்றம் அடைந்தவர்களும், சகலத்தையும் ஏகபோக பாத்தியமாய் கைப்பற்றிக்கொள்ளவும், அவர்களைச்சார்ந்தார்களுக்கு சலுகைகாட்டவும் இதுமூலமாய் விரோதங்களும், கலகங்களும், சண்டைகளும், அடிதடிகளும், விபசாரங்களும், மோசங்களும், தொல்லைகளும், உண்டாகி சுயமுன்னேற்றமடைந்து அப்பாலும் அன்னியநாட்டார்கள் தான் வந்து நம்மை ஆண்டு ஒழுங்குபடுத்தி மேன்மைக்கு கொண்டுவரவேண்டும்.

அன்னியநாட்டு ஜவுளி மறியல்கள் மூலம் பொது ஜனங்களுக்கு இடைஞ்சல்கள் உண்டானதாகப் போலீஸாரால் தொண்டர்களை அடிக்கப்பட்டதில் சுயராஜியத்திற்காக கிளர்ச்சி செய்யப்படுபவர்களால் எவ்வளவோ கண்டனங்களும், கூட்டங்களும், ஆவலாதிகளும், சட்டசபைகளில், கேள்விகளும், பொதுவிசாரணை செய்யப்பட வேண்டுமென்ற வாதங்களுக்கும் செய்யப்பட்டது.

பாலக்காட்டைச்சேர்ந்த கல்பாத்தியின் வீதிகளானது முனிசிபாலிடியாரின் ஆளுகையிலிருந்து அவர்களால் செப்பனிடப்பட்டும், சுத்தப்படுத்தப்பட்டும், தீயங்கள் ஏற்ற பட்டும் பன்றி, நாய் கழுதை முதலானதுகள் போய் வரப்பட்டும் வரக்கூடியதில் சில வகுப்பார் போகக்கூடாதென்று தடை செய்யப்பட்ட நிமித்தம் மேற்படி தடையை நீக்குவதற்காக ஹைகோர்ட்டு வக்கீல் திரு. இராகவன் அவர்களின் தலைமையின் கீழ் சத்தியாக்கிரகஞ் செய்யப்பட்டதில் சாதிபித்தமும் வெறியும் பிடித்தவர்களால் திரு. இராகவன் அவர்கள் அடிக்கப்பட்டுஞ் சாக்கடையில் தள்ளவும்பட்டார். இதுவிஷயமாய் சுயராஜியத்திற்காக பிரயத்தனங்கள் செய்யக்கூடியவர்கள் கூட்டங்கள் கூடியும் கண்டனத்தீர்மானங்கள் செய்தும் சட்டசபைகளில் கேள்விகள் கேட்டும் பொதுவிசாரணை செய்யும்படி வாதாடினதும் இல்லையே! திரு இராகவன் அவர்கள் பொருள்களைத் திருடுவதற்காவது, கொள்ளையடிப்பதற்காவது, பட்டம், பதவி கிடைக்குமென்ற ஆசையாலாவது கழுத்தில் பூமாலை போட்டு மேளதாளத்தோடு வெகு ஜனத்துடன் ஊர்வலஞ் செய்வார்களென்று தற்காவது சத்தியாக்கிரகஞ் செய்யவில்லை. மனிதர்களிடம் மனிதத்தன்மை யில்லாமைக்காகவே சத்தியாக்கிரகஞ் செய்யப்பட்டது.

சிலர் சுயராஜியங் கிடைத்தால் மனிதர்களுக்குள் சாதி மதத்தொல்லைகளும், ஏமாற்றங்களும், மோசங்களும், நாசங்களும், சிலர் ஏகபோக பாத்தியமாய் அனுபவிப்பதுகளும் இல்லாமல் சமத்துவமும், ஒற்றுமையும், மேலான நோக்கங்களும் உண்டாகி எல்லோரும் இந்தியர்களுடைய கூட்டு வியாபாரத்திற்கும், கைத்தொழில் சாலைகளுக்கும், பாங்குகளுக்கும், மில்லுகளுக்கும், மற்றதுகளுக்கும் இடைஞ்சல்களும், விரோதங்களுஞ் செய்யாமல் ஆதரிக்கக் கூடுமென்றுஞ் சொல்லுகிறார்கள். இது தான் எளியவர்களையும், சிறுபான்மையுள்ளவர்களையும், முன்னேற்றமடையாதவர்களையும், தாழ்த்தப்பட்டவர்களையும் செய்யப்படும் பெரிய ஏமாற்றம். முன்னேற்றமடைந்தவர்களும், வலிமையுள்ளவர்களும் தங்களுடைய சுயநலங்கருதி, இன்னமும் மேன்மைகளை அடையவும் என்பதற்காகவே சுயராஜியங் கேட்கப்படுகி

ரூர்கள். முன்னேற்றம் அடையாதவர்களும் வல்லமையில்லாதவர்களும், சிறுபான்மையுள்ளவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும், இந்தியர்களுடைய தன்மைகளை நன்றாய்த் தெரிந்தவர்களும், தங்களுக்குண்டாகி இருக்கும் கஷ்டங்களுக்காகவும், நஷ்டங்களுக்காகவும், எறும்பு முதல் யானைவரையுள்ள ஜீவன்களுக்கு படி அளக்கும் பெருமான் என்று சொல்லக் கூடியவருக்கு என்ன நாமம் போடலாம் என்பதை முடிவு செய்யக்கூடிய இந்த ஆங்கிலேய அரசாட்சியிலேயே நாயும், கழுதையும், பன்றி முதலானதுகளும் போகக்கூடிய பொதுவீதிகளில் போகக்கூடாதென்று தடைப்படுத்தியதில், இப்படித் தடைப்படுத்தியவர்களும், தடைப் படுத்திய தற்காக தண்டனைகளும், பொதுவிசாரணை செய்வதற்கு பிரயத்தனங்கள் செய்யாதவர்களும இனி அரசாட்சி செய்யப்படுமானால் இன்னமும் தங்களுக்கு அதிகத் தீமைகளும வருப்புச் சச்சரவுகளும், தொல்லைகளும், கெடுதல்களும உண்டாகக்கூடும என்பதற்காகவேதான் அவர்கள் சுயராச்சியம் வேண்டியதில்லையென்று சொல்லுகிறார்கள். எந்த இராசசியமானாலும் சரியென்று சொல்லக்கூடியவர்களைப்பற்றிக் கவனிக்க வேண்டியதில்லை.

முன்னேற்றம் அடையாதவர்களும் சிறுபான்மையுள்ளவர்களும், வல்லமையில்லாதவர்களும், தாழ்த்தப்பட்டவர்களும் சுயராஜியம் வேண்டியதில்லையென்று சொல்லக்கூடியதில் இவர்களுடைய குறைகளைக் கவனிக்கவேண்டியதற்குப் பதிலாக இவர்களைத் தேசதுரோகிகள் என்று சொல்லிவிடுகிறார்கள்.

இப்பேர்ப்பட்டவர்களின் ஆட்சி உண்டாகுமானால் தாழ்த்தப்பட்டவர்களை லோக்கல்போர்டு ரோட்டுகளில் கால்வைத்து நடக்கவும், ரயில் மோட்டார் வண்டிகளில் ஏறிச்செல்லவும் விடமாட்டார்கள் அதோடும் தங்கள் கொள்கைக்கு விரோதமாக இருந்தவர்களையெல்லாம் சீவகாருண்யமில்லாத சுயபாத்திருக்காகச்செய்த மாதிரி கழுவில் போட்டுக் கொன்றும், இதைப்பற்றி உற்சவங்களில் சனங்களுக்கு கதையாகப்படித்துக் காட்டியும், கழுவில் போட்டுக் கொன்ற மாதிரியாகக் காட்டியும் வரக்கூடும் என்றுதான் நினைக்கவேண்டும்.

நமக்கு சுயராஜியம் இல்லாத கிலைமையிலேயே நமக்குள் யாரும் எகபோக பாத்தியங்களாய் அனுபவிக்காமல் எல்லோரும் சமத்துவமாகவும், ஒற்றுமையாகவும் வாழ்வதற்கு வழிகள் செய்யப்படுமானால் இந்த ஆங்கிலேய அரசாட்சியில் நம்முடைய கண்களைப் பிடுங்கிவிடவாவது, தலைமுதலானதுகளை வெட்டிவிடவாவது செய்யப்படமாட்டாது. இதனால் நமக்குள் செய்துகொள்ளவேண்டிய காரியங்களுக்கு சுயராஜியம் வரட்டும் என்று சொல்லுவதற்கு அவசியமேயில்லை.

இந்தியர்களாகிய நம்மில் எல்லோரும் முதலாவது சமத்துவமாய் வாழ்வதற்குப் பிரயத்தனங்கள் செய்ய வேண்டியதுதான் முக்கியமான காரியமாயிருக்கிறது,

அனுப்பபாளையம் வாலிப சங்கம் முதலாவதாண்டுவிழா.

திருப்பூருக்கு அடுத்த அனுப்பபாளையம் வாலிப சங்க முதலாவதாண்டு விழா 20-6-31 தேதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு கோவை உயர்திரு. ஆர். கே. ஷண்முகம் எம். எல். ஏ. அவர்கள் தலைமையில் மாரியம்மன் கோவிலுக்கு முன்புறம் போடப்பட்ட பந்தலில் நடைபெற்றது.

திரு. ஷண்முகம் அவர்கள் கோவையிலிருந்து மோட்டார்வழியே வந்து சேர்ந்தார். திரு. ஈ. வெ. இராமசாமியும், திருமதி ரங்கம்மாளும் ஈரோட்டிலிருந்து ரயில் மார்க்கம திருப்பூருக்கு 3 மணிக்கு வந்தவுடன் ஸ்டேஷனிலேயே திருப்பூர் கனவான்களும் அனுப்பபாளையம் வாலிபர்களும் வரவேற்று அனுப்பபாளையத்திற்கு மோட்டார் பஸ் மூலம் அழைத்துச்சென்றார்கள். அங்கிருந்து திருவாளர்கள் ஷண்முகம், ஈ. வெ. இராமசாமி ரங்கம்மாள் ஆகியவர்களை மேளவாத்தியம்கொம்பு தப்பட்டை ஆகிய வாத்தியங்களுடன் வாசகசாலை பிரசிடெண்டு திரு. குமாரசாமி அவர்கள் வீட்டுக்கு அழைத்துச்சென்றார்கள். வழிநெடுக தோரணங்களும் சுயமரியாதை வாக்கியங்கள் கொண்ட வளைவுகளும் வீதிகள் தோரணம் கட்டப்பட்டிருந்ததுடன் தெருக்களும் அலங்கரிக்கப்பட்டது. திரு. குமாரசாமி அவர்கள் வீட்டில் எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டதுடன் ஒரு புகைப்படமெடுக்கப்பட்டது. பிறகு ஆண்டுவிழா துவக்கப்பட்டது. சுமார் 500 பெண்களுக்கு மேலாகவும் வந்திருந்ததோடு 1000 பேருக்கு மேற்பட்ட ஆண்களும வந்திருந்தார்கள். தீண்டாதவரென்னும் வகுப்பைச்சேர்ந்தவர்களும் அதிகமாகவந்திருந்தார்கள். வந்திருந்தவர்களில் முன்னணியில் இருந்தவர்கள் திருவாளர்கள்:—

திருவாளர்கள் வக்கீல் டி. ஆர். சுந்தரம் பிள்ளை, கோயமுத்தூர் பழனிச்சாமி நாயுடு பி. பி. ஆதர் சேட், கே. ஆர். ஈஸ்வரமூர்த்தி கவுண்டர், கே. வி. வெங்கிடாசலம் பிள்ளை, எம். வி கருப்பண செட்டியார், கேலபாளையம் முத்துக்குமாரசாமி செட்டியார், சௌடைய செட்டியார், வெங்கிட்டப்ப கவுண்டர், துரைசாமி ஐயர், கே. பி. குமாரசாமி கவுண்டர், மானேஜர் எஸ். குப்புசாமி முதலியார், டி. பி. அப்துல்ரசாக் சாயபு, காதர் பேட்டைமணிகார்சயபு, டாக்டர் பி. வி. ரங்கநாதம், முருகநாதம் செட்டியார், கே. குமாரசாமி செட்டியார், வி. பி. ராயப்ப செட்டியார், திருப்பூர், எ. டி. சாமி, நாச்சிமுத்து, முருகநாத கவுண்டர், கே. என். ராமசாமி செட்டியார், எ. பி. இராமய்ய செட்டியார், எம். அப்புசாமி, சைது பாஷா சாயபு, சுந்திரம் ஐயர் முதலிய அநேக கனவான்கள் வந்திருந்தார்கள்.

திரு. ஷண்முகம் அவர்கள் தலைமையில் மகாநாடு ஆரம்பமானதும் வாலிபர்கள் சுயமரியாதைப்பாடல்கள் பாடினார்கள். அனுப்பபாளையம் கிராம பஞ்சாயத்துத் தலைவர் திரு. ஷண்முகம் அவர்களுக்கும் உபசாரப்பத்திரங்கள் வாசித்துக்கொடுத்தார். பிறகு காரியதரிசியவர்களால் சங்க அறிக்கைப்பத்திரம் வாசிக்கப்பட்டது. தலைவர் திரு. ஷண்முகம் அவர்கள் முன்னுரையாகப் பேசியதில் வாலிபர்கள் எழுச்சியைப்பற்றியும் அவர்களது கடமையைப்பற்றியும் சுயமரியாதை இயக்கத்தைப்பற்றியும் தேசீய இயக்கம் என்பதற்கும் சுயமரியாதை இயக்கத்திற்குமுள்ள வித்தியாசத்தைப்பற்றியும் அவைகள் செய்த வேலைகளைப்பற்றியும் செய்ய இருக்கும் வேலைகளைப்பற்றியும் விஸ்தாரமாகப்பேசினார். பிறகு திருமதி ரங்கம்மாள் பெண்கள் சுதந்திரம் என்பதுபற்றியும், விதவைகள் கொடுமை என்பதுபற்றியும், பேசினார்கள். பிறகு திரு ஈ. வெ. இராமசாமி சுயமரியாதை இயக்கம் ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பதுபற்றியும் அது தென்னாட்டு மக்களை எப்படி நடத்திக்கொண்டு போகிறது என்பதுபற்றியும் விஸ்தாரமாய்ப் பேசினார். பிறகு தலைவர் முடிவுரையுடன் ஆண்டு விழா இனிது நடைபெற்றது.

அறிக்கைப்பத்திரமாவது:

இந்த சங்கமானது சென்ற 21-10-29 ல் ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சங்கத்தின் நோக்கம்.

1. ஒற்றுமை.
2. சன்மார்க்கம்.
3. சமூகசீர்திருத்தம்.
4. கிராமசேவை.

ஆகிய இந்நான்கு நோக்கங்களையும் அடிப்படையாக கொண்டு நாளது தேதி வரையுள்ளகாலத்தில் முக்கிய சில வேலைகளை செய்திருக்கிறது இதன் அங்கத்தினர் தொகை 102 ஜாதிமத பேதமின்றி முஸ்லீம்களும் கிருஸ்த்தவர்களும் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள் சகோதரிகள் அங்கத்தினர்களாவதற்கும் சங்கவிதிகள் இடந்தருகின்றன இதுவரையில் 30-கூட்டங்கள் நடைபெற்றன. பலசந்தர்ப்பங்களில் வெளியூர்களிலிருந்து பல முக்கியஸ்தர்களை வரவழைத்து சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டுள்ளன.

சீர்திருத்த முறையில் சில விவாகங்களை பார்ப்பனப்புரோகிதமின்றி இச்சங்க முயற்சியால் நடத்தப்பட்டிருக்கின்றன இதனால் சமூகத்தில் ஏற்படும் எதிர்ப்பு, பரபரப்பு இவைகளையும் பொருட்படுத்தாது நற் தொண்டாற்றி வந்திருக்கிறது விவாகத்தில் தலைவன், தலைவியருக்குள் சுயேச்சை பரவ செய்வதற்கும் இச்சங்கம் முயன்று வருகிறது.

தொழிலாளிகளுக்குள் ஒற்றுமை ஏற்படுத்தும் பொருட்டு தொழிலாளிகள் கூட்டங்கள் பலகூட்டிவைத்தும் அவசியமாகும்போது வேலை மறியல் செய்தும் போதனுமுறையிலும் இச்சங்கம் ஊழியம் செய்துவருகிறது கைத்தொழிலின் பெருமையும் தன்னம்பிக்கையும் சிக்கனமும் விளக்க அறிவுறுத்தி வருகிறது.

இந்த ஊர் கிராமபஞ்சாயத்துடன் ஒத்துழைத்துவருகிறது. பஞ்சாயத்தின் இலவச வாசக புத்தக சாலைகள் இவ்வூருக்கு செவ்வையாய் உபயோகப்படுமாறு செய்தும் சுகாதாரமுறைகளைப்பற்றி எடுத்து சொல்லியும் கிராம ஊழியம் செய்து வருகிறது. கிராம உற்சவாலங்களிலெல்லாம் சாரணத்தொழில் புரிந்து வருகிறது. மது பானமொழிக்கும் முறையிலும் தேசியதைத்தொழில் வளர்ச்சியிலும் தீண்டாமையை ஒழிப்பதிலும் இச்சங்கம் எதிர்த்து வருகிறது இவ்வருடத்தில் இச்சங்கம் செய்த எல்லாச்சேவைகளிலும் அங்கத்தினர்கள் பூரண சாந்தத்துடன் நடந்துகொண்டிருக்கிறார்கள்.

விவேகானந்தா வாசகசாலை கிரபுங்கலம்: வேப்பங்குடி.

இவ்வாசக சாலையின் முதலாவதாண்டு விழா 19-6-31 ல் காரைக்குடி குமரன் ஆசிரியர் திருவாளர் சொ. முருகப்பர் அவர்கள் தலைமையின் கீழ், விழாவிற்கென வாசகசாலைக்கட்டிடத்தின் முன் விநோதமாக அமைத்திருந்த நூதனப்பந்தலில் அன்று மாலை 5-30 மணிக்கு இனிது நடைபெற்றது. அவ்வமயம் பல அன்பர் பல விஷயங்களைப்பற்றிப்பேசிய பின் கூட்டம் கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தேவை.

பொள்ளாச்சி முனிசிபாலிட்டிக்கு ஒரு பி. எ. எல். டி. வேண்டியிருக்கிறது தேவையுள்ளவர்கள் விண்ணப்பித்துக்கொள்ளலாமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

செங்கல்பட்டு.

பிராமணீய மொழிந்த திதி.

செங்கல்பட்டு ஜவுளி வர்த்தகர் கா. மு. இராஜரத்தின முதலியாரவர்களின் பெரிய தாயார் இறந்த இறுதிச்சடங்கை பிராமணரல்லாதாரைக்கொண்டு நடத்தினாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயராஜியமென்பது பார்ப்பன ராஜியம்.

தேசிய பாடல்கள்.

(மயிலை. சீனி. வேங்கடசாமி.)

ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு தேசியக்கொடி இருப்பது போலவே ஒவ்வொரு தேசத்திற்கும் ஒவ்வொரு தேசிய பாடல் உண்டு. ஒவ்வொரு தேசத்தாரும் தத்தம் தேசியக்கொடியைவணங்கி மரியாதை செய்வதுபோலவே தத்தம் தேசிய பாட்டையும மனமகிழ்ந்து பாடுவர். தேசிய பாடல்கள் மக்கள் உள்ளத்தில் தேசபக்தியைத் தட்டி எழுப்பக்கூடிய சக்திவாய்ந்தனவாயிருக்க வேண்டும் God Save the king என்னும் ஆங்கிலப்பாட்டு இங்கிலீஷ்காரரின் தேசிய பாடல் என்றுசொல்லப்படுகிறது. ஆனால் இந்தப் பாட்டில் தேசிய உணர்ச்சியை, தேச பக்தியைஉண்டாக்கக்கூடிய வாசகங்கள் ஒன்றேனும் இல்லை; ஆகவே ஷை ஆங்கில பாட்டை தேசிய பாடல் என்று சொல்லக்கூடாது. அதில் ராஜபக்தியும் ராஜவாழ்த்தும் மட்டும் கூறப்பட்டிருத்தலால் அதனை அரச வாழ்த்து என்று தான் சொல்லவேண்டும்.

ஆஸ்ட்ரியா (Austria) ரொமெனியா (Roumania)ஜப்பான் ஆகிய இத்தேசங்களின் தேசியப்பாட்டு God save the king என்னும் ஆங்கிலப்பாட்டைப போன்று அரச வாழ்த்துமட்டும் கூறுகின்றன.

டச்சுக்காரர்களின் தேசமாகிய ஹாலந்து (Holland) தேசத்தின் தேசியபாட்டு ராஜபக்தியுடன் தேசாபிமானத்தையும் தாக்கூடியது. அதனை இயற்றியவர் அத்தேசத்துக் கவியாகிய ஹெண்ட்ரிக் வான் டோலன்ஸ் (Hendrik Van-Tollens) என்பவர். அவர் அப்பாட்டை 1816ம் வருஷம் இயற்றினர்; 1820ம் வருஷம் ஸ்மிட்ஸ் (Smids)என்பவர் அப்பாட்டுக்குப்பண் வரையறுத்தார். அதுமுதல் அப்பாட்டு தேசியபாடலாக அத்தேசத்தில் பாடப்படுகிறது.

டென்மார்க்கு (Denmark) தேசத்தில் பாடும் தேசிய பாட்டு தேசாபிமானத்தை உண்டாக்கக் கூடியது. அப்பாடல்களில் அத்தேசத்து வீரர்களைப் பற்றிப் புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறது. அப்பாட்டைப்பாடினவர் இன்னரென்று தெரியவில்லை. அது பண்டை நாள் முதல் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. ஆனால், 1775ம் வருஷத்தில் தான் அது தேசியப்பாட்டாக அங்கீகரிக்கப்பட்டு அத்தேசத்தாரால் பாடப்படுகிறது.

இத்தலி (Italy) தேசத்திற்கு (Marcha Rayale) என்றும் (Garibaldi's war hymn) என்றும் இரண்டு தேசியபாடல்கள் உண்டு. காரிபால்டி (Garibaldi) என்பவர் இத்தலி தேசத்தை ஆண்டுவந்த, அன்னிய அரசாங்கத்தைத் தூரத்தியடித்து அத்தேசத்தைச் சுதந்தர நாடாகச்செய்த தேசிய வீரன்; காரிபால்டியின் போர்க்களப்பாட்டில் தேசாபிமானமும் வீரச்சுவையும் மிளிர்கின்றன- இப்பாடல் 1859ம வருஷம் மெர்கண்டினி [Mercantini] என்பவரால் இயற்றப்பட்டது. இப்பாட்டின் முடிவில்,

"நாம் ஜெயிக்கவேண்டும். இது தான் இத்தலி தேசத்தின் ஆணை. ஆகையால் கத்தி எடுத்துச் சண்டை செய்யுங்கள், கத்தி எடுத்துச் சண்டை செய்யுங்கள்" என்னும் பொருள்பட எழுதப்பட்டிருப்பது தேசாபிமானத்தில் ஒருவித ஆவேசத்தை உண்டாக்கக்கூடியதாயிருககிறது

நார்வே (Norway) தேசத்தின் தேசியப்பாட்டு ஐம்பது ஆண்டுகளுக்கு முன் H.A.Bjerregaard என்பவரால் இயற்றப்பட்டது. இப்பாடலில் தேசாபிமானமும் சுதந்தர உணர்ச்சியும் ததும்புகிறது. இப்பாட்டின் பிற்பகுதி தாய்நாட்டைப் பார்த்துச் சொல்லுவோம்.

"(தாய்நாடே இப்பொழுதும் எப்போதும் உன்னுடைய மக்களாகிய நாங்கள் உன்னை அன்புடன் நேசிக்கிறேம்: நீவிரும்பினுல் உனக்காக உயிரையையுங் கோடுப்போம். தாயினும் அன்புமிக்க தாயே! சுதந்திரத்தின் பொருட்டு [பகைவரிடமிருந்து உன்னைக்காக்க நாங்கள் உறுதி கொண்டு சகோதரர்கள் போல ஒற்றுமையாயிருக்கிறேம்"

என்னும் கருத்துப்பட அமைக்கப்பட்டிருக்கிறது.

பெல்ஜிய (Belgium) தேசத்தின் தேசியபாட்டு 1830ம் வருஷம் ஜென்னிவல் (Jeneval)என்பவரால் இயற்றப்பட்டது. அக்காலத்தில் பெல்ஜியம், டச்சுக்காரரால் (ஹாலந்து தேசத்தாரால்) ஆளப்பட்டது. ஆனால், பெல்ஜியர், டச்சுக்காரர் ஆட்சிகளிலிருந்து விலகி சுதந்திரம் பெற ஆவல்கொண்டு டச்சுக்காரரோடு யுத்தம் செய்தார்கள். அவர்கள் தேசியப்போர் செய்த காலத்தில் தான் இப்பாடல் இயற்றப்பட்டு மக்களால் பாடப்பட்டது. இது நான்கு பாட்டுக்களுடையது. முதல் பாட்டில், பெல்ஜியர், டச்சுக்காரருக்கு உட்பட்டிருக்கும வெட்கமான நிலைமையையும் ஆனல் சுதந்திரச்சூரியன் உதயமாயிருப்பதையும் குறிப்பிட்டிருக்கிறது. கடைசி பாட்டு,

"ஓ! பெல்ஜியம்! எங்கள் தாயே; எங்கள் உள்ளத்தையும் தேக பலத்தையும் [உடலையும் உயிரையும்] எப்போதும் உனக்கே அர்ப்பணம் செய்வோமாக! பிற்காலத்துச் சந்ததியர்களாகிய எமது மக்களும் உன்னை என்றும் மறவாதிருக்கும்படி கடவுள் கருணை புரிவாராக! நீளக்காலத்தும் உயர்வும் சிறப்பும் பெற்று என்றும் மாறு ஒற்றுமையோடு நிலைபெற்று வாழ்வாயாக! உன்னுடைய குறிச்சொல் Watchword அரசன் சட்டம், சுதந்தரம் என்பவைகளாயிருப்பதாக!

என்று பொருள் தரும்படி எழுதப்பட்டிருக்கிறது.

ருஷ்யா (Rssia) தேசத்தில் புரட்சி இயக்கம் (Revolution) ஏற்பட்டகாலத்தில், கான்ஸ்டன்டைன் பால்மாண்ட் (Constantine Bolmond என்பவரால் [1919ம் வருஷம் மார்ச்சுமீ"] அத்தேசத்தின் தேசியபாடல் இயற்றப்பட்டது. இப்பாட்டிலும் சுதந்திர உணர்ச்சி ததும்புகிறது.

போர்ச்சுகல் [Portugal] தேசம் 1910ம் வருஷம் குடிஅரசாக மாறிற்று. அக்காலத்தில தான் அதன் தேசியபாட்டு Henrique lopes De Mendonca என்பவரால் இயற்றபபட்டது. இத்தேசியபாடல் மூன்று பாட்டுகளுடையது. ஒவ்வொருபாட்டின் கடைசியும்,

"தரைமீதிருந்தாலும் கடல் மீதிருந்தாலும் சண்டைக்கு ஆயத்தமாக ஆயுதங்களோடு இருங்கள்; ஆயுதங்களோடிருங்கள். நமது நாடு சுதந்திரமடைவதற்காக ஆயுதமெடுங்கள்; ஆயுதமெடுங்கள். பீரங்கிக்கு எதிராக நடவுங்கள் நடவுங்கள் என்று முடிகிறது.

போலந்து (Poland) தேசம் 1831ம் வருஷம் வரையில் ருஷியாவுக்கு அடிமைப்பட்டிருந்தது. 1680ம்—வருஷத்தில் போலந்து ஜனங்களுக்கு சுதந்திர உணர்ச்சி உண்டாகி ருஷியாவுடன் சுதந்திரப் போர் செய்தார்கள். அக்கால முதல் போலந்து தேசத்தின் சுதந்தரப்பாடல் அத்தேசத்தில் பாடப்படுகிறது. இப்பாடலில்,

'போலந்து தேசத்து ஜனங்கள் உயிரோடு இருக்கும் வரையில் போலந்து அன்னியற்கு அடிமையல்ல. அது இழந்தவற்றையெல்லாம் நமது முயற்சி மீட்டுக்கொடுக்கும் நடவுங்கள், நடவுங்கள்; சுதந்திரத்திற்குச் செல்லுவோம் நம்முடைய சங்கிலிகள் உடையுண்டன போலந்து சுதந்திரத்தோடிருக்கட்டும்"

என்னும் பொருள் தொனிக்கின்றது.

சுயமரியாதை திருமணங்கள்.

திருநெல்வேலி கற்பதரு எஸ். முத்துஸ்வாமியவர்களின் சிறிய தகப்பனர் (லேட்) மு. சங்கரலிங்கம் பண்டிதரவர்கள் மகன் திரு. எஸ். கந்தசுவாமி பி. ஏ. க்கும் தூத்துக்குடி பெரிய காட்டன் ரோட்டு ஷாப் அண்ட் ஜெனரல் மெர்ச்செண்ட் க. ரா. முத்தையாப் பண்டிதரவர்கள் இளைய மகள் ஸ்ரீமதி இரங்கம்மாளுக்கும் ,-6-1931 ஞாயிறன்று காலை 6-30 மணிக்கு சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. அவ்வமயம் உயர்திரு டாக்டர் வைகுண்டராம், ரிட்டையர்ட் போலீஸ் இன்ஸ்பெக்டர் எம். பி. நாராயண சுவாமி, மா. க. வேலாயுதம், எஸ். குற்றாலலிங்கம் அவர்களும் டாக்டர் சங்கரசுப்பு முதலிய சுயமரியாதை யன்பர்களும் மற்றும் பல அபிமானிகளும் உறவினர்களும் குழுமியிருந்தனர். அம்மணத்தை முறைமே உயர்திரு ஆர். வி. சொக்கலிங்கம் அவர்கள் பி. ஏ., எம். பி. பி. எஸ். நடத்திவைத்தார்கள். பொதுவாய் அம்மணத்தில் ஆடம்பரங்களும வீண் சடங்குகளுமில்லாமல் சுருக்கமாகவும் வெகு திரத்தத்துடனும தம்பதிகளுக்குள் அவசியமான உருதிமொழிகளும் மாலைமாற்று(மங்கல நாண் பூட்டு) முதலிய சில இன்றியமையாத சில பாகங்களை மட்டும் நடத்திவைத்து காலதாமிதமன்னியில் யாருமட எச்சமய திலும யாருடைய உதவியின்றியும் மணம் நடத்திவைக்கக்கூடிய சுருக்க முறையில நடத்தப்பட்டது. சபையோர்களால் தம்பதிகளை ஆசீர்வதிக்கப பெற்ற பின்னர் ஆர். வி. சொக்கலிங்கமவர்கள் 'நபதுமணம்' என்பதைப்பற்றி சுருக்கமாகவும் உருக்கமாகவும் சொற்பொழிவாற்றி

தொடர்ச்சி 1/ம் பக்கம பார்க்க,

சித்தையன்கோட்டை "மக்கள் விடுதலை சேவை சங்கம்" திறப்புவிழா.

இராமசாமி சொற்பொழிவு.

—:():—

மதுரை ஜில்லா திண்டுக்கல்லுக்கு அடுத்த சித்தையன் கோட்டையில் இம்மாதம் 22 தேதி "மக்கள் விடுதலைச் சங்கம்" என்பதாக ஒரு சங்கம் திறப்புவிழா நடைபெற்றது.

அச்சங்க விழா நடத்த திரு. ஈ. வெ. இராமசாமியும் அவ்விழாவிற்கு தலைமை வகிக்கவோம் திரு. ரா. நாராயணசாமி அவர்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார்கள். மற்றும் அதே சமயம் பல உபன்யாசங்கள் செய்ய திருவாளர்கள் சோளவந்தான் பட்டாபிராமய்யர், சுப்பிரமணியம், வெங்கிடுசாமி அய்யா முதலிய கனவான்களும் கேட்டுக்கொள்ளப்பட்டிருந்தார்கள்.

22 தேதி காலையில் திரு ஈ. வெ. இராமசாமி ஈரோட்டிலிருந்து திண்டுக்கல் ஸ்டேஷனில் வந்திறங்கியதும் திண்டுக்கல் வாலிபர்கள் பலரும் சித்தையன் கோட்டை வாலிபர்கள் பலரும் உடுமலைப்பேட்டை கனகராஜன், சுப்பிரமணியம் ஆகியவர்கள் வரவேற்று தனித்தனியே மாலைகள் சூட்டி நேரே சித்தையன் கோட்டைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு அவ்வூர் பிரபல வியாபாரியும் ரைஸ்மில் சொந்தக்காரருமான திரு சுப்பிரமணியம் செட்டியார் அவர்கள் வீட்டில் ஜாகை ஏற்பாடு செய்து காலை சிற்றுண்டி வகைகள் வழங்கப்பட்டன. ஆண்டு விழா தலைவர் திரு. நாராயணசாமி அவர்களும் முதல் நாளே விஜயம் செய்திருந்தார். சோளவந்தானிலிருந்து திருவாளர்கள் பட்டாபிராமய்யர், சுப்பிரமணியம், வெங்கிடுசாமி அய்யா, வீரணன் முதலியவர்களும் விஜயம் செய்திருந்தார்கள். எல்லோருக்கும் திரு. சுப்பிரமணியம் அவர்கள் வீட்டில் பலமான விருந்து நடைபெற்றது. விருந்தில் சுமார் 150 பேர்கள் வரையில் கலந்து கொண்டார்கள். பிற்பகல் சுமார் 3 மணிக்கு ரைஸ்மில்லிலிருந்து மோட்டார்காரில் பாண்டு வாத்தியங்களுடன் சங்கத்திறப்புவிழா பந்தலுக்கு சுமார் ஆயிரம் பேர்களுக்கு மேலாகவே ஆண்களும் பெண்களும் பின் தொடர ஊர்வலமாக அழைத்துச்சென்றார்கள். ஊர்வலம் வருவதற்கு முன்பே பந்தலில் சுமார் 2000 பேர்கள் வரை ஏற்கனவே கூடி விட்டார்கள். பெண்கள் கூட்டமும் ஆண்களுக்குச் சமமான எண்ணிக்கை கூடியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

மற்றும் அவ்விழாவுக்கு விஜயம் செய்து முன்னணியிலிருந்த கனவான்கள் திருவாளர்கள் பட்டிவீரன்பட்டி ஊ பு அ. சௌந்திரபாண்டியன், பெ. நடராஜன், ஆண்டிப்பட்டி மாரியப்பன், உடுமலைப்பேட்டை கனகராஜன், டாக்டர் பழனியப்ப பிள்ளை, சொக்கலிங்கம், ஜகதீசன், இசால்தார்சாயபு, யூனியன்சேர்மென் நாகப்பநாயக்கர், செகப்பராவுத்தர் சங்கரன், சோளவந்தான், பட்டாபிராமய்யர், சுப்பரமணியமுதலியார், வெங்கிடுசாமி அய்யர், சின்னசாமிபிள்ளை, வி. எஸ். மணி. நாராயணசாமி ஷேக் அப்துல் காதர்ராவுத்தர், முத்துசாமி, நைனார் முகம்மது ராவுத்தர், சின்னசாமி பிள்ளை, உசன்முகம்மது ராவுத்தர் முதலிய பல கனவான்கள் வீற்றிருந்தார்கள். மற்றும் சின்னாளப்பட்டியிலிருந்தும் அக்கம் பக்கத்திலிருந்தும் உற்சவம்போல் திரளான ஜனங்கள் வந்திருந்தார்கள் காங்கிரசுக்குல்லாய் அணிந்திருந்த சில இளைஞர்களும் வந்திருந்தார்கள். சங்கத்தலைவர் திரு. ரு. சு. பரமசிவம் செட்டியார்; உபதலைவர் திரு சி. மு. தே. வீரண்ண செட்டியார், காரியதரிசி திரு இராமலிங்கம் செட்டியார் மற்றும் சுமார் 50. 60, அங்கத்தினர்களும் முக்கியமாக வி எஸ். மணி அவர்களும் ஆண்டுவிழாவுக்கு தீவிரமுயற்சி எடுத்து உழைத்தவர்கள் ஆவார்கள். கூட்டமானது எதிர்பார்த்ததற்கு மேலாகவும், அளவுக்கு மேலாகவும், இருந்தபடியாலும், இதுவே அவ்வூருக்கு இம்மாதிரி முதல் கூட்டமானபடியாலும சுலபத்தில் அமைதியை உண்டாக்க முடியவில்லை என்றாலும். அவ்வூர் சேர்மன் திரு நாகப்பநாயக்கர் முதலியவர்கள் மிகுந்த பிரயாசையெடுத்து திறப்பு விழா நடக்க உதவி செய்தது பாராட்டத்தக்கதாகும். கூட்டம் ஆரம்பமானவுடன் தேவாரம் திரு ரா. நாராயணசாமி அவர்கள் தலைமை வகித்து முகவுரை பேசிய பின் வரவேற்புப்பத்திரம் வாசிக்கப்படும் என்று சொன்னார். திரு வி. எஸ். மணி அவர்களால் திரு. ஈ. வெ. இராமசாமிக்கு ஒருவரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டதும் டாக்டர் பழனியப்ப பிள்ளை அவர்களால் திரு. ரா. நாராயணசாமி அவர்களுக்கு ஒரு வரவேற்புப்பத்திரம் வாசித்துக்கொடுக்கப்பட்டது. பிறகு அக்கிராசனர் அவர்கள் வரவேற்புக்குப் பதிலாகவும், முன்னுரையாகவும் பேசினார்.

அக்கிராசனர் பேசியது.

முதலாவதாக இந்தியாவில் ஜாதிபேதம் இருக்கக்கூடாது. யாவரும் சமத்துவமாய் நடத்தப்படவேண்டும். யாவருக்கும் சமமான கல்வியும், சம சுதந்திரமும், சம இன்பமும், உடையவர்களாக இருக்கும்படி செய்யவேண்டும். நமது இராமசாமியார் இந்த ஊரில் இப்போது 'மக்கள் விடுதலை சங்கம்' என்பதாக ஒரு சங்கம் திறந்து வைக்கப்போகிறார். அது நீடித்து நின்று மக்கள் விடுதலைக்கு உழைக்குமென்று கருதுகிறேன். இந்தச் சமயத்தில் அவர் சொல்லப்போகும் அரிய செய்திகளைக்கேட்க வேண்டுமாய் உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன் என்று சொன்னார். பிறகு திரு. ஈ. வெ. இராமசாமி சங்கத்தைத்திறந்து வைக்கும்போது பேசியதாவது:—

ஈ. வெ. ராமசாமி.

ஆர்வமுள்ள அக்கிராசனாதிபதி அவர்களே! சகோதரிகளே!! சகோதரர்களே!!!

இந்த ஊரில் மக்கள் விடுதலை சேவை சங்கம் என்பதாக ஓர் சங்கம்புதிதாக ஏற்படுத்த புத்தேசித்து, அதைத்திறந்து வைக்க வேண்டுமென என்னை அழைத்ததற்காக நான் நன்றி செலுத்துகின்றேன். இவ்வூர் பிரமுகர்கள் அளித்த வரவேற்புக்கும், வாசித்துக்கொடுத்த உபசாரப்பத்திரப்புகழ் மொழிக்கும் நன்றி செலுத்தக் கடைப்பட்டிருக்கிறேன். அவை எனது தகுதிக்கும், அளவுக்கும் மீறிய வகையில் செய்யப்பட்டிருப்பதால், அவைகளை நான் ஏற்றுக்கொண்டேனென சொல்லுவதற்கு முடியாத நிலைமையிலிருக்கிறேன் இயக்கத்தினிடம் உங்களுக்கிருக்கும் ஆசையால் மெய்மறந்து, அன்பினால் மரியாதை செய்திருக்கிறீர்கள். ஏனெனில், எனக்குப்பொருந்தாததும், மேம்பட்டதுமான வாசகங்கள் வரவேற்புப்பத்திரத்தில் மிகுதியும் காணப்பட்டிருக்கிறது. நமது அக்கிராசனர் உரைத்தது போல் மரியாதை செய்யும் முறையில் அதிகமாகச் செய்யப்பட்டிருக்கிறதென்பதாகவே கருதினாலும் அவ்வார்த்தைகள் எனது கொள்கைகளுக்காதாரமாயிருக்குமென நினைத்து அதன் மூலம் நீங்கள் ஆதரவளிப்பதாய்க்கருதி உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன்.

சகோதரர்களே! இன்று, இங்கு மக்கள் விடுதலைச்சங்கமென்பதை நான் சடங்கு முறையில் திறந்து வைக்க வேண்டியவனாயிருக்கின்றேனேயொழிய, வேறு வகையிலில்லை. ஏனெனில், அது ஏற்கனவே திறந்துதானிருக்கிறது. ஆனால், பொது ஜனங்களுக்கு விளம்பரம் செய்வதற்காக இப்படி ஒரு சந்தர்ப்பம் செய்துகொண்டிருக்கிறீர்களென்றே கருதுகிறேன். அன்றியும், இதைப் பொது ஜனங்கள் தெரிந்து, பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தானிந்தச்சமயம் நானும் சில வார்த்தைகள் சொல்லுகின்றேனேயொழிய வேறில்லை. இதற்காகவே மற்றும் பல பெரியோர்களும் பல அபிப்பிராயங்களை எடுத்துச்சொல்ல இங்கு வந்திருக்கிறார்கள். இச்சங்கத்தின் நன்மையைப்பற்றியும், அவசியத்தைப்பற்றியும் அக்கிராசனரவர்கள் எடுத்துரைத்தார். ஆனாலும், என்னிடமிருந்தும் சில வார்த்தைகளெதிர்பார்க்கிறீர்களென நினைக்கிறேன். இப்பொழுது உங்கள் ஊரில் நிறுவப்பட்டிருக்கும் இச்சங்கத்தால் நீங்கள் ஏராளமான நன்மையையடையக்கூடும். ஆனால் நீங்கள் இச்சங்கத்தை சரியானபடி பயன் படுத்திக்கொள்ளத்தவறுவீர்களாகில், இச்சங்கத்தினால் யாதொரு பிரயோஜனமுமேற்படாதென்றே சொல்லுவேன். அதோடு இந்தக்கிராமத்திய மக்களுக்கு சரியான உணர்ச்சியில்லையெனவும்தான் கருதவேண்டும். இச்சங்கத்தால் மக்களுக்கு அறிவு புகட்டவேண்டுமென்ற நோக்கத்துடன் தான் இவ்வூர் பிரமுகர்கள் முன்வந்து இவ்வளவு பிரபலமாய்இதைத்துடங்கி இருக்கிறார்கள். இச்சங்கமானது இன்று சித்தையன்கோட்டை மக்களுடையதாக விருக்கலாம். நாளை இச்சங்கமே மதுரை ஜில்லா முழுவதிலுமுள்ள மக்களுடையதாகலாம் பிறகு தமிழ்நாடுடையதாக விருக்கலாம். கடைசியாக இந்தியா தேசம் முழுவதும் பரவி உலகமக்களுக்கே அறிவு புகட்டக்கூடியதாகவு மிருக்கலாம். இச்சங்கத்தை இந்த ஒரு கிராமத்துக்கு மட்டுமென்று நினைத்துவிடாதீர்கள். உலகமக்களுக்கே விடுதலை ஸ்தாபனமாக விளங்கவேண்டும் என்று கருதி வேலைசெய்யுங்கள். ஒவ்வொரு நாடும் இவ்வாறு ஒவ்வொரு சங்கங்களை ஸ்தாபித்துத்தான், அந்தந்த நாட்டு மக்களுடைய விடுதலைக்காகப் பாடுபடுகின்றது. நாம் எந்தெந்த வகையில் நமது மக்களை விடுதலை செய்ய முடியுமென்பதை முதலில் யோசித்துப் பார்க்கவேண்டும். அதற்கு ஆதாரமாக மற்ற தேசங்களில் எவ்வாறு பாடுபட்டு மக்கள் விடுதலையடைந்து மேன்மையை அடைந்திருக்கின்றார்களென்பதையும், உணர்ச்சி பெற்றிருக்கின்றார்களென்பதையுமறிந்துதான் நாமும் நமது மக்கள் விடுதலைக்கு வழிதேடவேண்டியவர்களாயிருக்கின்றோம். ஏனெனில் நமக்கு விடுதலை என்பதற்கே இன்னமும் அருத்தம் தெரியாதவர்களாயிருக்கிறோம். இந்த ஊரானது பெரும்பாலும் கைத்தொழிலாளிகள் நிறைந்த ஊராகும். ஆகவே இந்த ஊர் தொழிலாளிகள் எவ்வளவு தூரம் விடுதலை பெற்று எவ்வளவு தூரம் முன்னுக்கு வரவேண்டுமெனபது இந்த ஊர் தொழிலாளிகளைப்பார்த்தே தெரிந்துகொள்ள முடியாது. வெளிநாட்டு நிலையையும் பார்த்தால்தான் விளங்கும். உதாரணமாக இந்தஊர் கைத்தொழிலாளி ஒருவன் தினம் 1-க்கு 4 அணா கூலி கிடைத்தால் போதுமென நினைக்கக்கூடும், ஆனால் மதுரையிலுள்ளவன் எவ்வளவு சம்பாதித்து எப்படி வாழுகின்றான் என்பதையும், மதுரை

திலுள்ளவன் எவ்வளவு சம்பாதித்து எப்படி வாழுகின்றான் என்பதையும் கவனித்துப்பார்த்தால்தான் அவனது நிலை எப்படிப்பட்டது என்பது அவனுக்கு விளங்கும். அதுபோலவே வெளிநாட்டிலும் அதாவது அமெரிக்காகாரன் எப்படி வேலைசெய்து எவ்வளவு சம்பாதிக்கிறான்? ருஷியா காரன் இங்கிலாந்துகாரன் எப்படி சம்பாதித்து எப்படி வாழுகிறான் என்பதையெல்லாம் கவனித்தால்தான் நமது தொழில் எப்படி இருக்கவேண்டும், எதற்கு முயற்சிக்கவேண்டும் என்பதெல்லாம் விளங்கும். ஆனால் நமது தொழிலாளிகளில் அநேகருக்கு ஒன்றுமே தெரியாது. விடுதலையென்றால் என்னவென்றும் தெரியாது. உதாரணமாக ஒரு தோட்டத்தில் வேலை செய்யக்கூடியவன், நாள்தோறும் 12 மணிநேரம் வேலை செய்கின்றான். இன்னொரு தோட்டத்திலே தினம் 10 மணி நேரந்தான் வேலை செய்கிறார்கள். மற்றும் சில தோட்டங்களில் வேலை செய்பவர்கள் 10 மணி நேரம் வேலை செய்தாலும், குடியிருப்பதற்கு ஒரு வீடும் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இன்னும் சில தோட்டங்களில், மனிதர்கள் குறைந்த அளவு வேலை செய்வதுமல்லாமல் சரீரத்தால் அதிகப்பிரயாசை படுதல் இல்லாமல் இயந்திரங்களுமமைக்கப்பட்டிருக்கின்றது. இவைகளையெல்லாம் கவனிக்கக்கூடிய ஒரு தொழிலாளி, தனக்கும் அவ்வாறு உதவியை அளிக்கும்படியாக அதாவது விடுதலை வேண்டுமென கேட்கக்கூடும். ஆகையால் தொழிலாளி என்பவர்களும் அடுத்ததேசங்களைத் திரும்பிப்பார்த்தால்தான் அவர்களுக்கு விடுதலை யின்னதென்பதை அறிந்துகொள்ள முடியும். அதுபோலவேதான் மற்ற மக்களும் மற்றதுறைகளிலும் விடுதலை என்பதை அறிய மற்ற நாடுகளையும் அங்குள்ள மக்கள் நிலைமையையும் உணரமுடியும். இம்மாதிரியான விடுதலை என்பதை நாமடையவேண்டுமானால், அதற்கு நாம் எப்படி உழைக்கவேண்டும்? எந்தெந்தத் துறையில் முன்னேறியிருக்கவேண்டும்? முற்போக்குக்கு எவ்வாறு பாடுபடவேண்டும்? ஆகியவைகளை அவசியம் அறியவேண்டும். மக்கள் விடுதலையடைவதற்குரிய மார்க்கங்கள் எவை என்று யோசித்தால் பல இருக்கின்றன என்பது விளங்கும் பொதுவாக மக்கள் வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அவசியம் வேண்டியிருப்பவைகள் கல்வி செல்வம், தொழில், சமூகசமத்துவம், பெண்கள் சமத்துவம், பெண்கள் விடுதலை ஆகியவைகளிலேயே நமக்கு முதன் முதலாக விடுதலை வேண்டியிருக்கின்றது. மற்ற தேசத்தாருடைய கல்வி செல்வம், தொழில் சமத்துவம், நாகரீகம், விவாகம், விவாகரத்து, ஆகியவைகளுடன் நமது தேசத்தையும் ஒப்பிட்டுப்பார்த்தால் தான், நமது நாட்டின் தன்மை நமக்கு சுலபமாக விளங்கும். அதோடு நமது நிலை இவ்வாறிருப்பதற்குக் காரணமென்ன? என்பதையும் அறிந்து அவைகளினின்று விடுதலையடையும் உபாய மார்க்கங்களைத் தெரிந்து, அதற்கென பாடுபட்டோமானால் நமக்கு நிச்சயமாகவே வெற்றி யேற்படும். ஆகவே சகோதரர்களே! இவ்விஷயங்களில் என்னுடைய புத்திக்கு சரியென்று பட்டதையும், அனுபோகத்துக்கு ஒத்திருக்கக்கூடியவைகள் என்று பட்டவைகளைத் தான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நான் கூறும் விஷயங்களுக்கு ஆட்சேபணையே இல்லையா தென்கின்ற தீர்மானத்தின் மீதாவது, அல்லது ஆட்சேபணையே இல்லையென்ற எண்ணத்தின் மீதாவது நான் உங்களுக்குச் சொல்ல வரவில்லை. நான் கூறுபவைகள் எனக்கு நியாயமாகயிருக்கின்றதென்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். ஆதலால் அதை ஆக்ஷேபிக்க உங்களுக்குப்பூரண உரிமையுண்டு. நீங்கள் என்னுடைய அபிப்பிராயங்களையும் யோசனைகளையும் அறிய ஆவலுள்ளவர்களாயிருக்கின்றீர்கள் என்று நான் உணர்வதினால் எனக்குப்பட்ட உண்மையை உரைக்கவே ஆசைப்படுகின்றேன். அபிப்பிராயபேதங்களுக்குக் கட்டுப்பட்டவனாகவன். ஒருவர் அபிப்பிராயம் மற்றொருவருக்குப் பிடிக்காமலிருப்பது சகஜமேயாகும். ஆனால் அவரவர்களுக்குப் பட்டதை அவரவர்கள் வெளியிட்டு மற்றவர் அதை ஆராய்ந்து பார்ப்பது நியாயமும் அறிவுடைமையுமாகும். மக்கள் பலவித எண்ணங்களையுடையவர்களும், மனோநிலையுடையவர்களுமாவார்கள், நமது எல்லாருடைய எண்ணங்களும் ஒவ்வொரு விஷயங்களில் ஒவ்வொருமாதிரியாயுடையதாக இருக்கும். ஆதலால் என்றும் அறிவு அனுபவம் ஆகியவைகளைக்கொண்டு ஆராய்ச்சி செய்தால்தான், நமக்கு உண்மையை உணர்ந்து தெளிவுற முடியும். இல்லையேல் குழப்பத்தில்தான் இருக்கவேண்டும்.

ஆகவே சகோதரர்களே! நான் சொல்லுவதெல்லாம் எனது சொந்த அபிப்பிராயங்கள் தான் எனது சொல்லுக்கெல்லாம் நானே ஒப்பற்ற ஆணையாளியல்ல. நான் எவ்வித தெய்வத்தன்மையுள்ளவனுமல்ல. அப்படிப் பொருந்திய மகா தீர்க்கதரிசியுமல்ல. ஆகையால் தனி மனிதன் என்கிற முறையில் தான் என்னுடைய அபிப்பிராயங்களையும் நான் பார்த்தும் ஆராய்ச்சிசெய்தும், அனுபவத்தில் அறிந்தது மான வைகளைத்தான் உங்கள் மனத்துக்கு சரியென்று படட்டுமென்று உரைக்கின்றேன் 'ஒருபெரியார் உரைத்துவிட்டார்' என நீங்கள் கருதி, அப்படியே அவைகளை ஏற்றுக்கொண்டு, கண்மூடித்தனமாய் பின்பற்றுவீர்களானால், அப்பொழுது நீங்களும் யாவரும் அடிமைகளேதான். நான் உரைப்பவைகளை நீங்கள் நம்பாவிட்டால், பாவமென்றாவது தோஷமென்றாவது அல்லது நரகத்துக்குத்தான் போவீர்களென்றாவது சொல்லி பயமுறுத்தவில்லை. யாருடைய பேச்சையும் ஆராயாமல் கேட்டுவிடுவோமானால் அப்படியே, நம்பி விட்டோமானால் தான் நாம் இன்று அடிமைகளாகயிருக்கின்றோம். நான் உரைப்பவைகளை ஆராய்ந்து பாருங்கள். உங்களுக்கு அவைகள் உண்மையென தோன்றினால் அவைகளை ஒப்புக்கொள்ளுங்கள். இல்லா விட்டால் தள்ளி விடுங்கள். உண்மையெனப் புலப்படுமாகில் அவைகளை உண்மையென ஒப்புக்கொள்ளுவதில் மட்டும் பிரயோஜனமில்லை. அவைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வந்து அதன்படி நடக்கமுயற்சியுங்கள். எனது சொந்த அனுபோகங்களை நான் அறிந்து உங்களுக்குரைப்பதுதான் என்னுடைய விடுதலை. அவைகளை ஆராய்ந்து அறிந்து அதன்படி நடப்பதுதான் உங்கள் விடுதலை.

கல்வி

தற்காலம் கல்வியானது நமது நாட்டில் மிக்க மோசமான நிலைமையிலிருக்கின்றதென்பதுதான் என்னுடைய அபிப்பிராயமாகும். அரசாங்க அறிக்கைகளின் மூலமாகவும், அரசாங்கம் பிரசுரிக்கப்படும் புள்ளிவிவரங்களின் மூலமாகவும் நமது நாட்டில் படித்த மக்களென்பவர்கள் 100க்கு 10 பெயர்கள் தானிருக்கின்றார்கள். பாக்கியுள்ள 90 பெயர்களும் தற்குறிகளாகத்தானிருக்கின்றார்கள். இவைகளிலும் பிராமணர்களைத்தள்ளி, பிராமணரல்லாதார்களில் 100க்கு எத்தனை படித்தவர்களிருக்கின்றார்களென பார்த்தோமேயானால், அவர்களில் 100க்கு 5 பெயர்களே படித்தவர்கள் இருக்கமாட்டார்கள். நாம் தான் அவ்வளவு மக்களின் கடைசி வரிசையிலிருக்கின்றோம். அரசாங்க அறிக்கையிலும் பார்ப்பனரல்லாதாரில் அநேக ஜாதியார்கள் மிகப் பின்னடைந்திருப்பதால் அவர்களுக்குஎன்று கல்விசம்பளம் குறைத்திருக்கின்றார்கள். பெண்களுக்கு சம்பளமே இல்லை என்று ஏற்பாடு செய்திருக்கிறார்கள். ஆனால் மற்ற நாடுகளில் 100க்கு 50, 60 70 வீதமும் இன்னும் சில நாடுகளில் நமது நாட்டுப் பார்ப்பன சமூகத்தைப்போல 100க்கு 100 மக்களும் படித்தவர்களாகவிருக்கின்றார்கள் நமது நாட்டில் மட்டும் 100க்கு 90 பெயர்கள் தற்குறிகளாயிருப்பதற்குக்காரணமென்ன? அதுவும் பார்ப்பனரல்லாதார் சமூகம் 100க்கு 95ம் தீண்டாதார் சமூகம் 100க்கு $99\frac{3}{4}$ம் பெண்கள் சமூகம் 100க்கு $99\frac{1}{2}$யும் தற்குறிகளாயிருப்பதற்கு காரணம் என்ன? இதற்கு அரசாங்கமா காரணம்? என்பதை யோசித்துப்பாருங்கள். இதற்குக் காரணம் கண்டுபிடிக்க இதுவரை நாம் என்ன செய்திருக்கிறோம்? என்ன செய்கின்றோம்? என்பதை கவனித்துப்பாருங்கள். அரசாங்கம் நமக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவில்லையா? அல்லது அரசாங்கத்தில் பணமில்லையா? அல்லது மக்களுக்கு கல்வி கற்கவேண்டுமென்கிற ஆசையில்லையா? இவைகளையெல்லாம் கவனித்தோமானால் ஏன் மக்கள் கல்வி கற்கவில்லை? என்பதற்குக் காரணம் விளங்கும். சகோதரர்களே! நமது சமூகம் இதற்குமுன் எப்பொழுதாவது கல்வி அறிவுடன் இருந்ததாக சொல்லக்கூடுமா? என்று யோசித்துப்பாருங்கள் அப்பொழுது அதன் உண்மை தெரியும். சர்க்கார் பார்ப்பனர்களுக்குமட்டும் தானா படிப்பு சொல்லிக்கொடுக்கின்றார்கள்? இல்லவே இல்லையே. எல்லோரையும் ஒன்றுபோலத்தானே பாவிக்கிறார்கள். ஆகவே இதிலுள்ள சூக்ஷியை அறிந்தீர்களானால் விடுதலையின் உண்மைத் தத்துவம் விளங்கும். நமது மதத்தின் அப்படிக்கு ஆதிகாலத்திலிருந்தே ஒரு ஜாதிதான் கல்வி கற்கவேண்டுமென சட்டமிட்டிருக்கின்றன. படிக்க ஒரு ஜாதியும், படிப்பு சொல்லிக்கொடுக்க ஒரு ஜாதியும் இருந்துவந்தபோதிலும் இன்னது, இன்னது தான் படிக்கவேண்டுமென்பது மாதிரி திட்டங்களும் ஆகியிருந்தது. இவைகளை நாம் வெளியிலெடுத்துரைத்தால், எல்லாரும் ஒத்துக்கொள்ளுகிறார்கள். ஆட்சேபணை செய்பவர்களெவருமேயில்லை ஒரு தடவை திரு கோகலே அவர்கள் "பெண்களும் படிக்கவேண்டியது மிக்க அவசியமே. ஆனால் அவர்களையும் ஆண்களைப்போல் பள்ளிக்கூடங்களுக்கனுப்ப வேண்டும்" மென பம்பாயில் உரைத்தபொழுது மக்கள் அவரைத் தூஷித்து, இம்சித்து, "கோகலே அயோக்கியன். அவன் இருப்பதற்கே தகுதியில்லை" யெனவு உரைத்தார்களாம். ஆண் மக்களின், நிலைமையைவிட பெண்மக்களின் நிலைமை படிப்பு விஷயத்தில் மிக்க மோசமானதாகவேயிருக்கின்றது. இதிலும் தீண்டாதார் எனப்படுபவர்களின் நிலைமையோ இன்னும் இதைக்காட்டிலும் மிக்க மோசமானதாகவேயிருக்கின்றது. கல்வி மக்களுக்கு அவசியமென்பதை அறிந்து மக்கள் ஒத்துக்கொண்டபோதிலுங்கூட, மேல்ஜாதிக்காரர்கள் என்பவர்கள் மற்றவர்கள் படிக்காமலிருப்பதற்குரிய பல தந்திரங்கள் இன்னமும் செய்துகொண்டுதானிருக்கின்றார்கள். சில இடங்களில் தீண்டப்படாதாருக்கு பள்ளிக்கூடங்களேயில்லை. அப்படி பள்ளிக்கூடங்கள் சிலவிருந்தபோதிலுங்கூட போதுமான உபாத்தியாயர்கள் அப்பள்ளிக்கூடங்களுக்கு அகப்படுவதுமில்லை. அப்படியொருசமயம் பள்ளிக்கூடமும், உபாத்தியாயருமிருந்தபோதிலுங்கூட, தீண்டாதார் மக்கள் சில தெருக்களில் நடந்து, அப்பள்ளிக்கூடங்களுக்குச் செல்ல உரிமையில்லை. அவர்கள் அத்தெருக்களில் நடமாடக்கூடாதென தடுக்கப்படுகின்றார்கள். இவ்வளவு கஷ்டங்களையும் அவர்கள்மீறி, படிக்க ஆரம்பித்தாலோ அவர்கள் படிப்பதற்குப்போதிய பணம் இல்லை அவர்களுக்குப்போதுமான சாப்பாடில்லை. இத்தகைய கஷ்டங்களை நாம் எப்படி நீக்கவேண்டும்? என்று பார்த்தால் நமது சமூகத்திற்கு மதவிஷயத்தில் உள்ள முட்டுக்கட்டைகளை முதலில் நீக்குவதுதான் எல்லோரும் படிக்க முயற்சி செய்வதாகும். மதத்தைக் கப்பற்றிக்கொண்டு எல்லோரும் படிக்கவேண்டுமென்பது அறியாமையேயாகு

ம். ஆதலால் மதக்கட்டுப் பாட்டை ஒழிக்க முதலில் முயற்சிக்கவேண்டும். அவ்வாறு முயற்சிப்பதற்கும் நமக்குத் தைரியம் வேண்டும். அவ்வித தைரியம் நமக்கு ஏற்பட்டால்தான் கல்வி விடுதலையுமேற்படும். இவைகளை விட்டு, 'சரஸ்வதி கடாக்ஷமில்லை, பணமில்லை அரசாங்கத்தார் கல்விகற்பிக்கவில்லை,' என்று சொல்லிக்கொண்டிருந்தால் நாம் விடுதலை அடையத் தகுந்தபுத்தி இல்லாதவர்கள் என்றுதான் சொல்லிக்கொள்ள வேண்டும். ஏனெனில், பிராமணர்களும் இந்த அரசாங்கத்தில் இருந்துகொண்டும் சாதாரண வரும்படியுள்ளவர்களுமாயிருப்பவர்களேயல்லாமல், வேறு அரசாங்கத்தில் உள்ள பெரியபணக்காரர்களல்ல அவர்கள் குமாஸ்தாக்களாகவும், காபிகிளப்புக்காரர்களாகவும், புரோகிதர்களாகவும், தக்ஷிணை வாங்குபவர்களாகவும் சோம்பேறிகளாகவும் இருந்துங்கூட, அவர்களில் 100க்கு 99பெயர் எப்படி வாசிக்கமுடிந்தது என்பதை யோசித்தோமானால் அப்பொழுதுதான் அதன் சூக்ஷம் புலப்படும்—ஆகவே நமது நாட்டில் இப்பொழுது இருந்துவரும் மததர்மங்கள் நடைபெற்றுக்கொண்டிருக்குமானால், சிலரைத்தவிர்த்து பெரும்பாலானமக்கள் படிக்கவேமுடியாது. நமது மததர்மப்படி இன்னின்னவர்கள்தான் கற்றுக்கொடுக்க வேண்டுமெனவுமிருக்கின்றது. அந்த முறையை அஸ்திவாரமாக வைத்தே இன்றைய உபாத்தியாயர்கள் எல்லாம பார்ப்பனர்களாயிருக்கிறார்கள். இவர்களிடத்தில் படிக்கும்பிள்ளைகள் 100க்கு 90பெயர்கள் தலையெடுக்கமுடியாமல்போகின்றது. ஆகையால் இந்த முறைகள் நடைபெறும்படியனுமதித்துக்கொண்டிருப்பதா? அல்லது இவைகளையழிப்பது தான் நமக்கு விடுதலையை அளிக்குமா? என்பதை யோசனை செய்து பாருங்கள்.

செல்வம்.

நமது பொருளாதாரத்துறையை ஆராய்ச்சி செய்தோமானால்தான், நமது நாட்டில் எவ்வளவு செல்வமிருக்கிறதென்பதும், நமது நாடு செல்வமுள்ளநாடா? அல்லது ஏழை நாடா? என்பதும விளங்கும். நமது நாட்டில் உள்ள ஒருவனுடைய சம்பாதனை தினம் ஒன்றுக்கு சராசரி 2-அணாவுக்கும் கொஞ்சம குறைந்ததாயிருக்கின்றது. ஆனால மேல்நாட்டிலோ ஒருவனுக்கு தினம்தோறும் சராசரி ரூ. 2 வரும்படி அகப்படுகின்றது. இவ்வித நிலைமையைநாம்மாற்றவேண்டுமெனஎண்ணி, முயற்சிப்பதே பொருளாதாரவிடுதலையாகும். ஆகையால் இந்த விடுதலைக்கும நாம் எப்படி எந்த முறையில் வேலை செய்யவேண்டியிருக்கின்றதென்பதை யோசனை செய்துபாருங்கள். நம்மிடத்தில்நமக்குப்போதுமானபொருளில்லையா? இல்லாதிருக்குமானால் அதற்குக்காரணமென்ன யென்பவைகளை யோசனை செய்து பாருங்கள். நாம் பொருள் சம்பாதிக்கக் கடவுளைக் கும்பிடுகின்றோமேயொழிய எந்த விதத்தில் பாடுபடவேண்டும்? எதனால் பொருள் கிடைப்பதில்லை? என்றுயோசிப்பதில்லை. நாம் கல்விக்கு எப்படி சரஸ்வதி என்று ஒருபெண் தெய்வத்தை உண்டாக்கி வணங்கி வருகின்றோமோ அதுபோலவேதான் நமது நாட்டு செல்வத்துக்கும் ஒரு பெண் தெய்வமாகிய லக்ஷ்மியை உண்டாக்கி வணங்கிவருகின்றோம். ஆகையால் ஒருவன் தான் ஏழையாகயிருந்தால் தனக்கு 'லக்ஷ்மி கடாக்ஷமில்லை' என சுலபமாக எண்ணிக்கொண்டு லக்ஷ்மி கடாக்ஷத்தை யடைய கையிலுள்ளதையும் கடன் வாங்கியும் செலவு செய்கிறான். பணக்காரனாயிருப்பவனும் தனக்கு 'லக்ஷ்மி கடாக்ஷ' மிருப்பதாக நினைத்துக்கொண்டு அதற்கே தனது சொத்தை செலவு செய்து வருகிறான்.

ஓர் ஏழை ஒரு நாள் முழுவதும் கஷ்டப்படுகிறான். அவன் காலை 6 மணிக்குக் கையில் மண்வெட்டியைப் பிடித்தானானால் பகல் 1 மணிக்குத்தான் கீழே வைக்கிறான். கொஞ்சமேதாகிலும் ஆகாரமுட்கொண்டு அவன் மீண்டும் 1-30மணிக்கு மண்வெட்டியைப்பிடித்தானானால் மாலை 6-30 அல்லது 7 மணிக்குத்தான் கீழே வைக்கின்றான். இவ்வாறு இவன் ஓயாமல் கஷ்டப்பட்டும் இவனுடைய வேலைக்குத்தகுந்த கூலியகப்படுவதில்லை இதற்குக்காரணம் 'கடவுளின் கிருபையில்லை' யெனவும் 'லக்ஷ்மி கடாக்ஷமிருந்தால்தானே முடியு' மென்பதாகவும், 'தனக்கு இந்த வேலையையே செய்து பிழைக்க தலையில் பிரமன் எழுதிவிட்டான்' என்றும்கருதிக்கொண்டு வாழ் நாள் கழிய மணவெட்டியையே நம்பியிருக்கிறான். அதுபோலவே சிறிதும் பாடுபடாமல் ஒருவன் பணக்காரனாயிருக்கின்றானே எனக்கேட்டால் 'லக்ஷ்மிவால்போட்டு விட்டாள்'' என்பதாக சொல்லுகிறான். ஆகவே இந்தஇரண்டுவித நிலைமைக்கும் ஒரே காரணத்தை யுரைக்கின்றார்களேயல்லாமல், நாம் உண்மை அறிய, ஆராய்வதில்லை. மேல் நாட்டுக்காரர்கள் தங்களுடைய அறிவை தினமும் விருத்திசெய்துகொண்டேவருகிறார்கள். பல துறைகளையும் ஆராய்ந்து, பலவித தந்திரங்களால் அத்துறைகளில ஆராய்ச்சிசெய்து மேன்மேலும் முன்னேறிக்கொண்டேயிருக்கிறார்கள். தங்கள் தொழில் முறையை தாங்களாகவே மாற்றுகிறார்கள். ஒரு தொழிலில் இருந்து மற்றதொழிலுக்கு தாராளமாய் பிரவேசிக்கிறார்கள். தங்கள் முன்னேற்றத்திற்கும் பின்னேற்றத்திற்கும் தங்களையே பொறுப்பாளிக் கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள். தலைவிதியையும் நல்ல காலத்தையும் எதிர் பார்த்து சும்மாயிருந்து விடுவதில்லை. உதாரணமாக முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்ட மோட்டாருக்கும், இப்பொழுது கண்டு பிடித்திருக்கப்பட்ட மோட்டாருக்கு முள்ள வித்தியாசங்களை நாம் கவனித்தோமானால், மேல் நாட்டுக்காரன் தொழிலில் முறையில் எவ்வளவுதூரம் முன்னேற்ற மடைந்திருக்கின்றான் என்பது புலப்படாமலிராது.

ஆனால் நாமோ ஆதிகாலத்தில் உண்டாக்கப்பட்ட கட்டை வண்டிகளினின்றும் இன்னும் நாம் சிறிதும் முன்னேற்றமடையாமல் இருக்கின்றோம். வேண்டுமானால் இரும்பு ஆணிகளுக்குப் பதிலாக வெள்ளி முலாம் பூசிய ஆணிகளை உபயோகிப்பதில்மட்டும் முன்னேற்றமடைந்திருக்கின்றோம்.

தொழில்.

தொழிலில் நாம்முன்னேற்றமடையாததற்குக் காரணம் ஆதியில் மக்களை நான்கு வருணங்களாகப் பிரித்து அதாவது பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென நான்கு வருணங்களாகப் பிரித்து 100க்கு 90 பெயர்களடங்கிய ஒரு கூட்டத்தை சூத்திரர்களெனத் தாழ்த்து 'சூத்திரர்களுக்கு வயிற்றுக்கு மட்டும் உண்ணப்போதுமான உணவிருந்தால் அதுவே அவர்களுக்குப் போது'மெனவும் அவர்கள் 'மற்ற மூன்று வருணத்தாருக்கும் தங்களுடைய சரீரத்தால்பாடுபட்டு உழைக்கவேண்டு'மெனவும் எழுதிவைத்துக்கொண்டு அத்தருமங்களின்படி நாம் நடந்துகொள்ளவேண்டுமெனவும் அதனின்று தவறக்கூடாதெனவும் தவறினால் பாபமெனவும் உரைக்கப்பட்டு வந்ததோடு அரசர்களும் இந்த சட்டத்தை காப்பாற்றி வந்ததால் நாம் தொழில் விர்த்தி இல்லாமல் போனதற்குக் காரணமாகும்.

இவ்வித நிலைமையின் பயனாய் பணம் சம்பாதிப்பவர்கள்-சீர்படுபவர்கள் யாரென்பதை யோசித்துப் பாருங்கள். பிராமணர்களுக்கும் க்ஷத்திரியர்களுக்கும் வைசியர்களுக்குமே தான் பணம் மேன்மேலும் சேருமேயல்லாமல் இந்த நிலையில் யார் எவ்வளவு பாடுபட்டாலும் தொழிலாளிகளாகிய "சூத்திரர்''களிடம் ஒருநாளும் பணம் சேராது யென்பதோடு வயிற்றுக்கு வேண்டிய அளவுகூட உணவு கிடைப்பது கஷ்டமாகத்தான் இருக்கும்.

இவ்வித நிலையால்தான் மக்கள் தங்களுடைய முயற்சியில் கவலையற்றவர்களாக யிருந்து கடவுள் மீது பொறுப்பைப்போட்டு அடுத்தஜன்மத்தில் பணக்காரர்களாக பிறப்பதற்குத்தங்கள் குறைந்த வரும்படியுமான பணத்தையும் நேரத்தையும் செலவு செய்ய வேண்டியவர்களா யிருக்கிறார்கள். கடவுள் உணர்ச்சியேதான் அவர்கள் விடுதலை யடைவதைத் தடுத்துக் கொண்டே யிருக்கிறது.

ஆகவே பொருளாதாரத் துறையில் நாம் விடுதலை அடைந்து முன்னேற்றமடைய வேண்டுமானால் நாம் கவலையுள்ளவர்களாகி நம்மை ஏமாற்றி 'சூத்திரர்' களாக்கியவர்களுடன் சண்டை போட்டேதான் தீரவேண்டும். ஆகையால் நாம் அதற்காகக் கவலையில்லாதிருந்தாலும் அக்கட்டுப் பாட்டை ஒழிக்காமலிருந்தாலும் ஒரு நாளும் முன்னேற முடியாது.

'நமது பெரியவர்கள் எப்படி இருந்துவந்தார்களோ அப்படியே இருக்க வேண்டுமேயொழிய புதிய மாதிரியில் நடக்கலாமா?' என்று நாம் கருதிக்கொண்டிராமல் "இரண்டு அணாவிலிருந்து இரண்டு ரூபாய் எவ்வாறு சம்பாதிக்க முடியும்? ஏன் சம்பாதிக்கமுடியாது? மற்றவர்கள் எப்படிச் சம்பாதிக்கிறார்கள்? மற்ற நாட்டிலுள்ளவர்கள் என்ன செய்கிறார்கள்? எப்படிச் சம்பாதிக்கின்றார்கள்?" என்பவைகளை யோசனை செய்து முன்னேறும் மார்க்கங்களை கண்டு பிடித்து அனுஷ்டானத்திலும் அதாவது நடைமுறையிலும் கொண்டு வந்தால் தான் பொருளாதாரத்துறையில் முன்னேற முடியும்.

ஒருவன் இரண்டு மாடுகள் ஒரு வண்டி ஒருமனைவி இருகுழந்தைகளையுடையவனாக இருந்தால் அவன் வண்டியோட்டி சம்பாதிக்கும் பணத்தால் 6பெயர்களைக் காப்பாற்ற வேண்டியவனாக யிருக்கின்றான். இவ்வாறு கஷ்டப்படுவதினின்றும் விடுதலையடைய வேண்டுமானால் இயந்திரங்களினால் எவ்வளவுக் கெவ்வளவு நம்முடைய வேலையைச் சுருக்கிக்கொண்டு குறைந்த நேரத்தில் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக விர்த்தி செய்யமுடியுமோ அவ்வாறு செய்தால் மட்டுந்தான் நாம் விர்த்தியடையமுடியும்.

மானம்.

நமது நாட்டு மக்கள். தங்களுடைய மனிதத்தன்மையை இழந்து விட்டதினால் தான் நமது நாடு இன்று இம்மாதிரியான கேவல நிலைமையிலிருப்பதற்குக் காரணம். ஏனெனில்நமது நாட்டு மக்களில் 100க்கு 3பெயர்கள் உயர்ந்தவர்களெனவும், பூதேவர்களெனவும், பிர்மாவின் முகத்திலிருந்து உற்பத்தியானவர்களெனவும், பிராமணர்களெனவும் கூறப்பட்டு பாக்கியிருக்கப்பட்ட 97பெயர்களும் கீழ் ஜாதி மக்களெனக்கருதப்பட்டு வருகின்றது. இந்த நிலைமை இந்தியாவில் ஊனித்த ஒரு காரணத்தினாலேதான்நமக்குஏற்பட்டது. மற்றநாடுகளில் இவ்விதமான அதாவது நிலைமையை யனுசரித்து கீழ்ஜாதியெனக் கருதப்படுவதில்லை. நமது மக்களுக்கு பாரம்பரியமாகவே மானமில்லை யெனவும், மனிதத்தன்மையே கிடையாதெனவும் கூறுவதற்கு இந்த ஒரு காரணமே போதுமானதென நினைக்கின்றேன். மேலும் நாம் பெண்களை மிக்க இழிவாகவும், கொளரதைக்குறைவாகவும் நடத்துகிறோம், நமக்கு வேலையைச் செய்ய சந்தைக்குச் சென்று மாடுகளை விலைகொடுதது வாங்கி வந்து, வேலை வாங்குவதுபோலவேதான் நாம் பெண்களையும் நடத்திக் கொண்டு வருகின்றோம். 'புருஷன் வெளியில் வேலை செய்தால், பெண் ஜாதி அப்புருஷனுக்கு அடிமையாயிருந்து வீட்டில் வேலை செய்தும், பிள்ளைகளைப்பெற்றும், அவர்களைக்காப்பாற்றுவதுந்தான் பெண்களின் வேலை' யெனவும், கடமை யெனவும்நாம்

தொடர்ச்சி 15-ம பக்கம் பார்க்க

குடி அரசு

ஈரோடு 1931௵ ஜுன்௴ 28௳

இந்து முஸ்லீம்.

இந்த நாட்டில் இந்துக்கள் முஸ்லீம்கள் என்கின்ற இரண்டு சமூகங்களும் பெரும்பான்மையான மக்கள் எண்ணிக்கையுடைய சமூகங்களாகும். ஆனால் அவை இரண்டும் தங்கள் தங்களது நடை உடை ஆச்சாரம் அனுஷ்டானம் ஆகியவைகளில் ஒன்றுக்கொன்று நேர் விரோதமான சமூகங்கள் என்பதோடு உண்மையைப் பேசவேண்டுமானால் இவ்விரு சமூகங்களும் அரசியலிலும் மத விஷயத்திலும் ஒவ்வொருவருடைய இலக்ஷியங்களிலுங்கூட வேறுபட்டதென்று சொல்லும்படியான சமூகங்களாகும்.

உதாரணமாக நடை உடை ஆசார அனுஷ்டானங்களிலுள்ள மாறுபாட்டைப்பற்றி நாம் யாருக்கும் எதுவும் எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை என்று கருதினாலும், 'அரசியல் மதஇயல் இலட்சியங்களில் இருவரும் வேறு பட்டவர்கள் என்பதில் சிலருக்காவது விவரம் தெரியவேண்டியிருக்கலாம். ஆதலால் அதைப் பற்றிக்கவனிப்போம்.

இந்தியாவிலிருக்கும் இந்துக்களில் 1000க்கு998 பெயர்கள்மத உணர்ச்சியின் பயனாகவே மகமதியர்களை வெறுக்கின்றார்கள்என்று சொல்லுவதிலும் அதுபோலவே இந்தியாவின் பெரும் பகுதியில் உள்ள மகமதியர்களில் 1000க்கு 999 பெயர்கள் இந்துக்கள் என்பவர்களை வெறுக்கின்றார்கள் என்பதிலும் யாருக்கும் சந்தேகமிருக்காது. இதில் ஒரு சமயம் எண்ணிக்கைகளில் ஏதாவது ஒரு சிறு அளவு வித்தியாசம் இருந்தால் இருக்கலாமேயொழிய ஒருவரையொருவர் வெறுக்கின்றார்கள் என்கின்ற உண்மையில்வித்தியாசம் இருக்குமென்று யாரும் சொல்ல முடியாதென்றே கூறுவோம்.

ஏனெனில் மகமதியர்களை இந்துக்கள் மிலேச்சர்கள் என்றும், முரடர்கள் என்றும் கருதும்படியாக இந்துமத ஆதாரங்களிலும் இந்தியாவின் சரித்திரங்கள் என்றுசொல்லப்படுபவைகளிலும் காணப்படுவதுடன் இன்றைய உண்மையான இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுபவர்களால் மகமதியர்கள் தொடுவதற்கோ-- உண்பவை தின்பவைகளில் கலந்து கொள்ளுவதற்கோ அருகரற்றவர்கள் என்றே கருதியிருக்கின்றார்கள் என்பதில் ஆக்ஷேபணையிருக்க முடியாது அதுபோலவே இந்துக்களைப்பற்றியும் மகமதியர்களுக்கு தங்களது மத சம்பிரதாயப்படி இந்துக்களை இழிவாய் கருதவும் தங்களுக்கு நிரந்தர எதிரியாய்க் கருதவுமான உணர்ச்சிகள் தான் இருந்தும் வருகின்றது. இன்னும் மதக்கொள்கைகள் என்பது அந்தந்த மதக்காரர்கள் அல்லாதவர்களுக்கு உலகத்தில் இடமில்லை என்று கருதக்கூடிய அளவில் தாண்டவமாடிக்கொண்டிருக்கின்றன.

ஆகையால் தான் இந்துக்கள் இந்திய நாடு தங்களுடையது என்ற மனப்பான்மை மீது இந்தியாவில் தாங்களே ஆதிக்கம் செலுத்த வேண்டுமென்றுஆசைப்படுகின்றார்கள் என்பதையும் அதுபோலவே தான் மகமதியர்கள் இந்தியா முழுவதும் மகமதிய இராஜ்யமாகயிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றார்கள் என்பதையும் பார்த்து வருகின்றோம். இருவருடைய மதசம்பந்தமான ஆதாரங்களும் இந்த இலட்சியத்தை வலியுறுத்துவதாகக்கொண்டதென்றே சொல்லுவோம்.

இந்திய அரசியல் தலைவர் திரு காந்தி அவர்கள் அடிக்கடி தனது 'சுயராஜ்யத்திட்டத்தின் கருத்து ராம ராஜ்யம்' என்று சொல்லுவதே இந்துக்களின் அரசியல் மனப்பான்மையை விளக்கக்கூடியதாகும்.

அதோடு மகமதியர்கள் மாட்டுமாமிசம் சாப்பிடுவதை இந்துக்கள் அருவருப்பதும், இந்துக்கள் தெருவில் மேளம் அடிப்பதை மகமதியர்கள் தடை செய்வதும் போதியஉதாரணங்களாகும். ஏனெனில், இந்த இரண்டு தத்துவங்களிலும் மத உணர்ச்சியிருக்கின்றதே தவிர மற்றபடி பொது நோக்கும் உணர்ச்சியில்லை என்பது விளங்கும்.

நிற்க,இக்நாட்டில் இந்துக்கள், மகமதியர்கள் என்கின்றதானபெயர் கொண்ட இரு சமூகங்களென்பதில், எண்ணிக்கையில் இந்தியாவில் மகமதியர்களைவிட இந்துக்கள் என்பவர்கள் அதிக எண்ணிக்கையுள்ளவர்களென்று சொல்லுவதானாலும் அதாவது மகமதியர்களைவிட இந்துக்கள் 3 பங்கு அதிகமான எண்ணிக்கையுடையவர்கள் என்று கணக்கு சொல்லுவதானாலும் உண்மையில் மகமதியர்களே இந்தியாவில் வலிமை பொருந்திய சமூகத்தார் என்று தான் சொல்லவேண்டும்.

ஏனெனில் இந்துக்களின் ஜனசங்கை எவ்வளவு பெரிய எண்ணிக்கையாயிருந்தாலும் அதில் பல பிரிவுகள் ஏற்பட்டு சின்னாபின்னப்பட்டு தங்களை ஒரு சமூகம் என்று சொல்லிக்கொள்ள முடியாத நிலைமையில் பிரிக்கப்பட்டுக்கிடப்பதால் மகமதியர்களே இந்துக்களைவிட பெரிய சமூகமாவார்கள் என்கின்றோம்.

மேலும் இந்துக்கள் என்கின்ற கூட்டத்திலிருந்து பஞ்சமர்கள் அல்லது ஆதிதிராவிடர்கள் என்கின்ற சமூகத்தாரான 4ல் ஒரு பங்கு ஜனத்தொகைக் கொண்ட சமூகத்தை விலக்கித் தான் இந்து சமூக எண்ணிக்கையைக் கணக்குப் போடவேண்டும். ஏனெனில் அவர்களை ஒரு வித அடிமையாகவும் மிருக ஜீவன்களைவிடகேவலமாகவும்இந்துக்கள்கருதுகிறார்கள்.இதுபோலவே இந்துக்களில் மற்றும் பலசமூகங்கள்ஒன்றுக்கொன்றுஉயர்வுதாழ்வுஎன்று சொல்லிக் கொள்ளும் முறையில் சமத்துவம் பாராட்டப்பட முடியாத—ஒற்றுமைபாராட்ட முடியாத நிலைமையிலுள்ள பல பிரிவுகளையும் ஊர்ந்து பார்த்தால் தானாகவே மகமதிய சமூகம் தான் அதிக எண்ணிக்கையுடையது என்பதும் விளங்கும்.

அன்றியும் மகமதியர்கள் தங்களை எல்லோரும் இஸ்லாமானவர்கள் என்று சொல்லிக்கொள்வதுபோல்இந்துக்கள் எல்லோரும்தங்களை ஒரு கூட்டத்தில் சேர்த்துச்சொல்லிக்கொள்ளவார்த்தையே கிடையாது. ஒருவித பாவனையும் கிடையாது. தனித் தனி சமயம், ஜாதி, வகுப்பு, உட்பிரிவு ஆகியவைகளைச் சொல்லிப் பிரித்துக்காட்டிக் கொண்டே தீரவேண்டியவர்களாய் இருக்கின்றார்கள்.

வேண்டுமானால்வேறுஒருவனை ஏமாற்றும் போதும்வேறு ஒருவனுடன் சண்டைக்குப் போகும் போதும் மாத்திரம் தான் இந்து என்றால் என்ன என்றுஉணர்ந்து கொள்ள முடியாத மக்களைப்பிடித்து "நாம் எல்லோரும்இந்துக்கள்" என்று உரிமைபாராட்டுவதும், அது தீர்ந்த பிறகு அந்த மக்களையே "எட்டி நில தொடாதே" என்பதுமான குணங்கள்இந்துசமூகத்திலுள்ளசகலபிரிவார்களிடமும் இருந்துவருவதுவழக்கமாகயிருந்து வருகின்றது இதுபார்ப்பனனானாலும், சைவனானாலும், வைணவனானாலும், வேளாளனானாலும் எந்த "வருணா" சதானானாலும் மற்றும் யாரானாலும் இவர்களுக்கெல்லாம் இந்த உணர்ச்சி இயற்கை உணர்ச்சியாயிருந்தே வருகிறது.

ஆகவே இத்தியாதி காரணங்களால் இந்துக்கள் என்பவர்கள் தங்களை ஒரு சமூகம் என்று சொல்லிக்கொள்ள முடியாத நிலைமையில்வெகுகாலமாய் இருந்துவருவதும் இந்துக்கள் தவிர மற்ற சமூகங்கள் எவ்வளவு சிறியதாயிருந்தாலும் அவை ஆதிக்கத்திலிருந்து வருவதுமாயிருந்து வருகிறது. மற்றும் இந்தக்காரணமேதான் இந்தியாவை வெளிநாட்டு மக்களே அதாவது "இந்துக்கள் அல்லாத' சமூகமே ஆளக்கூடியதாகவும் இருந்து வருகின்றது. ஆகவே இந்து சமூகமும் இஸ்லாம் சமூகமும் இந்தியாவில் இப்போதுள்ள ஆக்ஷியின் பயனாய் எவ்வளவு கஷ்டப்பட்டு வருவதாயிருந்தாலும், 'அன்னிய ஆக்ஷியை" ஒழிக்கும் விஷயத்தில் ஒன்றையொன்று நம்பி ஒத்து வேலைசெய்ய முடியாமல் இருந்து வருவதுடன் மூன்றாவதொருவனுடைய தீர்ப்பே இவர்களது வாழ்வுக்கு வேண்டியதாய் இருக்கின்றது.

ஆதலால் புதிய அரசியல் சீர்திருத்தக் கிளர்ச்சியில் இந்து முஸ்லீம் ஒற்றுமை என்பதான முயற்சிகள் யார் யாராலோ எவ்வளவு முயற்சிகள் செய்தும் முடிவு பெறாமல் முறிந்துபோய்விட்டது நமக்கு சிறிதும் ஆச்சரியமாக இல்லை. இம்முயற்சியின் அஸ்திவாரமே ஒருவரையொருவர் ஏய்க்கும் தத்துவத்தில் இருந்து முளைத்ததே தவிர உண்மையில் நல்ல எண்ணத்தின்மீது சிறிதும்ஏற்பட்டதல்ல வென்றே சொல்லுவோம்.

இருவருக்கும் உள்ள தகராறு என்பதே பிரதிநிதித்துவம் என்பதில் மாத்திரம்தான் இருந்து வருகின்றதேயொழிய இன்னமாதிரி சீர்திருத்தம் வேண்டும் என்பதில் இருப்பதாகக்காணவில்லை.

ஆகவே ஒருவர் கோரும் பிரதிநிதித்துவம்மற்று ஒருவர்கொடுக்கசம்மதிக்காததும் ஒருவர் கொடுக்கும் பிரதிநிதித்துவம் மற்றொருவருக்கு திருப்தி இல்லாததும் ஒருவரிடம் ஒருவருக்குள்ள அவநம்பிக்கையே யாகும்.

ஆதலால் இருவரும் அவ நம்பிக்கைப் படுவதிலிருந்தே ஏமாற்றும் தன்மைதான் ஒற்றுமை என்

கிறை ரூபத்தில் இருந்து வருகின்றது என்பது விளங்கும். இந்த நிலையில் நாம் யார் மீதாவது அதிகமான குற்றம் சொல்ல வேண்டுமானால் இந்துக்கள் என்பவர்கள் மீதுதான் அதிக குற்றம் சொல்ல வேண்டியதாய் இருக்கின்றது அதாவது இந்துக்கள் இடம்தான் எய்க்கும் எண்ணம் அதிகமாய் இருக்கின்றது என்று சொல்லுவோம். எப்படியெனில் இந்தியாவில் இந்துக்கள், மகமதியர்களை நினைப்பதைவிட இன்னும் அதிக இழிவாய்க்கருதும் 5, 6 கோடி மக்கள் தீண்டாதவர்களாய் தெருவில் நடக்காதவர்களாய், கல்வியின்றி, நல்ல உடையின்றி, நல்ல ஆகாரமின்றி, இருக்க வீடு இன்றி, குளிக்கத் தண்ணீர் இன்றி தொழில் செய்ய உரிமை இன்றி அடிமைப்படுத்திக் கொடுமைப்படுத்தி இம்சிக்கப்பட்டு வருகின்றார்கள். இவர்களைப் பற்றி எந்த இந்து தலைவருக்கும் மகாத்மாக்களுக்கும் சிறிதுப-கடுகளவுகூட இந்த அரசியல் கிளர்ச்சி சுயராஜ்யத் திட்டத்தில் சேர்த்துக்கொள்ள கவலையே இல்லாமல் இருந்து வருகின்றார்கள் அவர்களுடைய நிலைமையைப்பற்றிய யோக்கியமான பேச்சு இந்து தலைவர்களுடைய இலக்ஷியத்தில் கிடையவே கிடையாது. மகமதியர்களுடன் ராஜி செய்துகொள்ளவேண்டும் என்கின்ற கவலையுள்ள அரசியல் ஸ்தாபனமானது, தீண்டாதவர்களுடன் ராஜி செய்துகொள்வதைப்பற்றி இலக்ஷியப்படாமல் இருப்பதற்குக்காரணம் தீண்டாதவர்கள், பலமற்றவர்கள், அறிவற்றவர்கள் என்கின்ற எண்ணங்களைவிட வேறுஒருகாரணமுமிருக்கமுடியாது என்றே சொல்லுவோம்,

எனெனில் தீண்டாதவர்கள் என்பவர்களும் அரசியல் ஒற்றுமையில் தங்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதாவது இந்துக்களிடம் நம்பிக்கைஇல்லைஎன்பதைகாட்டிக் கொண்டிருக்கிறார்கள். அரசியலில் தங்களுக்குத் தனி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இந்திய அரசியல் ஸ்தாபனத்தில் அவர்கள் கலந்துகொள்ளாமலேயே இருந்து வருகின்றார்கள். இப்படியெல்லாம் இருந்தும் இவர்களைபபற்றி இந்து தலைவர்கள் சிறிதும் இலக்ஷியமில்லாமல இருப்பதும், மகமதியர்கள் விஷயத்தில் இவ்வளவு கவலைப்படுவதும் என்றால் இதில் ஏமாற்றும் தன்மை இல்லை என்று எபபடி சொல்ல முடியும்? அன்றியும், 5 கோடி ஜனத்தொகையுள்ள அந்த ஒரு சமூகத்திற்கு 2, 3 பேர்களே வட்டமேஜை மகாநாட்டுக்கு பிரதிநிதிகளாய் இருக்கின்றார்கள் என்றால் இந்துக்கள் மாத்திரமல்லாமல் அரசாங்கத்தாரும் அவர்களை ஏய்த்திருக்கிறார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

இவர்கள் இப்படி ஏன் செய்கின்றார்கள் என்றால் மகமதியர்கள் உதைப்பதற்குத் தயாராய் இருக்கிறார்கள். உயரைவிடத் தயாராய் இருக்கிறார்கள். வேறு எதனை கொன்றாலும் கொல்லுவதின் மூலம் செத்தாலும் மோக்ஷமென்று கருதி இருக்கிறார்கள். அந்த உணர்ச்சி தான் அவர்களை மனிதர்களாக வாழச்செய்கின்றது.

நமது தீண்டாதவர்கள் என்பவர்களோ காலில் விழுந்து கும்பிடுவதை—சாமி சாமி என்று கெஞ்சுவதை,—உதைக்க உதைக்க காலுக்கு முத்தம் கொடுப்பதை 'மோக்ஷம்' என்று கருதுகின்றார்கள் ஆதலால் மகமதியர்கள் மோக்ஷவழியைக்கண்டு உதைக்கின்றது. தீண்டாதவர்கள் என்பவர்களின் மோக்ஷ வழியைக்கண்டு உலகம் அவர்கள் மீது ஏறி சவாரிசெய்கின்றது. இந்த நிலைமையில் இவர்களுக்கு மற்றவருக்கும் ராஜியோ, ஒற்றுமையோ நம்பிக்கையோ எபபடி உண்டாகக்கூடும் என்பதை யோசித்தால் உண்மை விளங்கும்.

இந்த நிலைமையில் 'சுயராஜியம்' எப்படி சாத்தியம் என்பதை யோசித்தாலும் உண்மை விளங்கும். இந்தியர்களுக்கு சுயராஜ்யத்திற்கு தகுதியாய் இருந்தால் அதைப்பெறுவதினின்றும் தடுக்க இந்த உலகத்தில்யாராலும் முடியவே முடியாது இந்து இஸ்லாம் சமயங்களும் வருணாச்சிரம தர்மமும், தீண்டாமையும் உள்ளவரை உண்மையான விடுதலை 'சுயராஜ்யம்' இந்தியா ஒரு நாளும் பெற முடியவே முடியாது என்பதை மனதில்வைத்து அவை ஒழியத்தக்க வேலை செய்வதுதான் ஒற்றுமையும் விடுதலையும் அடையும் மார்க்கமாகுமே தவிர வேறில்லை.

இன்றையத்தினம் இந்தியாவில் ஏதோ பிரமாதமாய் விடுதலைப் போர் நடப்பதாகக் கூறப்படுவதும் காணப்படுவதும் வெறும் புரட்டேயாகும். இது ஒரு இந்தியப் பணக்காரனும்,மேல்ஜாதிக்காரனும், ஒரு புறமாகவும், வெள்ளைக்காரபணக்காரன் ஒரு புறமாகவும் இருந்து கொண்டு தங்கள் தங்கள் நன்மைக்கு என்று செய்துவரும் ஒரு போராட்டமே யாகும். அதாவது வெள்ளைக்காரப் பணக்காரன் தனது அரசாக்ஷி என்னும் தந்திரத்தை ஒரு ஆயுதமாகவும்,இந்தியப் பணக்காரனும்,மேல்ஜாதிக்காரனும் இந்திய பாமர ஜனங்களின் முட்டாள் தனத்தையும், சில மக்களின் வேலையில்லாத்தனத்தையும் வயிற்றுப்பிழைப்பையும் ஆயுதமாக வைத்துக்கொண்டு செய்யப்படும் யுத்தமேயாகும்.

யுத்த நிறுத்த ராஜியின் போது இதே காரணம்தான் திரு. காந்தி இந்திய வர்த்தக சங்கத்தின் கௌரவ அங்கத்தினராகவும் லார்டு இர்வின் ஐரோப்பிய வர்த்தக சங்கத்தின் கௌரவ அங்கத்தினராகவும் இருந்துகொண்டு ராஜி பேசினார்கள். ஆகவே முறையே இருவரும் இந்திய வர்த்தகர்கள் சார்பாகவும்ஐரோப்பியவர்த்தகர்களின் சார்பாகவுமே பேசி ராஜி செய்து கொண்டார்கள்.

ஆகவே இவை முதலாளிகளுடைய போராட்டங்கள் என்பதும் இதற்கு பாமர மக்களையும் தொழிலாளிகளையும் பலி கொடுக்கின்றார்கள் என்பதும் அரசியல் கிளர்ச்சிகளில் சிறிது கலந்து அனுபோகப்பட்டிருந்தாலும் கண்ணாடியில் பிரதி பிம்பம் தோன்றுவது போல் விளங்கும்.

இந்தயுத்தம் ஒருவாறுமுடிந்தவுடன் இதேபாமரமக்களும்வயிற்றுக்கில்லாத ஆட்களும் உண்மை விடுதலைக்குப் பாடுபட திரும்பக் கூடும்என்றாலும் இப்பொழுது நடக்கும் போராட்ட முடிவு நிபந்தனையில் அப்படிப்பட்ட ஒரு யுத்தம் அதாவது உண்மை விடுதலைக்கு உரித்தான யுத்தம் மறுபடியும் ஏற்படாமல் இருக்கும் படியான பந்தோபஸ்து செய்வதும் ஒரு பெரிய காரியமாய் இருந்து வருகின்றதை உணருகின்றோம்.

அதுதான் புதிய சுயராஜ்ய திட்டம் என்பதில் உள்ள அதாவது சமஷ்டி அரசாங்கமுறை என்று சொல்லப்படுவதான, சுதேச அரசர்களின் ஆக்ஷியையும் இந்த சீர்திருத்தத் திட்டத்தில் சேர்த்திருப்பதும், மதநடு நிலைமையும் ஒவ்வொரு சமூகத்தினுடைய உரிமையும் காப்பாற்றுவது என்பதுமான நிபந்தனைகளுமாகும்,

சுதேச இராஜாக்கள் நமது ஆக்ஷியில் கலந்துகொள்ளுவதுஎன்பது 'பணக்காரர்கள் காப்பாற்றப்படுவார்கள்' என்பதும், மதநடு நிலைமை என்பது 'இரண்டு மதத்தின் பேராலும் பல சோம்பேரிகள் வாழலாம்' என்பதும், ஒவ்வொரு வகுப்பு உரிமையும் காப்பாற்றப்படும் என்பது 'பார்ப்பனர்கள் காப்பாற்றப்படுவார்கள்' என்பதும்தானே தவிர வேறில்லை.ஆகவே இந்த சுயராஜ்யக்கிளர்ச்சிஎன்பது பணக்காரன், சோம்பேரி, பார்ப்பான் ஆகிய கூட்டம் பிழைப்பதற்கும் நிலையாய் தங்கள் நிலைமையை பந்தோபஸ்து செய்துகொள்வது என்பதற்குமே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை என்பதாக உறுதிகூறுவோம்.

இந்தப் போராட்டமானது முதலாளிகள் சண்டை என்பதற்கு உதாரணம் ஏனெனவென்றால், வெளிநாட்டுச் சாமான்களை பகிஷ்கரிப்பது என் தேயாகும். எப்படியெனில் இந்தப்பூச்சாண்டியைஅரசியலில் 1907ம் வருஷம் முதலிலிருந்தே கையாளப்பட்டு வரும் தந்திரமாகும்.

இந்த பகிஷ்காரம் என்பதுபுரட்டுஎன்பதற்கு அத்தாக்ஷி வெளிநாட்டுத்துணியை பகிஷ்கரிப்பதற்காக கதரைபர்த்தி செய்ய ஏற்பாடு செய்திருக்கும் காரியமே யாகும். கதரில் இயந்திரம் முதலிய முதலாளியை காப்பாற்றுவதும், கூலிக்காரனை, தொழிலாளியை அடக்கி வைப்பதுமான தத்துவம் அடங்கியிருப்பது நன்றாய் விளங்கும். ஒவ்வொரு அரசியல் கிளர்ச்சியின் போது (Boycott) "பாய்காட்" "பகிஷ்காரம்" என்று சொல்லிக்கொண்டு கலவரம் செய்து விட்டு, ஏதாவது ஒரு அதிகார—உத்தியோக சௌகரியம் கிடைத்தவுடன் அன்னிய நாட்டு வியாபாரத்தை தாராளமாய் விட்டுவிட்டு எலக்ஷன்களில் போட்டி போடுவதும் யாவரும் அறிந்ததேயாகும்.

இந்தியாவில் ஒரு பழமொழி யுண்டு. அதாவது "கொட்டை நூற்று பஞ்சம் விடியுமா? என்று சொல்லுவதுண்டு. இதன் கருத்து என்னவென்றால் நூல்நூற்பதினால் தரித்திரம் ஒழியுமா என்பதேயாகும்.

ஆகவே இன்றைய சுயராஜ்ய முயற்சிக்கும் ஏழைகள் பணக்காரர்கள் ஆவதற்கும் தொழிலாளிகள் பிழைப்பதற்கும் கள்ளுக்குடி ஒழிவதற்கும் கொட்டை நூற்க வேண்டியது (பட்டினத்தில் நூல் நூற்கவேண்டியது) தான் முக்கிய மார்க்கமாயிருக்கிறது என்பது எவ்வளவு தந்திரமானது எனபதை யோசித்

தால் சிறிதளவு மூளையுள்ளவர்களுக்கும் தெரியாமல் போகாது.

இதுபோலவே கள்ளுக்கடை மறியல் என்பதும் எலக்ஷன் நெருங்க நெருங்க இதுஒரு எலக்ஷன் பிரசாரமாய் புரபபடுவதும் எலக்ஷன் முடிந்தவுடன் மறியல் ஒழிந்து போவதுமலலாமல் வேறு அதில் ஏதாவது நாணயமிருக்கின்றது அல்லது இருந்தது என்றுவது யாராவது சொல்ல முடியுமா என்று யோசித்தால் அதன் புரட்டும் விளங்காமல் போகாது.

ஆகவே கதரும், மறியலும், இந்து முஸ்லீம் ஒற்றுமை முதலியகாரியங்களாலும் ஏற்படப்போகும்பயன் என்னஎன்பதை அறிவுடைய—சுயநல மற்ற மக்கள் உணர்ந்து பாமர மக்களுக்கு எடுத்துரைக்க வேணுமாய் விரும்புகின்றோம்.

இதைப்பற்றிய மற்றும் விபரங்களையும் சுதேச சமஸ்தானகள்ளன்பவைகளின் யோக்கியதைகளையும் மற்றொரு சமயம்புள் விவரங்களுடன் எழுதுவோம்.

கொடைக்கானல்.

சுயமரியாதைச் சங்க நிர்வாகசபைக்கூட்டம் கொடைக்கானல்.

திரு. சௌந்திரபாண்டியன் அவர்களது "ஆக்கோடியா" பங்களாவில் 23-6-31 மாலை 4 மணிக்கு திரு. பாண்டியன் அவர்கள் தலைமையில் கூடியது.

உயர் திருவாளர்கள் W. P. A. சௌந்திரபாண்டியன், ஈ. வெ. ராமசாமி, எஸ். ராமநாதன், சொ. முருகப்பா, J. S. கண்ணப்பர், V. V. ராமசாமிஆகிய அங்கத்தினர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

மகாநாடு.

கூட்ட நடவடிக்கை ஆரம்பமானதும் முதல்முதலாக விருதுநகர் திரு. V. V. ராமசாமி அவர்கள் 3வது சுயமரியாதை மகாநாடு விருதுநகரில் நடத்துவதைப்பற்றி பேசியதில் மகாநாட்டுக்குத்தலைமைவகிக்க முன்கேட்டுக்கொண்ட இரண்டு கனவான்களும்சந்தர்ப்பபேதத்தால்ஒத்துக்கொள்ளாததாலும் வரவேற்புக்கட்டிஅங்கத்தினர்கள் பலர்பெரும்பான்மையாய் மகாநாட்டுக்கு நடுதுமாகாண வாசிகளில இருந்தே ஒரு கனவான் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்ற விருப்பத்தைக் கொண்டிருப்பதாலும் கோவை திரு. R. K. ஷண்முகம் அவர்களைத் தலைவராக தெரிந்தெடுத்து அவரது சம்மதத்தையும்

சௌகரியத்தையும் விசாரித்துமகாநாட்டை ஜூலைமாதத்திலேயே நடத்த வேண்டுமென்றும் தெரிவித்துக்கொண்டார்.

மற்றும் பலகனவான்களின்பெயர்களும் பிரஸ்தாபிக்கப்பட்டுகடைசியாக திரு. ஷண்முகம் அவர்கள் பெயரையே ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

தினசரி.

சுயமரியாதை இயக்கப் பிரசாரத்திற்கு ஒரு தினசரிப் பத்திரிகை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் ரூ. 500, வீதம் 50 பங்குகள்கொண்ட ரூ 25 00 மூலதனத்துடன் ஒரு தினசரி நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டு உடனே அது சம்பந்தமான வேலைகளைத்துவக்கவேண்டுமாய் சில கனவான்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

அந்த இடத்திலேயே 7பங்குகளுக்கு ரூ. 3,500க்கு கையொப்பமும் செய்யப்பட்டது.

மற்றும் ஒவ்வொரு தமிழ் ஜில்லாவுக்கு சில சில கனவான்கள் வீதம் சுமார் 40 கனவான்களைஉத்தேசித்து அவர்களுடைய பெயர்களைக் குறிப்பிட்டு அவர்களை நேரில் பார்த்தும கடிதமூலமாய் எழுதியும் கேட்டுக்கொள்வதின் மூலம பல பங்குகள் பூர்த்திசெய்யலாம் என்றும் பேசி குறிப்புகள் போடப்பட்டன.

பிறகு பிரசார விஷயமாய்

இப்போது நடைபெற்று வருகின்றபடியே ஆங்காங்கு பிரசாரங்களும், மகாநாடுகளும் நடத்தப்பட்டுவரவேண்டியது என்பதோடு இதற்கென்றே ஏழு பிரசாரர்கள் இருவர்களை ஏற்பாடு செய்ய வேண்டியதுஎன்றும் தீர்மானிக்கப்பட்டது

திரு. விஸ்வநாதம்.

திருச்சி, திரு. கி. ஆ. பெ. விஸ்வநாதம் அவர்கள் தமது மலாய்நாட்டுச் சுற்றுபிரயாணத்தை முடித்துக்கொண்டு சுகமாக தாய்நாட்டிற்கு வந்து சேர்ந்தாரென ஒரு நிருபர் எழுதுகிறார்.

புதுக்கட்டிடத் திறப்புவிழா.

சேலம், செவ்வாய்ப்பேட்டை சுயமரியாதைச்சங்கத்திற்கென புதிதாய்க்கட்டிய கட்டடத்தின் திறப்புவிழா, இம்மாதம் 29, 30-ந் தேதிகளில், சேலம் ஜில்லா போர்டு தலைவர் திவான் பகதூர் எஸ். எல்லபபச்செட்டியார் எம். எல். சி. அவர்களின் தலைமையில், மந்திரி கனம் பி. டி. இராஜன் பி. ஏ., பார்-அட்-லா அவர்கள் திறந்து வைப்பார்கள்.

அதே கட்டிடத்தில், சர். பி. தியாகராயர், உயர்திரு. ஈ. வெ. இராமசாமியார், டாக்டர் நாயர், கனம் பனகால் அரசர் ஆகியவர்களின் உருவப்படஙகள் முறையே திருவாளர் ஆர். கே. ஷண்முகம் டிப்டி பிரசிடெண்ட் எம். எல். ஏ., டபுல்யூ. பி. ஏ. சௌந்திரபாண்டியன், மரகதவல்லி அம்மையார், ஈ. வெ. இராமசாமி ஆகியவர்கள் திறந்து வைப்பார்கள். மறுநாள் (30—6—31) மாலை 5-மணிக்குச் சங்கத்தின் முன்புறத்திலுள்ள பார்க்கில் உயர்திரு ஆர். கே ஷண்முகம் அவர்களின் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும அவ்வமயம் திருவாளர்கள், சொ. முருகப்பா, எஸ். வி. லிங்கம், கே. வி. அழகர்சாமி, மரகதவல்லி அம்மையார் முதலியவர்கள் சொற்பொழிவாற்றுவார்கள்.

கே. ஆர். வி. அர்த்தநாரி செட்டியார்,
சுயமரியாதைச்சங்கத்தலைவர், சேலம்.

தலைவர்களின் படங்கள் நன்கொடை.

சேலம் செவ்வாய்பேட்டை சுயமரியாதை சங்கத்திற்காக உயர் திருவாளர் தொ. அ. சிதம்பர செட்டியார் அண்டு சன்ஸ் அவர்களால் சர். பி. தியாகராயர் டாக்டர் டி. எம். நாயர், திரு. ஈ. வெ. ராமசாமி முதலியவர்களின் படங்களும் உயர் திருவாளர் ஆர். எஸ். முத்துசாமி செட்டி, அருணாசல செட்டி, ஆகியவர்களால் கனம் பனகால்அரசர்படமஒன்றுமமேற்படி சங்கத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டிருக்கின்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

தேவேந்திரகுல வேளாளர் மூன்றாவது மகாநாடு.

மேற்படி மகாநாடு இம்மாதம் 28ந்தேதி ஞாயிற்றுக்கிழமை சென்னை ஜஸ்டிஸ் ஆசிரியர் உயர் திரு. டி. எ. வி. நாதன் பி. ஏ. பி எல். அவர்களின் தலைமையில் நடைபெறும்.

மேற்படி சங்கத்தலைவர் திரு. எம். பாலகிருஷ்ணன் அவர்கள் மகாநாட்டைத்திறந்துவைப்பார். திரு டி. வி. சோமசுந்திரம பி. ஏ. பி. எல். அவர்கள் கொடியேற்றுவாரென மேற்படி சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

திறப்புவிழா.

ஜாதி மதபேதமின்றி யாவருக்கும் எளிதில் கல்வியை புகட்டுவான் வேண்டி ஸ்தாபித்திருக்கும் ஆனந்த வாசகசாலை & சங்கத்தின் புதுக் கட்டடத் திறப்புவிழா 2.7-31 வியாழக்கிழமை ஷை கட்டடத்தில் திருநெல்வேலி ஜில்லா போர்டு தலைவர் திருவாளர். ஐ. சி. ஈஸ்வரம் பிள்ளை அவர்களின் தலைமையிலும், மேற்படி சங்கத்தின் முதலாவது வருஷ பூர்த்தி விழா சென்னை சட்ட சபை மெம்பர் உயர்திருவாளர். W. P. A. சௌந்திரபாண்டியன் அவர்கள் தலைமையிலும் நடைபெறும். அவ்வமயம திருவாளர்கள். ஈ. வெ. இராமசாமி அவர்களும், குமரன் பத்திராதிபர், சொ. முருகப்பா அவர்களும் திருமதி. மரகதவல்லி அம்மையாரவர்களும், மற்றும பல கனவான்களும் சொற்பொழிவாற்றுவார்கள் என மேற்படி சங்கத் தலைவர் தெரிவிக்கிறார்.

சீர்திருத்த சுயமரியாதைத் திருமணம்.

கும்பகோணத்திற்கடுத்த பட்டீஸ்வரம் கிராமத்தில் திரு. லெட்சுமண நாடார் திருச்செல்வன் துரைசாமிக்கும், மத்தளங்குடி திரு. சின்னைய நாடார் திருச்செல்வி காந்திமதி அம்மாளுக்கும் 25-6-31ல் சீர்திருத்த சுயமரியாதைத் திருமணம் நடந்தேறியது. நிகழ்ச்சிக் குறிப்புகள் அடுத்தவாரம் வெளிவரும்.

சென்னையில் "குடி அரசு" பத்திரிகையும், புஸ்தகங்களும் கிடைக்குமிடம்.

T. சுப்ரமணியம்,
3, செங்கல்வராய முதலி தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

(11ம் பக்கத் தொடர்ச்சி)

கருதிவருகின்றோம். நாம் மானம் கெட்டவர்களெனக் கூறுவதற்கு இதுவும் ஒரு காரணமாகும். கடவுள் சிருஷ்டியில் பெண்களை அடிமைகளாகவும், மனிதத்தன்மைக்கு லாயக்கற்றவர்களாகவும் சிருஷ்டிக்கப்பட்டதாய்க்கருதுகிறோம். இது இந்தியாவில்தானேயொழிய வேறு நாடுகளில் கிடையவே கிடையாது. நம் பெண் மக்கள் இவைகளிலிருந்து விடுதலையடையவேண்டுமானால் நமது பெண் மக்களுக்கு போதிய தைரியமும் வீரமும் வேண்டும். இவ்விரண்டும் அவர்களிடத்தில் இல்லை. நாம் ஆண்களும் பெண்களும் இந்தியாவில் பிறந்தவர்கள் என்று பெருமையாக சொல்லிக்கொள்ளுகிறோமே யன்றி வேறு ஒருவிதமான யோக்கியதையும் நம்மிடத்தில் இல்லை தீண்டப்படாதார் எனபவர்களின் நிலைமையோ சொல்லத்தரமன்று. அவர்கள் 5; 6 கோடி மக்களாய் இருந்தும் ஒரு குடியானவனுக்கு 1000 கால் நடைகள் ஆடு மாடுகள் இருப்பதுபோல் இந்திய மேல் ஜாதி மக்களுக்கு 5; 6 கோடி மனிதகால் நடைகள் இருக்கின்றது என்றுதான் சொல்லவேண்டும். இந்த ஒருகாரணமே போதும் இந்தியர்கள் அயோக்கியர்கள் என்பதற்கும் அடிமையாய் நடக்கப்பட தகுதி உள்ளவர்கள் என்பதற்கும் ஆதாரமாகும்.

நமது வீரம்.

நாம் இங்குதான் "பாரத வீரர்கள், பீமன் சந்ததிகள்" என்று மேடையேறிப் பேசிக்கொள்ளுகின்றோமே யொழியஒரு அராபி தேசத்தவனை நடுத்தடத்தில் கண்ணில் பார்த்து விட்டால் நமது மக்கள் ஆண் பெண் அடங்கலும் நடுங்குகின்றன. காலுடன் மூத்திரம் பெய்து கொள்ளுகின்றன. வெளி தேசத்திலிருந்து எவன் வந்தாலும் அவனைக்கண்டால் இப்படித்தான் நடுங்குகின்றோம்.

வெளிநாட்டுக்காரன் இங்கு வந்து சம்பாதித்துப் போவதற்குக்காரணமே நமக்கு வீரமும் நாணயமும் அற்றதன்மையேயாகும். நமது கிராமங்களில் ஒரு அராபி தேசத்துக்காரன் 4 ரூபாய் பெரும்படியான ஒரு சால்வையை 8 ரூபாயிக்கு கொடுத்து விட்டு 6 மாதம் பொருத்து வந்து பணம் கேட்டால் வெற்றிலை பாக்கு தட்டில் வைத்து சங்கராச்சாரிக்குக் காணிக்கை கொடுப்பது போல் பயபக்தியுடன் கொடுத்து விடுகின்றோம். அவனைக்கண்டால் நடுங்குகின்றோம். உள்ளூர் வாசியிடம் கடன் பட்டிருந்தாலோ, அவனுடைய கடனைக்கொடுக்க மறுப்பதுமல்லாமல், 'பண்ணுவதைப்பண்ணு" என்றும் சொல்லுகிறோம். அயலூரானென்றால் நடுங்குகின்றோம் இதற்குக் காரணமென்ன? ஏனெனில், நமது தைரியம் அவ்வளவில்தானிருக்கின்றது. மற்றும் ஓர் உதாரணம் என்னவென்றால் ஒரு ரயில்வண்டியில் ஆப்கன் தேசத்தான் ஒருவன் இருந்து அவ்வண்டி முழுமையும் காலியாகயிருந்தாலும் கூட, நாம் அவ்வண்டியில் ஏறமாட்டோம். நாம் பத்து பெயர்கள் வரை ஒரு அறையிலுட்கார்ந்து, அவ்வண்டியில் இடமில்லாதிருந்த போதிலும்கூட வடதேசத்தானொருவன் தைரியமாக அங்கே வந்து உட்காருவான். நாமும் உடனேவண்டியைக் காலிசெய்துவிடுவோம்.

ஆனால் நாம், காளி, வீரன், கருப்பன், முனியன், சடையாண்டி முதலியவீரம் "பொருந்திய தெய்வங்களை" கும்பிடுகிறவர்களாகவுமிருக்கிறோம். எதற்காகக்கும்பிடுகிறோம என்றால்அத்தெய்வங்களுக்குள்ள தைரியம் நமக்கும் வ ர வே ண் டு மெ ன வே தான் என்கின்றோம். ஆனால் நாம் அதனால் தைரியமுடையவர்களாக வாகின்றோமா என்று பார்த்தாலோ, அப்படியுமில்லை. நமது தைரியமெல்லாம் முதலில் "அடிபார்க்கலாம்" என்பதிலும் அடிவிழுந்தால் "ஓடுவதற்குள் என்ன அவசரம்" என்பதிலேயே தானிருக்கின்றது. யார் அடித்தாலும், திருப்பியடிக்கக்கூடிய நிலைமையில் நாமின்று இல்லை.

முயற்சி.

முயற்சி விஷயத்தில் மேல் நாட்டாரோ 'இமயமலை உச்சியைக்கண்டுபிடிக்கவேண்டு'மென்றும் 'அதிவேகமாகப்பறக்க முயற்சிக்கவேண்டு' மென்றும், அவ்வித முயற்சியினால் மரணமடைந்தாலும் பரவாயில்லை யெனவும் மேல் நோக்கிக்கொண்டே சென்று கொண்டிருக்கிறார்கள். மேலும் நம்மை சுலபத்தில் எவ்வாறு அடக்கமுடியும், எவ்வாறு நிரந்தரமாய் அடிமை கொண்டு இருக்க முடியுமென்பதற்குறிய மார்க்கங்களை ஆராய்வதிலுமிருக்கின்றார்கள். ஆனால் நமது இந்தியாவிலோ ஒன்றுமே இல்லை. ஏனெனில் தைரியமும், வீரமும், நமக்கில்லை உதாரணமாக, ஒருவன் ரூபாய் 400 ரூபாய் 500 லஞ்சம் முதலிய செலவு செய்து ஒரு லைசென்சு வாங்கி துப்பாக்கி வாங்கி இருந்தாலும் அந்தத்துப்பாக்கியின் குதிரையானது கெட்டுப்போய் குதிரையை கம்மாளனிடம் கொடுத்துவிட்டு கட்டையை மூலையில் வைத்திருக்கும்பொழுதுகூட நமதுகுழந்தைகள் தற்செயலாய் அந்தத்துப்பாக்கி யிருக்குமிடத்திற்கு சென்றுவிட்டாலோ உடனே 'துப்பாக்கி! துப்பாக்கி!! கிட்டப்போகாதே' போகாதே" என்று சத்தமிடுகின்றோம் ஏன்? நமக்கு பயமே அதிகமாயிருக்கின்றது. தைரியஉணர்ச்சியென்பதுசிறிதுமில்லை இதனால் நமது அறிவுஎவ்வளவு தூரம் முதிர்ச்சியடைந்திருக்கின்றதென்பது புலப்படாதிராது. நாம் வீணாய்'காலை' என நாட்களை கழித்துக்கொண்டுதான் செல்லுகின்றோமேயல்லாது வேறில்லை. விஷயங்களை உணரக்கூடிய சக்திநமக்கில்லை. அப்படியாராவது உணர்ந்துசொல்லவந்தாலும் 'நமதுமுன்னோர்கள் எவ்வளவுபெரியவர்கள். அவர்களுக்குத்தெரியாத சங்கதியா இவர்களுக்குத்தெரிந்துவிட்டதா இவர் நேற்றுவந்தபயல்தானே. அவரைவிடவா இவன் பெரியவன்?" என உரைப்பதிலிருக்கின்றோம். இதற்குக்காரணம் என்னவென்றால் நமது அடிமைத்தனம் நம்முடைய தலையின்மீது ஏறி, உட்கார்ந்துகொண்டிருக்கின்றது. அதுநமது அறிவை கூறில்லாமல் செய்துவிட்டது. நமது நாட்டிலிருக்கக்கூடிய 'அறிவாளிகளும்' 'திர்க்கதரிசிகளும்' 'கவிவாணர்களும்' 'தெய்வத்தன்மை பொருந்தியவர்களும்' பழமையைச் சாருப்பிடியாக பிடித்துக்கொண்டிருக்கிறார்கள். பழமையிலிருந்து அவர்கள் சிறிதேனும் நழுவுவார்களேயானால், அவர்களுடையகவிகளை அரங்கேற்ற முடியவே முடியாது. அவர்கள் திர்க்கதரிசிகளாகவுமுடியாது என்பதே.

மக்கள் ஏவ்வொன்றையும்யோசனை செய்து யுக்தியை செலுத்தி, புதிது புதிதாக ஒவ்வொன்றையும் கண்டு பிடிப்பதற்குத்தான ஆராய்ச்சி எனக்கூறப்படும். ஆனால் நாமோ நமது முன்னோர்கள் என்ன செய்து கொண்டிருந்தார்களென்பதை ஆராய்ச்சி செய்வதிலும் அதை நிலை நிறுத்த என்ன செய்யவேண்டுமென்பதை ஆராய்வதிலும் தான் ஆராய்ச்சித் துறையில் இருந்து வருகின்றோமே யல்லாது, அதாவது பின்னால் தான் திரும்பிப்பார்த்துக்கொண்டிருக்கிறோமே யொழிய, முன்னோக்கிப்பார்ப்பதேயில்லை. ஆனால், மேல் நாட்டுக்காரனோ பின்னோக்குவதே கிடையாது. அவன் எப்பொழுதும் முன்னோக்கியே பார்க்கின்றான். அவன் எதாகிலும் ஒன்றைப் புதிதாக கண்டுபிடித்தால் மேன் மேலும் ஆராய்ச்சி செய்து 1930ல் இப்படி இருந்தால் 1940ல் இது எப்படி இருக்கும்? 1950ல் எப்படியிருக்கும்? 1960ல் எப்படியிருக்கும்? என்பதையே அறிந்து கொள்ள முயற்சிக்கின்றான். இதுதான் நமக்கும் அவர்களுக்கு முள்ள வித்தியாசம். உதாரணமாக ஒரு போர்டு மோட்டார் வண்டியை யெடுத்துக்கொள்ளுங்கள். 20வருடங்களுக்கு முன்னிருந்த ஒரு போர்டு வண்டியின் உருவம், இப்பொழுது எப்படியிருக்கின்றதென்பதைக்கவனித்துப் பாருங்கள். எல்லாம் புதுமாதிரி. எவ்வளவோ சௌகரியங்களமைத்திருக்கின்றான். மேலும் அப்பொழுது மணி ஒன்றுக்கு 18மைல் சென்றால், இப்பொழுது 90மைல் வீதம்செல்லுகின்றது. ஒரு காலன் பெட்ரோலுக்கு அப்பொழுது 15மைல் தூரம் சென்றால், இப்பொழுது 30முதல் 40மைல் தூரம்செல்லுகின்றது. மோட்டாரில் காணப்படும் கோளாறுகளை குறைத்துக் கொண்டே முன்னேறிக்கொண்டு வருகின்றான். அவனுக்கு மனிதத் தன்மை, உணர்ச்சி, ஊக்கம், முயற்சி, கவலைஆகியவைகளிருக்கின்றன. நமக்கோ அவைகளில்லை. ஆகையால் தான் நமது நாடு 'முன்னேறவில்லை. எது எடுத்தாலும் நமது நாட்டில் "பழமை" வந்து குறுக்கிடுகின்றது. நமது நாட்டுமக்களில் மோட்டாரையே பாராத மக்களுமிருக்கின்றார்கள். தவறி எதாவதொரு மோட்டாரைப் பார்த்துவிட்டாலோ "ரயில்வண்டி அறுத்துக் கொண்டு வந்துவிட்டது" என சொல்லக்கூடியவர்களு மிருக்கின்றார்கள், இவைகளுக்கெல்லாம் காரணம் என்ன? நமக்குக்கவலை, ஊக்கமில்லை, முயற்சியுமில்லை, முற்போக்கடைய ஆசையுமில்லை. நாடு முற்போக்கடைந்து விட்டால் சோம்பேறிகளுக்கு இடமிருக்காது என்பதும் தான். நாம் ஒவ்வொன்றுக்கும் புராணக்கதைகளையொப்பிட்டு, திருப்தியடைகிறோம். நமது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையா யிருப்பவைகளில் முதன்மையானது நமது புராணங்களிலும் மதக்கொள்கைகளிலும்நம்பிக்கைவைத்திருக்கும் மூடப்பழக்கவழக்கங்களுமேயாகும்.

சுகாதாரம், ஆயுள்

இந்த கிராமத்தில் சுமார் 1000. 1500 வீடுகளிருக்கின்றன, இவ்வூர் வாசிகளிலநேகர் பெரிய பணக்காரர்களாகவு மிருக்கின்றார்கள்.

அப்படியிருந்தும் உங்களுடைய தெருக்கள் எப்படி யிருக்கின்றன? பார்த்தீர்களா? எவ்வளவு அசிங்கம்? எவ்வளவு குட்டை? எவ்வளவு தூர் நாற்றமுடையதாயிருக்கிறது? இவ்வித நிலைமையிலிருந்தால் நமக்கு காயலா வருவதற்கு யாரைக் கேட்கவேண்டும்? நமது நாட்டு மக்களின் சராசரி வயது ஒவ்வொருவனுக்கும் 24தான் என கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால் மேல் நாட்டில் ஒவ்வொருவனுக்கும் சரா சரி வயது 45 என்பதாக சொல்லுகிறார்கள். இதற்குக் காரணமென்ன? அங்கு 'இயமன்' இல்லையா? நமது நாட்டு'இயமன்' அவர்களிடம் சிறுவயதில் செல்லுவதில்லையா? அவனுக்கு நம்மிடம் தானு சதா வேலையிருக்கின்றது? என்று யோசித்துப் பாருங்கள். நமது நாட்டு மக்களிறந்து விட்டால் உடனே 'நாம் என்ன செய்வது' அவனுடைய சீட்டை பிரமதேவன் கிழித்து விட்டான். விதி முடிந்தால் யார் என்ன செய்யமுடியும்?' என சொல்லி விடுகிறோம். ஆனால் மேல் நாட்டானோ அப்படியில்லை. அவன் யாராகிலும் காலராவிலிறந்து விட்டால், உடனே ஆகாரம், தண்ணீர், காற்று முதலியவைகளை கவனித்து, ஆராய்ச்சி செய்து தக்க முறைகளை கண்டுபிடித்து மற்றவர்கள் சாகாமல் இருக்கப்பாடுபடுகின்றனேயொழிய நம்மைப்போல் ஓங்காளியம்மனைக் கும்பிடுவதில்லை. நமது மதராசைப் பொறுத்தவரையிலும் ஒரு உதாரணம் என்னவென்றால், ஒரு தடவை சென்னையில் 15நாட்கள்வரையிலும் காலரா யிருந்ததினால், உடனே ஒரு மீட்டிங்கில் 'ஹெல்த்ஆபீசர் வேலைக்கு லாயக்கில்லை' என்பதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றி விட்டார்கள். ஹெல்த் ஆபீசரும் அதற்குத் தக்க வாறு பதில் சொல்லி தனது முயற்சியில் 15நாள் பொருத்தாவது அடியோடு நிறுத்தப்பட்டதை எடுத்துக்காட்டினாரே யல்லாமல் 'கடவுள் செயலுக்கு நான் என்ன செய்ய முடியு'மென்பதாக உரைக்கவேயில்லை. அவர் அந்த வியாதியை நீக்குவதற்குறிய மார்க்கங்களை ஆராய்ச்சி செய்து அவ்வியாதியை அறவே நீக்க முயற்சிக்கின்றாரே யல்லாது எல்லாப் பொறுப்பையும் கடவுளின் தலை மீது சுமத்திவிட்டு சும்மாயிருந்து விடுவதில்லை. நமது நாட்டு மக்கள் நோய்வந்தால் டாக்டரை அழைத்து வைத்யம் செய்வதற்குப் பதிலாக, ஆடு, கோழி முதலியவைகளை அறுத்து பொங்கலிட்டு சாமியை கும்பிட்டு விட்டு, பேசாதிருந்து விடுகின்றோம். இவ்வித நிலைமையில் நாம் இருந்துகொண்டு 'விடுதலை' விடுதலையை பெறும் கூச்சலிடுவதில் மட்டும் என்ன பயன்? நமது மக்களுக்கு வேண்டிய கல்வியை ஊட்டி பெண் மக்களுக்கும் சுகாதாரத்தையும் அதன் அவசியத்தையும் கற்றுக் கொடுத்து, அவர்களை சுத்தமாக யிருக்கும்படி செய்து வந்தால் சுகாதார விடுதலையடைவோமா? அல்லது அவர்களை கவனியாமல் எல்லாம் கடவுளின் தலையில் சுமத்தி சாமியைக் கும்பிட்டுக் கொண்டு உட்கார்ந்திருப்பதால் விடுதலையடைவோமா? என்பதை சிறிது யோசனை செய்து பாருங்கள்.

நமது நாட்டு கர்ப்பஸ்திரீகளில் 100க்கு குறைந்தது 10 பெயர்களாவது இறந்துவிடுகின்றார்கள். அப்பொழுது நாம் 'அவள் கருதரித்த நேரம் அப்படியிருக்கின்றது. அவள் புருஷனுக்கு இரண்டு பெண்டாட்டி யோகம் இருக்கின்றது. அதற்கு நாம் என்ன செய்ய முடியு'மென்பதாகமட்டும் உரைத்து, திருப்தியடைந்து விடுகிறோம். வியாதிகளைத் தடுத்துக் கொள்ளக்கூடிய அறிவை நாம் மக்களுக்குப் புகட்டவேண்டும். அதற்குறிய சுகாதார வைத்திய, மருத்துவ, கல்வி ஸ்தாபனங்களை நமது நாட்டில் பரப்ப வேண்டும். ஆனால் நமது நாட்டிலுள்ள செல்வவான்களும், நாட்டுக்கோட்டை செட்டிமார்களும் தங்களுடைய செல்வத்தைக் கோயில்கள் கட்டுவதிலும், கும்பாபிஷேகங்கள் செய்வதிலும், செலவழிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாயிருக்கிறார்களே யல்லாது மக்கள் முன்னேற்றத்திற்குறிய மார்க்கங்களில் செலவிடத் தயாராகயில்லை. இத்தகைய இவர்களுடைய செய்கையால் ஒரு சாரார் மட்டும், ஒரு கூட்டம் மட்டும் பிழைப்பதற்கு வழியேற்படுகின்றதேயன்றி, எல்லா மக்களுக்கும் அந்தப்பொது ஸ்தாபனம் உபயோகப்படுவதில்லை. மேல் நாட்டு செல்வவான்களோ அப்படியில்லை. அவன் எல்லோருக்கும் உதவும்படியாக கல்விச்சாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும் ஸ்தாபித்து பொதுமக்களுக்குப்பயன் படும்படியான முறையில் உதவுகின்றனர். நமக்கோ அவ்வித உணர்ச்சி கொஞ்சமேனும் கிடையாது. நமது மக்கள் விடுதலையடைய வேண்டுமானால் நாம் ஒவ்வொன்றையும் ஆராய்ச்சிசெய்து கொண்டு வந்தால் தான் முடியுமேயன்றி வெறும் கூச்சல் மட்டும் போட்டுக் கொண்டிருந்தால் ஒரு நாளும் மக்களுக்கு விடுதலைகிடையவே கிடையாது.

பெண்கள் விடுதலை.

நமது நாட்டுப்பெண்களை அடிமைகளைப்போலவும், மாடுகளைப் போலவுமே நாம் நடத்திக் கொண்டு வருகின்றோம். பெண்களும் தங்களை அடிமைகளென்றுதான் நினைத்துக்கொண்டு வருகின்றார்கள். பெண்கள் அவ்வித நிலைமையிலிருந்து விடுதலையடைய வேண்டுமானால், நாம் அவர்களுக்குச்சுதந்திரவுணர்ச்சியை யுண்டாக்கிக்கொண்டும், ஊட்டிக்கொண்டும் வரவேண்டும். பெண்கள் ஆண்களின் அடிமையல்ல என்றும், அவர்கள் ஆண்களின் சிநேகிதர்களேயாவர்கள் என்றும் கருதும்படி நாம் அவர்களுக்கு விஷயங்களை எடுத்துக்கூறி அவர்களது உரிமைகளை அடையவசதியளிக்கவேண்டும். வாயளவில் எழுத்தளவில் மட்டும் உரிமைகளளிப்பதாக உரைப்பதில் பிரயோஜனமில்லை. இப்பொழுது நமது இந்தியாவில் 35 கோடி மக்களிருக்கின்றார்கள். பெண்களையும் நாம் மக்களென நினையாமலும் அவர்களுடைய உரிமைகளை நாம் அவர்களுக்கு வழங்காமல் அவர்களை அடிமைகளென்று கருதி, நடத்திக்கொண்டு வந்தால், அப்பொழுது 17½கோடி மக்கள்தான் இந்தியாவில மனிதர்களெனவும், பாக்கி 17½கோடி மக்கள் மிருகங்களெனவும், தான் கூறவேண்டும். நாம் அவர்களுக்கு வேண்டியகல்வியை புகட்டாமலும், அறிவு வளர்ச்சிக்கான முறைகளில் அவர்களுக்குச்சுதந்திரமும், விடுதலையுமளிக்காமலும், அவர்களை வெறும் சட்டி அரண்டிகளாகச் செய்துவிட்டோம். சுதந்திரத்தாய்மார்களாக நமது பெண்களிராவிட்டால் அவர்களது குழந்தைகளும் சுதந்திரமில்லாதவர்களாகவே தானிருப்பார்கள். ஆகையால், பெண்களுக்குத்தான் நாம் முதன் முதலிக் விடுதலையளிக்க வேண்டும்.

விதவைகளின் முன்னேற்றம்:

விதவைகளை நாம் இன்னாட்டில் ஒன்று சிறைப்படுத்தி அடிமைகளாக இருக்கவும், இல்லாவிட்டால் விபசாரிகளென இருக்கவுந்தான் இந்நாட்டில் இடமிருக்கிறது. ஆனால் புருஷர்களையோ நாம் அவ்வாறாக நினைப்பதேயில்லை 'அவனுக்கென்ன ஐயா! அவன் ஓர் ஆண் பிள்ளை. அவன் ஈக்குச்சமானமானவன் எந்த இடத்துக்கும் போகலாம், என்னவும் செய்யலாம்' என தைரியமாக உரைக்கின்றோம். விதவைகளை மட்டும் நாம் பலவந்தப்படுத்தி, ஜெயிலில் வைத்திருப்பதுபோல் வைத்து, அவர்களை வெளியே விடாமல் காவல் செய்து வருகின்றோம். இது ஒருக்காலும் நியாயமாகாது. மேலும், 'கடவுள் செய'லெனவும் ஒரு காரணத்தைக்காட்டி அவளைப்பத்திரமாகக்காப்பாற்ற வேண்டியவர்களாகின்றோம். அவள் சிறிது மீறி நடந்துவிட்டால உடனே அவள் 'விபசாரி' என சுலபமாகவே கூறிவிடுகிறோம். இயற்கைத்தத்துவங்களுக்கு ஆளாகாமல் இருப்பது என்பது இவர்களுக்கு விரோதமான காரியங்களாலேதான் முடியும். ஆகவே ஒருமனிதஜீவன் இயற்கை உணர்ச்சிக்கு விரோதமாய் இருப்பது என்பது கொடுமையான காரியமாகும். விதவைகளால் நாட்டுக்கு வெகு தொல்லை. மனித சமூகத்துக்கு வெகு கவலையானதாகும் ஒருகுடும்பத்தில் ஒரு விதவையிருந்தால அக்குடும்பத்திற்கு எப்படியும் இழிவு ஏறபட்டேதீருகின்றது. விதவைத்தன்மையை காப்பாற்றுவது பெரிய கஷ்டமாகத்தானிருக்கும். ஆகையால பெண்கள் விடுதலையிலும், கைம்பெண்களின் விடுதலையே மிக முக்கியமானதாகும். ஆகையால் அவர்களுக்கு உடனே விடுதலையை அளியுங்கள், விடுதலையளிப்பதாக உரைப்பதில் மட்டும பிரயோஜனமிருப்பதாக நினைத்துக்கொள்ள வேண்டாம. இங்குள்ள வாலிபர்கள் யாவரும, ஒன்றாகச் சேர்ந்து 'இனி விதவைகளையேதான் விவாகம செய்துகொள்ளுவோம்' எனத்தீர்மானித்து, விதவைகளையே விவாகம செய்து கொள்ள முன்வரவேண்டும. இது ஒரு வகுப்பாருக்கு மட்டும் நான் கூறுவதாக எண்ணவேணடாம். எல்லாஜாதியாருக்குமே இது உரைக்கப்பட்டதாகும்எனபேசியபின் மக்களைத்தொழிலநிலைமையில எவ்வாறு அபிவிருத்தி செய்யவேண்டு'மென்பதையும கூறியபின்னர் திருவாளர்கள் சோளவந்தான் பட்டாபிராமய்யர், சுபரமணிய முதலியார், ஆகியவர்கள் பேசிய பின் அக்கிராசனர் முடிவுரைகூற திரு வி. எஸ். மணி அவர்கள் அனைவருக்கும் வந்தனோபசாரம் சொல்ல இரவு 7-30 மணிக்குக் கூட்டமினிது கலந்தது.

(8ம பக்கத் தொடர்ச்சி)

னார்கள். முறையே மருத்துவர் வாசகசாலை "திராவிடன்" "குடி அரசு" "குமரன்" முதலிய வைகளுக்கு நன்கொடைகள் அளிக்கப்பட்டதென ஒரு நிருபர் எழுதுகிறார்

திருநெல்வேலி மாதாமேலத் தெரு பி. பொன்னம் பண்டிதரவர்கள் இளைய மகன் திரு. சித்திரையவர்களுக்கும மேலச்சேவல் மா. பெருமாள் பண்டிதரவர்கள் இளைய மகள் சுடலியம்மாளுக்கும 4—6—31 வியாழயன்று காலை 8 30 மணிக்கு திருமணம் நடைபெற்றது. அம்மணத்தை முறையே உயர்திரு டாக்டர் பி. சங்கரனவர்களும் உயர்திரு மா. க. வேலாயுதமவர்களும் வந்திருந்து நடத்தினார்கள். மணமானது சுத்த சுயமரியாதை முறையில மூட பழக்கவழக்கச் சடங்குகளின்றி வெகு திருத்தத்துடனும வீண் கால தாமதமின்றியும நடந்தேறியது தம்பதிகள் பெரியோர்களால் ஆசீர்வதிக்கப்பெற்ற பின்னர் 'சுயமரியாதைத் திருமணம்' என்பதைப் பற்றி டாக்டர் பி. சங்கரனவர்களும் 'சிக்கனம் நமக்கு அவசியம' என்பதைப்பற்றி மா. க. வேலாயுதமவர்களும் சொற்பொழிவாற்றினார்கள் மருத்துவன் வாசகசாலை, "திராவிடன்" "குடி அரசு" முதலிய வைகளுக்கு நன்கொடையளிககப்பட்டபின் சந்தண தாம்பூலம் கற்கண்டுகள் வழங்கி ஒரே விருந்தும் நடத்தி பழைய வழக்கமாகிய மொய் முறை சுருள் முதலிய வைகளை அறவே நீக்கியும் சுத்த சுயமரியாதை முறையில் நடத்திக்காண்பித்த மணமகன் குடும்பத்தாரின் திரமமிகவும போற்றத்தக்கதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

குறிப்பு:- மேற்கண்ட இரண்டு திருமணங்களின் ஞாபகார்த்தமாக ரூபாய்இரண்டு நன்கொடைக்காக வந்தனத்துடன் வரப்பெற்றோம. ப-ர்

சித்தர் பார்மஸி

விஷகடிகளினாலுண்டான ஊரல் தடிப்பு பதது குணமடையும். 3 நாள் சாப்பிடும் விஷமை ரூ. 2. சூதபற்பம், நாட்பட்ட வயிற்று வலி, வாய்வு ரோகங்கள் 7 வேளையில் குணமடையும். ரூ. 3-8-0. சேட்லாக் இனும்.

Dr. P. M.
சங்கரலிங்கம் பிள்ளை,
கோவிற்பட்டி, S. I. R.

முன்னுக்குப்பின் முரண்பாடு.

(டி. ஜி. வேங்கடாசலம்)

திருவள்ளுவநாயனாரால் ஆக்கப்பட்ட தமிழ் வேத மென்னும் திருக்குறளில் இந்த உலகத்தில் மனிதன் கண்ணால் பார்த்து மனதால் அறிந்து அறிவால் நிதானித்து மெய்யால் அனுபவிக்கத்தக்கதாகிய அறம்-பொருள்-இன்பம் ஆகிய மூன்று திட்டங்களையே வகுத்து 1330 குறட் பாக்களாகக்கூறியுள்ளார். மற்ற வேதங்களும் உபநிஷத்துக்களும் மனித இல்வாழ்க்கைக்கு அடிப்படையானது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய சதுர்வித புருஷார்த்தங்களே யென்று ஓலமிட்டுக்கொண்டிருக்க, தமிழ் வேத ஆசிரியராகிய திருவள்ளுவர் முதல் படிகள் மூன்றைச்சொல்லி வீட்டு நாலாவதாகிய வீடு அதாவது மோக்ஷம் என்னும் ஓர்படியை விட்டு விட்டதானது நமது வள்ளுவர் மோக்ஷத்தை ஒப்புக்கொள்ளவில்லை என்பதோடு இந்த உலக வாழ்க்கைக்கு மனிதன் தன்னைத்தயாராக்கிக்கொள்வதே மனிததர்மமென்னும் பெரும் நோக்கத்தையே அடிப்படையாகக்கொண்டு தமது நூலை எழுதியிருக்கிறார் என்பது வெள்ளிடைமலை போல் தெரிகிறது. எனினும் இந்த வித வெளிப்படையான பெரும் நோக்கம் கொண்ட திருவள்ளுவர் தமது நூலில் காமத்துப்பால் 111-வது அதிகாரத்தில் புணர்ச்சிமகிழ்தல் என்னும் தலைப்பின்கீழ் 1103-வது குறளாக:-

"தாம்வீழ்வார்மென்தோள்
துயிலின் இனிது கொல்
தாமரைக்கண்ணான் உலகு"

அதாவது (தம்மால்) விரும்பப்படும் மகளிரது மெல்லிய தோள்களில் (துயிலும்) துயிலைக்காட்டிலும் இந்திரனது(பொன்நாடுபெரியதோ?) என்னும் கருத்துக்கொண்ட சூத்திரத்தைச்சொல்லி வைத்திருக்கிறார். இவை முன்னுக்குப்பின் முரண்பாடாகவேயிருக்கிறது. மோக்ஷத்தில் நம்பிக்கையில்லாது, அந்தவிஷயத்தையே அடியோடு விட்டுவிட்டவள்ளுவர் அதிலும்பொய்யாமொழிப்புலவர், தாமரைக்கண்ணான் உலகு என்னும் மோக்ஷலோகத்தை ஏன் உவமையாகக்குறிப்பிடவேண்டும்? ஒருக்கால் "தாமரைக்கண்ணான் உலகு" என்பதற்கு மோக்ஷலோகம், அல்லது இந்திரனுடைய பொன்நாடு என்னும் கருத்தல்ல. இந்த உலகத்திலேயே ஒருபோக போக்யமுள்ள ஒருபகுதியைக் குறிப்பிட்டிருக்கவேண்டும். என்று வைத்துக்கொள்வோமென்றால் அந்த விதபோகபோக்கியமுள்ளநாட்டிலுள்ளவனுக்கு அந்தவிடப்போக போக்கியம் அதிகமானதாயுள்ள ஒருஉலகம் அதுவும் இந்தஉலகத்திலேயே கண்ணுக்குத்தோன்றக்கூடியதாக விருக்க வேண்டும். இப்படியே போகப்போக முடிவில்லாமலே போகும். அதனால்தான் எல்லா உரையாசிரியரும் தாமரைக்கண்ணான் உலகு என்பதற்கு மோக்ஷலோகம் அல்லது இந்திரனுடைய பொன் நாடு என்றே உரைஎழுதியிருக்கின்றனர். இதிலிருந்து நூலாசிரியரின் கொள்கைக்கும்பின் அவர் சொல்லியுள்ள சூத்திரத்தின்கருத்துக்கும் பெரும் வித்தியாசங்கள் காணப்படுகின்றன. அதோடு இந்தவிஷயம் ஆராய்ச்சிக்காரர்களுக்கும் பெரும் மலைப்பையுண்டு பண்ணத்தக்கதாயிருக்கிறது. ஆகவே இது விஷயத்தில் உண்மையெப்படியிருக்க வேண்டு மென்பதைப்பற்றிப்பலரான் சிந்தித்தும் பல அறிஞரைக்கேட்டும் சந்தேகம் தெளிந்தபாடில்லையாகையால் இந்தப்பெரும் சந்தேகத்தைச் "சித்திரபுத்திரன்" தான் தீர்த்துவைக்க வேண்டுமெனப்பணிவுடன் வேண்டுகிறேன்.

மற்றொன்று

அறத்துப்பால் அதிகாரம் 6ல் "வாழ்க்கைத்துணை நலம்" என்னும் தலைப்பின் கீழ்

'தெய்வம் தொழாள் கொழுநற்
றொழுதெழுவாள்
பெய்யெனப்பெய்யுமழை"

அதாவது ஒரு பெண்ணானவள் (வேறொரு) தெய்வத்தை வணங்காளாகி (தன்) கணவனைத்தொழுது (பின் உறங்கிமுன்) எழுபவள் "பெய்யெனப் பெய்யும் மழை" என்னும் கருத்துக்கொண்ட சூத்திரமொன்றுள்ளது. இந்தச் சூத்திரத்தையும், இதன் கருத்தையும் பார்ப்போமானால் திருவள்ளுவர் ஒரு அசல் சுயமரியாதைக்காரர் என்றே எளிதில் தீர்மானிக்கலாம். எப்படியெனில் ஒரு பெண்ணுக்கு அவள் புருஷனே கண்கண்டதெய்வமென்றும், அவனைத் தவிர வேறு தெய்வங்களைத் தொழாது அவனையே தெய்வமாகப் பாவித்து வரும் உண்மையான நேசத்தன்மையானது வானத்திலுள்ள முகிலைக் கூடக் கரைந்துவிழச் செய்கின்றதென்றால், அதேபோல் ஒன்றுக்கொன்று பந்தப்பட்ட அதாவது பிள்ளைக்கு மாதாப்பிதாக்களும், சிடனுக்குக் குருவும், பிரஜைகளுக்கு அரசனும், கண்கண்ட தெய்வங்களாக ஏற்பட்டு, அவர்களையே பக்தி சிரத்தையோடு வணங்கிவரவேண்டியதே தவிர கண்ணுக்கும், மனதிற்கும், அறிவிற்கும் எட்டாத ஒரு வஸ்து அல்ல! அல்ல!! ஒரு வார்த்தையைப் பலவிதமான கோமாளித் தனமெல்லாம் செய்து வணங்கி வழிபடுதல் என்னும் அறியாமையைச் சுயமரியாதை இயக்கம் கண்டிப்பதுபோல நமது வள்ளுவரும் கண்டித்திருக்கிறார். அம்மட்டோ! மற்றோரிடத்தில் அதாவது அவருடைய நூலில் பொருட்பால் அதிகாரம் 62ல் ஆள் வினையுடைமை என்னும் தலைப்பின்கீழ்

"தெய்வத்தாலாகா தெனினும்
முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்"

என்னும் சூத்திரத்தையும் சொல்லியிருக்கிறார். இந்த சூத்திரத்தில் திருவள்ளுவர் கடவுளைப்பற்றிக் கொண்டுள்ள முடிவான அபிப்பிராயம் தெற்றென விளங்குகிறது. அதாவது அவர் சூத்திரத்தில் "தெய்வத்தாலாகாது" கடவுளால் (ஒரு காரியமும்) ஆகாது-முடியாது. என்றாலும் "உன் தேகத்தையும் இடைவிடாமுயற்சியையும், கொண்டு பாடுபட்டால் உன் காரியத்தை முடித்து அதன் பலனை அடையலாம்" என்பது மறுக்கமுடியாத கருத்து.

ஆகவே மேற்கண்ட முதல் சூத்திரத்தில் பெண், புருடனைத் தவிர வேறு கடவுள் என்பவைகளைத் தொழவேண்டியதில்லை என்று கூறினார். மற்றொரு சூத்திரத்தில் தெய்வத்தால் ஒரு காரியமும் ஆகாது என்று கூறிவிட்டார். இதிலிருந்து திருவள்ளுவர் கருத்தும் சுயமரியாதை இயக்கத் தத்துவங்களும் ஒன்றுபட்டதாகவேயிருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட திருவள்ளுவரை ஒரு பெரும் ஆஸ்திகர் என்று கூறி அவருக்குப் பலவிடங்களில் கோவில் கட்டிப் பூஜைகளும் செய்து வரப்பட்டு வருகிறது. அவரும் தமது நூலில் முதல் அதிகாரமாகிய கடவுள் வாழ்த்து என்னும் அதிகாரத்தில் "கடவுளை அடையவேண்டும், அப்பொழுதுதான் மனிதன் துன்பத்திலிருந்து விடுபடுவான், பிறவிக்கடலைத்தாண்டுவான்" என்பன போன்ற கருத்துக்களைக் கொண்டு 10 பாட்டுகள் சொல்லியிருக்கிறார். இவைமுன்னுக்குப்பின் முரண்பாடாகவே யிருக்கிறது. ஆகையால் இந்த சந்தேகத்தையும் சித்திரபுத்திரன் தான் தீர்த்துவைக்கவேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்ளுகிறேன்.

பஞ்சமா பாதகங்கள்

எவை?
ஏன் நிகழ்கின்றன?
அவற்றை நிறுத்தச் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அணா ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

வாலிபர்களே! நமது வேலை நடக்கட்டும். போலிக்கூச்சலைப்பொருட்படுத்த வேண்டாம்.

[தேன்மாவை A. சோமசுந்தரன்.]

இக்காலத்தில் உலக மெங்கும் வாலிபர்களின் முயற்சியே வெற்றி பெற்று வருகிறது. வீர வாலிபர்களின் பேருதவியாலும் அரிய தொண்டினாலும் ஆச்சரியப்படக்கூடிய திருத்தங்கள் பெற்று ஒவ்வொரு நாடும் முன்னேறிச்செல்கின்றன. உணர்ச்சி மிக்க வாலிபர்களின் தேவையை உல்லங்கனஞ் செய்த எந்த நாடும் நாகரீக மற்று மீளாத அடிமைத்தனத்திலும், அறியாமையிலும் அழுந்திக்கிடக்குமேயன்றி தனி அரசு பெற்று வாழ முடியாது. ஆகவே நமது நாட்டின் நலத்திற்கும் சமூக சீர்திருத்தத்திற்கும் வாலிபர்களின் உழைப்பும் உதவியுமே அதிகம் தேவைப்படுவதாகும். ஒரு சில முதியவர்கள் வாலிபர்களின் இயக்கத்திற்கு தலைமை பூண்டிருப்பினும் அவர்கள் வாலிப உள்ளம் படைத்திருந்தாலன்றி கோரிய லட்சியம் ஈடேறாது. அதுபோலவே உடல் வாலிபமாயும் உள்ளம் கோழைத்தனமாக இருப்பதிலும் பயனில்லை. இரும்பைப் போன்ற தசையும் எஃகைப்போன்ற உறுதியுமுடைய வாலிபர்கள் தான் நமது நாட்டிற்கு தேவையாகும்.

இந்தியாவில் தோன்றிய இயக்கங்கள், சங்கங்கள் பலவற்றுள் ஆங்காங்குள்ள நகரவாசிகளான வாலிபர்களே அதிகமாகக்கலந்து வேலை செய்கிறார்களேயன்றி, கிராமாந்திர வாலிபர்கள் இவ்விஷயங்களில் கண்ணோட்டஞ்செலுத்துவதில்லை, அவ்வுணர்ச்சு தோன்றுவதுமில்லை. மேல் நாடுகளிலோ கிராமாந்திர வாலிபர்களின் உழைப்பே ஒவ்வொரு இயக்கத்தையும் நடத்திச் செல்லக்கூடிய வலிமையுடையதாயிருக்கிற தென்பது கண்கூடு, அவர்களுக்கு அத்தகைய உணர்ச்சியையும் ஆர்வத்தையும் குழந்தைப்பருவத்திலிருந்தே கற்பிக்கப்பட்டும் வருகிறது. ஆயிரத்திற்கு ஐம்பதுபேர்கள் கூட சரிவர படிக்காத இந்தியாவில் அவ்வுணர்ச்சி எங்கிருந்து உண்டாகும்? உண்மையைக் கூறுவோமானால் தென்னாட்டுக் கிராமவாசிகள் அநேகருக்குச் சமயத்தைப்பற்றியோ, மதத்தைப் பற்றியோ கவலை கிடையாது. என்றாலும் அவர்கள் சமயவாதிகள் போலும், மதவாதிகள் போலும் தங்களைப்பாவித்துக்கொள்வதுதான் விந்தையாகும். ஆகவே அவர்களைச் சீர்திருத்தி உலகானுபவம் பெறச்செய்வதற்கு வாலிபர்கள் பிரசாரஞ் செய்வதுடன் அமையாது வருங்கால இளைஞர்களின் நன்மதிப்பையடையத்தக்க முறையில் போதனாமுறைப் பாடசாலைகளையும் அமைக்க முயலவேண்டும்.

எந்த ஒரு இயக்கம் உலக இயக்கமாக மாறும் மகத்தான சக்தி படைத்ததோ அவ்வியக்கமே இன்று இந்தியாவிற்கு வேண்டற்பாலது என்பதை நாம் சிறிது காலமாக உணர்ந்து வருகிறோம்.

சமீபகாலத்தில் நமது தென்னாட்டில் தோன்றிய சமதர்ம சூரியனான சுயமரியாதை இயக்கம் உலகம் போற்றும் ஓர் இயக்கமேயாகும். பிரான்சு, இத்தாலி, ருஷியா, துருக்கி, ஐரோப்பா, சீனா, ஜப்பான் முதலிய அந்நிய நாட்டு மக்களால் அவ்வியக்கம் நன்கு வரவேற்கப்படுவதிலிருந்து அதன் பெருமை வெளிப்படுகின்றதன்றோ? ஆனால் இந்தியாவிலுள்ள ஓர் கூட்டத்தார் மட்டும் ஏன் அஃதை பகிஷ்கரிக்கவேண்டும்? அவர்களுக்கு உதவியாகப் படித்துப் பட்டம் பெற்ற அறிஞர்களும் ஏன் தங்கள் மனச்சாட்சிக்கு விரோதம் செய்யவேண்டும்?

சுயமரியாதை இயக்கம் நாஸ்திக இயக்கமென்றும், அறிவற்ற இயக்கமென்றும் பழி கூறுகிறார்கள். ஆனால் அத்தகைய பழிக்குக் காரணமான சுயமரியாதை இயக்கம் கூறுவது முற்றும் பொருத்தமுடையவைகளே என்பதையும் அறிஞர்கள் ஒப்பக் கூடியதுதான் என்பதையும் இங்கு நிரூபிப்போம்.

அதன் கொள்கைகளான தீண்டாமை ஒழித்தல், ஜாதி பேதத்தை நீக்குதல், கடவுள் பெயராலும், மதத்தின் பெயராலும் இழைக்கப்படும் அநீதியைத் தொலைத்தல், கைத்தொழில்களின் அவசியத்தை உணர்த்துதல், மாதர்களுக்குச் சம உரிமை அளித்தல் பால்யவிவாகம் முதலிய காரியங்களைச் செய்வதும், மதுக்குடி, பொட்டுக்கட்டுதல், மூடக்கொள்கை, புரோகிதப்புரட்டு ஆகியவற்றைக் கண்டித்தல், ஆலய உரிமை சகலருக்கும் ஒன்றுபோல் வேண்டல் என்பன அதன் முக்யம்சங்களாகும். இக்கொள்கைகளை நாட்டில் பரப்பி சமதர்மத்தை உண்டாக்க முயலுபவர்களைத்தான் பண்டிதர்களும், பார்ப்பனர்களும் கண்டிக்கின்றார்கள். மூடர்களென்றும், பிழைப்பற்றவர்களென்றும், தூற்றுகிறார்கள். ஆனால் இதே கொள்கைகளுக்கு ஆதரவு காட்டி பிரசங்கங்கள் புரிந்த சிலரை இவர்கள் ஏன் அவ்வாறு கூறுவதில்லை? ஈரோட்டு இராமசாமியார் சொன்னால் மட்டும் ஏன் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளுகிறார்கள்? இஃது அழுக்காறென்னும் அசட்டுக்குணம்போலும்!

சைவப் பண்டிதர்களால் பெரிதும் போற்றிப் புகழப்பட்டுவரும் "சுந்தரமூர்த்தி நாயனார்" என்பவர் கலப்பு மணம், காதல் மணம், விதவை மணம், மறு மணம், பொட்டறுப்பு மணம் செய்து கொண்டவரன்றோ? இவரைப் பண்டிதர்கள் என்ன செய்து விட்டார்கள்? இவரை வணங்குதல் பண்டிதர்களுக்குப் பெருமை குறையவில்லையா? இவரை நால்வர் ஹோதாவிலிருந்து தள்ளிவிடுதல்தான் பண்டிதர்களின் நேர்மையைக் காட்டும் என்பதை உணர்வார்களாக.

"இராமாயணத்"திலும் சுயமரியாதை புகுந்து கொண்டிருப்பதைப் பண்டிதர்கள் இன்னும் தேடிப்பிடிக்கவில்லை போலும். வாலியைக்கொன்று 'தாரை'யை சுக்ரீவனுக்கும், இராவணனைக் கொன்று 'மண்டோதரி'யை விபீஷணனுக்கும் பொருத்திவைத்த அயோத்தி ராமனை பண்டிதர்களும், பார்ப்பனர்களும் வணங்குவது சரியல்லவே. கொலையோடு கூடிய விதவைமணமன்றோ அயோத்தி ராமன் நடத்திவைத்தது? நாங்கள் கொலை செய்யும்படி யாரையும் தூண்டவில்லையே! இனிபண்டிதர்கள் இராமாயணத்தையோ இராமனையோ என்னசெய்யப் போகிறார்கள் பார்ப்போம். ஒருவேளை அதிலும் ஏதாவது தத்துவார்த்தம் புதைந்து கிடக்கலாம். அதுதான் போகட்டும்.

திருவருட் பிரகாச வள்ளலார் என இராமலிங்க சுவாமிகள் மதத்தைப்பற்றி என்னசொன்னாரென்பது பண்டிதர்களுக்குத் தெரியும் "கூறுகின்ற சமயமெல்லாம் மதங்களெல்லாம் பிடித்துக்கூறுகின்றார். பலன் ஒன்றுங்கண்டறியார் வீணே நீறுகின்றார். மண்ணாகி நாறுகின்றார் அவர்போல் நீடுலகில் அழிந்துவிட நினைத்தேனோ" "கலை உரைத்த கற்பனையே நிலையெனக்கொண்டாடும் கண்மூடிவழக்கமெலாம் மண்மூடிப்போக" "சாதியும் மதமும் சமயமும் பொய்" என்றல்லவோ முழக்கினார் இவரைக்கழுவிலேற்றுவதுதானே. புனிதச்சமணர்களைக் கழுவேற்றியசம்பந்தரைப்புகழும் பண்டிதர்கள் இவரையும் அவ்வாறு செய்திருந்தால் தங்கள்வழித்தோன்றல்களின் புகழ்ச்சிக்கு இலக்காயிருக்கலாமன்றோ?

'இப்பொழுது இந்தியாவின் மதமானது 'தொடாதே' என்பது, தவிர வேறு ஏதாவது உண்டா? இந்த மதத்தை வேறெந்த ஜனங்களும் ஒப்புக்கொள்ளமாட்டார்கள். லட்சக்கணக்கான ஜனங்கள் பசி நோயினாலும், அறிவின்மையினாலும் பீடிக்கப்பட்டிருக்கிறவரையில் அவர்களுடைய செலவில் வித்தையின்று அவர்களைக்கொஞ்சமேனும் கவனியாமலிருக்கிற ஒவ்வொருவனையும் துரோகி என்றே சொல்லுகிறேன். எவனுடைய இருதயம் ஏழைகளுக்காக இரத்தம் பெருகுகிறதோ அவனையே நான் மகாத்மாவென்கிறேன்' என்றும் 'அறிவிருத்திக்கு எப்பொழுதும் எதிரிடையாயிருக்கின்ற புரோகிதர்களை வெறுத்துத்தள்ளுங்கள். ஏனென்றால் அவர்கள் ஒருபொழுதும் சீர்படமாட்டார்கள். அவர்களுடைய இருதயங்கள் ஒருபொழுதும் விலாசமாகா. அவர்கள் நூற்றுக்கணக்கான வருடங்களாயுள்ள மூடக்கொள்கை, கொடுமை இவைகளினின்றும் முளைத்தெழுந்தவர்கள் வைதீகக்கொடுங்கோன்மையைக்களைந் தெறியுங்கள்' என்றும் 'நம்மில் ஆயிரக்கணக்கானவர்கள் தமது வாணாள் முழுதும் ஓங்காரத்தைத்தியானித்துக்கொண்டு ஈஸ்வர நாமத்திடமுள்ள பக்தியால் மெய்மறந்து உனது இஷ்டப்படியே நடக்கட்டும் உன்னிடத்தில் பரிபூரண சரணாகதியடைந்துவிட்டேன் என்று கூச்சலிடுக்கொண்டிருந்தும் ஒன்றையுமடையா விருப்பதை நீங்கள் [illegible]! என்று பிரசாரம் செய்துவந்த சுவாமி விவேகானந்தரைப் பண்டிதக்கூட்

டமும், பார்ப்பனக்கூட்டமும் என்னசெய்தது? சுவாமிகள் சொன்னது குற்றமில்லையானால் நாங்கள் சொல்வதுமட்டும் எப்படிக் குற்றமாகும்? 'கலப்புமணம் ஆட்சேபிக்கத் தகுந்ததல்ல. ஒரு பார்ப்பனரல்லாதவன் ஒரு பார்ப்பனப் பெண்ணை மணந்து கொள்ளலாம்'' தீண்டாமை ஒழியாதவரை இந்தியா சுதந்திரம் பெற ' முடியாது'' "உங்களை (ஆதிதிராவிடர்களைப்) பிறப்புக்காரணமாகத் தடுக்கப்படும் கோயில்களில் கடவுள் இல்லை'' தென்னாட்டிலுள்ள கோவில்கள் பலவேசை வீட்டிற் கொப்பாகப் பாவிக்கப்படுகிறது' என்று மகாத்மாகாந்தியும்' தாங்கொணாத கொடுமைகளினின்றும் இந்துக்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள விரும்பினால் ஜாதிப்பிரிவுகளை அவர்களே குழிதோண்டிப் புதைத்து தம்மைத் தாமே ஒழுங்கு படுத்திக் கொள்ளட்டும்' என்று கவிதாகூரும், 'ஜாதிய தர்மமென்பது நம் வளர்ச்சிக்கு இடையூறாய் நிற்பதால் அதை வேரோடன் களைந்தெறிந்து காலத்திற் கேற்ற புதுத்திட்டத்தை தயாரிப்போம் என்று ஜவாரிலாலும் 'கலப்புமணம அதாவது ஜாதிபந்தை உடைத்து பொடியாக்கப்பட்ட விவாக தம்பதிகளை நான் மனப்பூர்வமாக ஆசீர்வதிக்கிறேன்' என்று சுவாமி சிரத்தானந்தரும்' 'ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்' 'மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' ஆண்களோடு பெண்களும் சரிநிகர்சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே' பார்ப்பானை அய்யரென்றகாலமும் போச்சே' 'எல்லாரும் ஒன்றெனுங்காலம் வந்ததே' தனி ஒருவனுக் குணவில்லையெனில் ஜகத்தினையழித்திடுவோம்' என்று பாரதியாரும் இதுபோலவே இன்னும அநேகர் கூறிச்சென்றனர். விரிக்கிற்பெருகும்.

மேலே கூறியவைகளுக்கு பண்டிதர்களும் பார்ப்பனர்களும் என்ன சமாதானம் சொல்லப்போகிறார்கள்? சுயமரியாதைக்காரர்களுக்குப் பயந்து அவர்கள் சொல்லவில்லையே ஈ. வெ. ராமசாமிப்பெரியார் சொல்லுவதைப் பார்த்து வேப்பெண்ணை குடிக்கும் குழாங்கள சுயமரியாதைக்காரர்களைக் கருவழிக்கக் கங்கணம் பூண்டிருக்கும குழாங்கள மதத்தையும சமயத்தையும் தாங்கிக் கொண்டிருக்குங்குழாங்கள் தெய்வத்தைக் காப்பாற்ற புறப்பட்ட குழாங்கள்மேலே சொன்ன பெரியார்களையும், அவர்கள் எழுதின நூல்களையும் என்ன செய்யப்போகிறார்களென்று கேட்கிறேன். போலிவாதம் பேசி இனியும் மக்களை ஏமாற்றமுடியாதென்பதை பண்டிதர்களும், பார்ப்பனர்களும், சிவநேயர்களும் நினைவில் வைத்துக்கொள்ளட்டும்

வாலிபர்களே! எவனொருவன் தன்மனசாட்சியைக்கொலை புரிந்து பிறரை வஞ்சித்தொழுக விரும்புகிறானோ அவனை நாம் மனிதரிற்கடையோனாய் மதிப்போமாக நமது வேலையில் நாம் சிரத்தையுடையவர்களாயிருப்போம். வீறுகொண்டெழுங்கள்! வீண்கூச்சலுக்குப் பயப்படவேண்டாம். நட்பிற் சிறந்த நண்பர்களே!

இத்தகைய திருமணங்களில் இந்திரன், அக்கினி தேவன், இயமதருமன், நிருதி தேவன், வருணன், வாயு தேவன், குபேரன், ஈசான மூர்த்தி என்ற எட்டு கடவுளார்கள். ஏழு ரிஷிகள், ஏழு தீர்த்தங்கள்' திருமூர்த்திகள், நவக்கிரகங்கள் உதவிகொண்டு ஹோமமும், சப்தபதியும் நடைபெறவேத வழக்கமாக இருந்தது. இவ்வழக்கங்கள் பயன்படும் முறை கொண்டில்லை எனக்கண்ட சுயமரியாதை சகாப்தம் இவைகளை ஒழித்து விட்டது. திருமணத்தை ஒப்பந்த மணமாக்கி விட்டது. ஆகவே முன்னோர்களின் திருமணம் ஒப்பந்த மணமல்லவோ? வென்று கேள்வியும் எழலாம். இந்நிலையை சற்று உணர்ந்து முன்செல்வோம். எட்டுதேவர்கள், கிளைவிளக்கு, குடவிளக்கு, புரோகிதன், தோழிப்பெண், மணமகன், மாப்பிள்ளைத்தோழன், பணப்பையாளன், அம்மி என அமர்ந்து, ஏழு ரிஷிகள், ஏழு கரகங்களாகவும், ஏழு தீர்த்தங்கள் ஒரு குடமாகவும், திருமூர்த்திகள் அரசாணிக்காலாகவும், நவக்கிரகங்கள் பாலிகைகளாகவும் அமைந்து ஓமப்புகையிலும் ஏனைய அனுசார வகையிலும் திருமணம் நிகழ்வது எவ்வகையில் ஒப்பந்தமாகும்? மொய் எழுதுவதை ஒப்பந்தமாகக்கொள்வதா? அரிசிஇறைப்பதை ஒப்பந்தமாகக் கொள்வதா? தோழிப்பெண் நிருதி தேவனின் பிரதிநிதியாக நிற்பாள். மணமகன் வருணனின் பிரதிநிதியாகி அமருவன். மாப்பிள்ளைத்தோழன் வாயு தேவனின் பிரதிநிதியாகி இருப்பான். இவ்வகையில் எண்மார்களும் எட்டுத்தேவர்களின் பிரதிநிதியாகி விட்டனர். இப்பிரதிநிதித்துவம் ஒப்பந்தமா? அப்படி ஒப்பந்தமெனக் கொள்வதாயினும், தோழிப்பெண், மணமகன், மாப்பிள்ளைத் தோழன், ஒப்பந்தகாரர்களாக காணப்படுகின்றார்களேயன்றி மணப்பெண் யாருடைய பிரதிநிதியாக அமைந்து தாலிகட்டிக்கொள்ள இசைந்தனள் என்பது இச்சடங்குகளில் இல்லை. எட்டுதேவர்களுக்கும் எட்டு பேர்வழிகள் பிரதிநிதியாகிவிடின், இப்பெண் யார் பிரதிநிதி? இவள் மாமனிற்கு அடிமை, மாமிக்கு வேலையாள், நாத்திக்கு பணிவிடையாளி, தாலிகட்டுபவனிற்கு பிள்ளை பெறும் இயந்திரம், சட்டி சுரண்டவும், வீடு கூட்டவும், சாணி தெளிக்கவும், மெழுகவும், எல்லோர்க்கு முன் எழுந்திருக்கவும், எல்லோர்க்குபின் தூங்கவும், எல்லோரும் சாப்பிட்டபின் கணவன் எச்சல் இலையில் சாப்பிடவும், ஒப்பந்தப்-படுத்தப்படும் ஓர் பொருளாகவேயுள்ளாள் என்பதை கவனித்து நோக்கினும் விளக்கும். அம்மியையும், உரலையும், அதன்மேல் வைக்கப்படும் விளக்கின் கடவுளார் பிரதிநிதிகள் என்று அமைத்த சாத்திர நுண்ணறிவு மணப்பெண்ணை ஒரு பிரதிநிதியென எக்கடவுளார்க்கும் அமைத்துவிடாத மதியின்மையை, மக்கள் உணர்ந்த பின்னரும் கையாடி வழமை எனக்கூறுவது அறிவுடைமையாகாது.

திருமணத்திற்கு ஆஸ்திகக்குழாங்கள் பிள்ளையார் சுழியில் ஆரம்பித்து பலதுணைகளையும் நம் மலைக்களையும் கொண்டு, அழைப்புப் பத்திரம்பிரகடனம் செய்வதில் இன்னார் மகன் இன்னார்க்கு, இன்னார் மகள் இன்னாரை திருமணஞ்செய்து கொடுக்க நிச்சயித்திருப்பதினால். அத்திருமண கங்கணத்திற்கும், ஹோமத்திற்கும் கங்கண விஸர்ஜனத்திற்கும் விஜயம் செய்து தம்பதிகளை ஆசீர்வதிக்கக் கேட்டுக்கொள்வர் ஆகவே இவ்வழைப்புத்தாளின் முதல் பகுதி ஒப்பந்தத்திற்கு சாட்சியமேயாகும். இருப்பினும் ஆழ்ந்து நோக்கின் இதன் ஊழல் விளங்கலாம். அதாவது முன்கூறியபிரகாரம் மணப்பெண் எக்கடவுளின் பிரதிநிதியுமாக மணப்பந்தலில் அமருவதில்லை என்பது விளங்கலாயிற்று. இப்பெண்தன்னை இன்னார் மகள் இன்னார், இன்னார் மகன் இன்னாரின் மனைவியாக இருக்க சம்மதித்தே கங்கணத்தைத்தன் கையில் புரோகிதனினால் கட்டும்படி சம்மதிக்கின்றனள். மணமகன் தன்னை மணப்பந்தலில் அமர்த்திக்கொள்ளும்போது வருணபகவானின் பிரதிநிதியாக அமர்ந்து அக்கடவுளாரின் பிரதிநிதிவேலைகளை உண்மையாக மனச்சாட்சி விரோதமின்றி நடத்துவதாகவே கங்கணத்தைக் கையில் கட்டிக்கொண்டு விவாக நாட்கள் முடிந்ததும் கங்கணவிஸர்ஜனம் செய்கின்றான். இதுவழமை என்பதை மறுக்கவல்லாரில்லை என்பது துணிவு. இதை சற்று ஆழ்ந்து கவனிப்பாம். வருணன் பிரதிநிதியாக கங்கணம் கட்டிக்கொண்ட மணமகன் மனைவியாகவாழ்நாட்களை ஈடுபடுத்த கங்கணம் கட்டிக்கொண்டுள்ள பெண்ணின், நாத்தி விளக்குபிடிக்க மேளசந்தடியில் அட்சதை புஷ்பமாரியிலும், கரகோஷத்தில் தாலிகட்டிய மணமகன், இப்பெண்ணை எவ்வொப்பந்தத்தில் தாலிகட்டினான். கங்கண விஸர்ஜனமாகியபின் இப்பெண் இவன் மனைவியாவதற்கோ அல்லது இக்கணவன் தன்னை இப்பெண்ணின் கணவன் எனக்கொள்வதற்குள்ள ஒப்பந்தம்யாது? என்பதை சற்று ஆலோசியுங்கள். இப்பெண் வருணனின் பிரதிநிதியினால் தாலிகட்டப்பட்டதினால் இவள் வருணனின் மனைவியாகிறாள். இன்னும் இக்கணவன் வருணனின் பிரதிநிதியாக தாலிகட்டுதல், பாலாடை, மோதிரம் தேடி எடுத்தல், அம்மிமிதித்த காலைதூக்குதல், அப்பளத்தைக்கன்னத்தில் அறைதல், பூச்செண்டை பெண்ணின் உடல உறுப்பினங்களில் படும்படியாக மெள்ளவோ, ஜோராகவோ, எறிதல், முதலிய அனாசாரங்களைச் செய்து, கங்கணம் அவிழ்த்தபின், இப்பெண்ணை தன் மனைவியெனக் கொள்ளுதற்கு உரிமைதான் யாது? இதுமணவினை ஒப்பந்தமாகுமா? அழைப்புத்தாளில் ஒப்பந்த நிகழ்ச்சி

சீர்திருத்தத் திருமணம்.

பினாங்கு இந்திய சங்கக்கட்டிடத்தில் சீர்திருத்தத்திருமணம் 7-6-31ந் தேதி மாலை 2-30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. சுமார் 500-பேர்களுக்கு மேலாகவே வந்திருந்தனர். மணமகன் வீட்டுச்சார்பாக திரு. ஜே. வி. ஆர். அருள் அவர்கள் வரவேற்பு உபன்யாசத்தையும், திரு. என். ராமசாமி அவர்கள் மணமகள் வீட்டுச்சார்பாக வரவேற்பு உபன்யாசத்தைக்கூறிமுடித்தபின் வழக்கறிஞர் திரு. பி சோமசுந்திரம் அவர்கள் தலைமைவகிக்கப்பட்டு தம் தலைமையுரையைக்கூறியபின், டாக்டர் என். கே. மேனன் அவர்களும் மற்றும் சிலர்களும் ஆங்கிலத்தில் திருத்தக்கூட்டுறவின் மேன்மையையும் சிக்கனத்தையும் மிக விரிவாக எடுத்துக்கூறினார்கள். அதன்பின் திரு. டி. ஆர். ரெத்தினம் அவர்களை தம்பதிகளுக்கு கூட்டுறவு இயற்ற தலைவரவர்கள் உத்திரவிட திரு. இரத்தினம் அவர்கள் பதினைந்து நிமிடத்தில் திருமதி காசியம்மாள் குருசாமியாருக்கும், திருமதி லீலாவதி சுப்பையனுக்கும், கூட்டுறவு முடித்து "மகாலிங்கம்'' எனும் இளைஞனால் பக்கவாத்தியத்துடன் சுயமரியாதை வாழ்த்துப்பாக்கள் பாடியபின் இட்டாவிலிருந்து திரு. வீரப்பன் அவர்களிடத்திலிருந்தும், சின்னைமருத்துவகுல சங்கத்தாரிடமிருந்தும், இந்திய மித்திரன் பிரதிநிதி ரெ. ராஜகோபாலரவர்களிடமிருந்தும், சிங்கை, முன்னேற்றம், ஆசிரியர் கோ. சாரங்கபாணி அவர்களிடமிருந்தும் இன்னும் சில விடங்களிலிருந்தும் வந்த வாழ்த்துத்தந்திகளையும், நிருபங்களையும் வாசித்தபின் ஓர் தேநீர்கச்சேரி நடைபெற்றது.

பின் மாலை அகில மலாயா தமிழர் சங்கெளரவ காரியதரிசி திரு. அற்புதானந்தா அவர்களின் தலைமையின் கீழ் ஒருகூட்டம் கூடியது. தலைவர் முகவுரையாகப் பேசியதாவது:—

குறிப்பிடப்பட்டிருப்பினும் தேவர்கள் ரிஷிகள், தீர்த்தங்கள், கடவுளார்கள் உறவினர் முன்னிலையில் நடத்தவைகள் யாது? வருணனின் பிரதிநிதியாக இம்மணமகன் இப்பெண்ணை திருமணம் நடத்தியதினால் இவள் வருணனிற்கே மனைவியாதல் வேண்டும். இவன் மனைவியாக ஒரு பெண்ணை இவன் மணக்கவேண்டுமென்றால், இவன் தன்னை ஒருவனின் பிரதிநிதியென ஏன் கங்கணம் கட்டிக்கொண்டு வருணனை எய்க்கவும், வேண்டும் என்பதுகேள்வி? எனவே இம்முறைகளை சுயமரியாதை சகாப்தம் ஒழித்து விட்டதே தவிர, திருமணத்தில் விஜயம்செய்யும் கடவுளார்களில் மனவெறுப்புகள் ஒன்றுமில்லை. இன்னும் இப்பெண் இனி மாமன்மாமி வீட்டில் செய்யவேண்டிய பணிகளுக்கு அறிகுறியாக விளக்கமாற்றையும், சாணிச்சட்டியையும், உலக்கையையும், திருகையையும், சுளகையும், வைத்து விளக்கமாற்றை விஷ்ணுவென்றும், சாணிச்சட்டியை சரஸ்வதி என்றும், உலக்கையை சிவனென்றும், திருகையை பார்வதி என்றும், சுழகை லக்ஷ்மி என்றும், போற்றி புரோகிதனிற்கு தாம்பூல தக்ஷணையளித்து இவைகளுக்கு தூபதீபனைவேத்திய தட்சணை அமைப்பினும் வெறுப்பதில்லை. இவைகள் கணவன் வீட்டில் பெண் செய்யும் வேலைகளின் பிரதிநிதிகள் என என்னைப் போன்றோர் வற்புறுத்தவும், பின்படமாட்டார். இந்நாட்களில் மணப்பெண்ணிற்கு உறவினர் வெகுமதி யளிப்பதில் கெடியாரம், தையல் மெஷின், சாப்பாட்டு மணி, மேஜை, நாற்காலி கொடுப்பதை அறிந்து வருகின்றோம். இவைகள் உபயோகமுள்ளவைகளாக இருப்பது போல் அவைகளும் இருக்கலாம். இதை விடுத்து குடவிளக்கு, கிளை விளக்கு, பாலிகை, சப்த கிரகம் முதலியவைகளின் அர்த்தம்தான் யாது என்பதும், அர்த்தமற்ற வழமையாகி விட்டது. அம்மியை மிதிக்கச்செய்து அகல்யை கதை சொல்லாதிருந்தால் அம்மியும், குழவியும் மணப்பெண், மிளகாய், மஞ்சள் முதலியவை உணவிற்கு அரைக்கவும், சீயக்காய் முதலியவை புதன், சனி நீராடுதல்களுக்கு அரைக்கவும் குறிப்பிடப்பட்டு அமைக்கப்பட்டுள்ளதெனக் கருதலாம். ஈசானமூர்த்தி இவைகளை கடவுளார் எனக் கருதுவதும் மடமையென சுயமரியாதை சகாப்தம் கொள்ளலாகிவிட்டது. ஆகவே சுயமரியாதைத் திருமணம் ஒப்பந்தத்திருமணமாகும். இதில் இன்னார் மகன் இன்னார் என்ற இருவரும் இன்னார் மகள் இன்னார் என்ற இருவரும் முறையே குழுமியுள்ளோர் முன் ஒப்பந்தம் செய்து கையொப்பமிடும் முறையேயாகும். இதற்குச் சாட்சியாக திருமணத் தலைவர் என்பார் இருக்கின்றார். இதைத் தவிர மற்ற நிகழ்ச்சிகள் சிற்றுண்டி என்றும், விருந்தென்றும், மாலை மாற்றுதல் என்றும், பட்டம் கட்டுதல் என்றும், வெகுமதி அளிப்பதென்றும், சுயமரியாதை இயக்கத்தின் பெயரால் நடைபெறுபவை அதிசீக்கிரம் ஒழிவுற்றுவிடலாகுமென்பதையும் திண்ணமாகக் கூறுவேன்.

திருமண ஒப்பந்தத்தின்பின் இவ்வியக்கத்தைச் சார்ந்த நிலையங்கள் சார்பாக இவ்வொப்பந்தத்தைக் கண்ணுற்று ஈடுபட்டுள்ள அத்தாட்சிக்காகவும், இவ்வொப்பந்தத்தில் முரண்கள் அமையுங்காலத்தில் சட்டமுறைச் சான்றுகளுக்கு ஒப்புரவு கொள்ள முன்படுவார்களாக இருக்கும் நிலைக்காகவும், மணமகளிற்கு மாலை சூட்டும் வழக்கம் அமைந்திருக்க வேண்டிய அவசியங்களுளவென நண்பர்கள் கருதுகின்றார்கள். ஆகவே இந்நிகழ்ச்சியுடன் சொற்பொழிவு நிகழ்ச்சிகளும் திருமண விஷயங்களை காண்பதற்கும் சீர்திருத்தச்சிக்கனமுறைகளைக் காண்பதற்கும் ஒன்றின்பின் ஒன்றாய் முன்பட்டுவரும் திருமணங்கள் சிறப்புகள் பெருகக் காரணக் கருவியாக விஷயவளங்கள் ஏற்பட அமைக்கப்பட வேண்டுமெனவும் நண்பர்கள் கருதுகின்றார்கள். ஆனது பற்றி இத்திருமணத்திலும் இவ்வகை ஒப்பந்தம் முடிவுற்றபின், இச்சொற்பொழிவுக் கூட்டம் கூடியுள்ளதற்கு என்னைத் தலைமை வகிக்கக் கேட்டுக் கொண்ட இத்திருமண வரவேற்புக்கழகத்தினர்களுக்கு எனது வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன் என்று பேசியபின், திருமதி வள்ளிநாயகியாரும், திருவாளர்கள் ரெ. ஐயாரு அவாகளும், எல். எஸ். மாலிம் அவர்களும், த. வி. செல்லையா அவர்களும், எம். கே. மகமதுகான் அவர்களும், டி. ஆர். தாஷன் அவர்களும்; நாகை, செல்லப்பன் அவர்களும் பேசினார்கள். பின் தலைவர் முடிவுரைக்குப் பின் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வும் விடுதலை யடையவும் முடியவில்லையே. நான் $2\frac{1}{2}$ வருஷ காலமாய் சுயமரியாதைக் கட்சியில் சேர்ந்து தீண்டாமை, ஜாதி உயர்வு தாழ்வு கொடுமை விலக்கு ஆகிய வேலையில் அற்பதொண்டுகூட செய்ய முடியாமல் எனது குடும்பத்தில் வாதாடியும் ஆதிதிராவிடருக்கு இடம் கொடுக்க முடியாமல் போய் நான் தனியாக என்னளவில் ஆதிதிராவிட சகோதாருடன் சமத்துவத்துடன் பழகி வருகிறேன். எனது குடும்பத்தார்கள் என்னை விலக்க முடியாமலும் அவர்களை நான் விலக்க முடியாமலும் தயங்கினேம். ஒரு வழியிலும் சமத்துவத்துக்கு இடம் கொடுக்கமாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.

அருப்புக்கோட்டை ஆதிதிராவிடர் ஒருவர் இந்து மதத்தில் இருந்தும் அவரது தீண்டாமை ஒழியாமல் போனதினால் இஸ்லாம் மார்க்கத்தில் சேர்ந்து என்னை இன்று காலையில் வந்து வீட்டில் பார்த்து சலாம் செய்தார். எனது மனம் சந்தோஷத்துடன் வீட்டில் இடம் கொடுத்து பேசினேம். எனது தாயார், சகோதரன் எல்லோருக்கும் அவர் தீண்டாதவர் என்பது தெரிந்தும் மௌனம் சாதித்தார்கள். வந்த இஸ்லாமானவர் போனபின்னால் எனது தாயாரிடம் விஷயத்தை எடுத்துச்சொன்னேன். அதற்கு எனது தாயார் இவன் “பறையனாயிருந்தால்திண்ணையில் உட்கார்ந்ததற்கு திட்டுவேன், முஸ்லீமாகயிருப்பதால் எப்படி சொல்ல முடியு” மென்று கூறினாள். அப்பொழுது தான், இஸ்லாமானால் தான் ஆதிதிராவிடர்களுக்கு தீட்டு ஒழியும், மனிதத்தன்மை உண்டென்று நினைத்தேன். இந்து மதமென்ற வியாதியை நீக்கிஇஸ்லாம் மதம் என்ற நல்ல காற்று உடம்பில் பட்டவுடன் அவனுக்கு மனிதனுடன் கைகோர்த்து நடக்க சக்தி வந்தது. இந்து மத வியாதியால் பீடிக்கப்பட்டு மெலிந்து போயிருக்கிற மக்களை ஆதரவோடு கூட்டிக்கொண்டு காற்றும் வெளிச்சமுமுள்ள இஸ்லாம்கட்டடத்தில் கொண்டுபோய்விட்டு அடிமைகளை விடுதலை செய்யவேண்டியது அறிவுடையோர் கடமை. காற்று வெளிச்சமில்லாத, அறிவு விடுதலை இல்லாத இந்து மதம் பாழடைந்து போவது நிச்சயம். பிரிவினையால் கெட்ட மக்கள் ஒற்றுமை அடைந்தால் வெற்றி பெறுவது நிச்சயம். உலகத்தில் இஸ்லாம்மார்க்கத்தில் ஆண் பெண் சமத்துவம், விடுதலை, பணக்காரன், ஏழை, வித்தியாசமில்லாத மாதிரி மத விடுதலை பெற்று இருக்கிறது, அறிவுக்கு மதிப்பு கொடுத்ததினால்தான் சீர்திருத்தத்தில் முன்நின்று மக்கள் ஒற்றுமையுடனும் சுகத்துடனும் வாழஇஸ்லாம்மார்க்கம் அழைக்கிறது. சகோதரர்களே விழியுங்கள். விடுதலை! விடுதலை!! முதலில் உங்கள் சொந்த விடுதலை!!! பின்னால் இந்தியா விடுதலை. அறிவு காட்டுங்கள்.

வீரய்யா.

இங்கிலீஷ் ‘சிசர் விட்சு’ குதிரைப் பந்தய லாட்டரி.

14-10-31-ல் நியூவ் மார்க்கட்டில் ‘மியூட்சுவல் இளப்பாரால் நடக்கும் பிரைசுக்கு கொடுப்பது 90,000 பவுன். டிக்கட் 1-க்கு ரூ. 4-8-0. 3-க்கு ரூ. 13. டிக்கட்டிற்கு முன் பணத்துடன் முந்துங்கள்!

அதிகாரம்பெற்ற ஏஜண்டு:—

S. K. வரதராஜலு,

ஆனந்தநிலயம், திருச்செங்கோடு S. I.

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

“மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்”.

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாடசாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை

ஆராய்ச்சி அணிகலம் என்னும் தமிழ் நூல்:

கடவுளைப்பற்றிய மதங்களின் உண்மைக்கொள்கையின் பயனான கடவுட்பேறின்பம், உலகம் பொய்யென்ற உண்மையுணர்ச்சியிலடையும் அறிவின்பம், என்ற முடிவையும் இவைகளைத் தெரிந்துகொள்வதற்குக் கீழான படியாய் முன் அமைத்துள்ள சமூகக்கட்டுப்பாடுகள் அவ்வப்போதுள்ள காலத்தைப் பொறுத்ததெனவும் உலகவிவகாரங்களில் சுயநலத்தின் பொருட்டுச் சமூக; மத; அரசியற் கொள்கைகளிற் புகுத்தப்பட்டிருக்கும் திரிபான போலி அபிப்பிராயத்தையும் மற்றும் மக்களுக்கு எத்துறைகளிலும் வேண்டற்பாலதாய் சங்கதிகள்யாவையும் பலநூற் பிரமாணங்களோடு சுருக்கவகையில் 17 அத்தியாயங்களாய்த் தொகுத்து எளிய நடையில் எழுதப்பட்டது. 125 பக்கம். 8/4 சைஸ் புத்தகம் ஒன்றுக்கு ரூ. 0—12—0 மதுரை புதுமண்டபம் எல்லாபுக் ஷாப்புகளிலும் அடியிற் கண்ட என்னிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

தா. க. தாயுமான பிள்ளை
மேல்மங்கலம், வடுகபட்டி போஸ்டு, பெரியகுளம், மதுரை.

ரோஜா முத்தையா ...றக்கட்டளை

(4ம் பக்கத் தொடர்ச்சி)

...விடலாம் என்ற உணர்வு வந்தது. மதத்தை ஆதியில் உண்டாக்கியவர்கள் ஏதோ ஒரு நல்லெண்ணத்தோடுதான் உண்டாக்கியிருக்கலாம். அக்கால நிலைக்குப் பொருத்தமாகவே, கொள்கைகளையும் ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் அக்காலமும், இக்காலமும் ஒன்ருகுமா? என்பதுவே கவனிக்கத்தக்கது. வர, வர, காலச்சக்கரம் மாறவும், அதற்கேற்றபடி மக்கள் அறிவு அபிவிருத்தியடையவும், அறிவு விளக்கம் ஆக, ஆக வாழ்க்கைமுறை சீர்பட்டுக் கொண்டும் வரும்போது, அநேகநாட்களுக்கு முன் ஏற்பட்டது என்ற ஒரு காரணத்திற்காக, ஒன்றைக் குரங்குப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு வாழவேண்டுமென நாம் விரும்பினோமானல், நம்மைப் போன்ற பைத்தியக்காரர்கள் உலகில் எம்மூலையிலும் கிடையாதென்ற சொல்லுக்கு வெகு விரைவில் ஆளாவோம். ஒரு இருபது வருடங்களுக்கு முன்னால், ரயில் வண்டி கிடையாதென்பதற்காக, தற்போது அதில் பிரயாணம் செய்யாது, அதை பகிஷ்கரித்த மக்களை இதுவரை யாம் காணவில்லை. எனவே, மதம் என்பது பல்லாண்டுகளுக்குமுன் ஏற்பட்டது. அதன் கட்டுதிட்டங்கள், எத்தகையதாயிருப்பினும், எவ்விதக் கொடுமைகளை உண்டாக்கிய போதிலும், அதை அனுபவித்துத்தான் தீரவேண்டும் என்பது அறிவுடைமையாகாது. இதுபோலவே சட்டங்கள் என்பவைகளின் நிலைமையுமாகும். மக்களுக்காகசட்டங்களேயொழிய, சட்டங்களுக்காக மக்களில்லை. தன்னலத்தின் பொருட்டுவகுத்த சட்டங்களின் கொடியநிழலின் கீழ்தான் பெண்மக்கள் வாழவேண்டுமென்று இன்றும் கூறப்பட்டு வருவது நாம் அறியாததல்லவே? ஆண்மக்கள் தொகுத்த முட்டாள் தனமான சட்டங்களுக்குப் பெண்மக்களும், சாதி வெறிபிடித்த சண்டாளர்கள் வகுத்த, அக்கிரம சட்டங்களுக்குத் தாழ்த்தப்பட்ட மக்களும், எத்தனை காலத்திற்குத்தான் அடிமைப்பட்டு இருக்கமுடியும்? இக்கொடிய சட்டங்களை சம்மட்டி கொண்டுத் தூள்தூளாக்கித் தகர்த்தெரியாமல் பாராமுகமாயிருந்துவிட்டோமானல், குறிப்பிட்ட இரு சமூகங்களின் கதி என்னகுமென்று நினைக்கின்றீர்கள்? ஆகவே அடிமை வாழ்க்கையை வலியுறுத்தும், மதமும், சட்டங்களும், அவசியம் அழிக்கப்பட்டே தீரவேண்டும். (தொடரும்)

மதிப்புரைகள்.

சென்னை தமிழ் வைத்ய சாலையின் சொந்தக்காரரான வைத்ய பாஷ்கரர் பண்டித ஆனந்தம் அவர்களிடமிருந்து பற்பசை, பற்பொடி, கூந்தல் தைலம், கூந்தல்பசை முதலியன வரப்பெற்றோம். நம் நாட்டுத்தொழில்கள ஆதரவற்று ஊக்கங் குன்றிப்போவதற்கு முக்கிய காரணம், உண்மையை அறியும்படியாக போதிய விளம்பரமின்மையும், நம் ஜனங்கள் பொருள்களின் குணம்தன்மைமுதலிவற்றைக்கவனியாது ஆடம்பரமான விளம்பரங்களை மட்டும்பார்த்து ஏமாந்துபோவதுமே காரணமாகும். பற்பசை [அதாவது டூத்பேஸ்ட்] என்னும்பற்பசை புருஷினல் பல் தேய்ப்பவர்களுக்கு பயன்படக் கூடியது. வாய்க்கு இனிமையாகவும், நல்லவாசனையுள்ளதாகவும், பல்லுக்கு உறுதியும், பிரகாசமும்கொடுக்கக்கூடியதாகஇருக்கின்றது. விலை அணு 0—8—0

பற்பொடி! இது யாவரும் அறிந்ததேயாகும்இது கல்நார்சம் மந்தத்தில் செய்யப்பட்டு கையினலோ அல்லது பிரஷினலோ விளக்கி பற்களை நன்ருய் சுத்தம் செய்வதோடு பல் வியாதிகளையும் தடுக்கக்கூடிய சரக்குகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கேசாமிர்தம். கூந்தலுக்குத் தடவ உபயோகமுள்ள ஒரு பசை நல்ல மூலிகைகளாலும் பூக்களின் சத்துக்களாலும் செய்யப்பட்டதாகத் தெரிகிறது. சிறிது வாசனையுள்ளது. வாஸ்லையனுக்குப் பதிலாக இதை உபயோகிக்கலாம்,

பாட்டில் 1க்கு அணு, 8

பூஎண்ணெய். வாசனைபுஷ்பங்களின் சத்துக்களால் செய்யப்பட்டது. வாசனையுள்ளது.

குப்பி 1க்கு ரூ.1.

கிடைக்குமிடம்.

தமிழ்வைத்யசாலை,
221, தங்கசாலைத்தெரு சென்னை.

சாவித்திரி.

இச்சரிதையானது டில்லி, ஜமீஅத்துல் உலமா பிரதம மெம்பரான ஜனப் ஷம்ஸுல் இஸ்லாம் அவர்களால் நவீன நாவல் தோரணையில் எழுதப்பட்டதை, சைபுல் இஸ்லாம் பத்திராதிபர் மௌல்வி அஹ்மத்ஸயீத்சாயபு அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, நமது பார்வைக்கு ஒரு புஸ்தகம் அனுப்பப்பட்டதுஇப்புஸ்தகமானது அதில்காணப்படும்சில விஷயங்களில்இஸ்லாம்மார்க்கத்தின்பெருமையும், குர்ஆனின்பெருமையும் விளக்கிக்காட்டுவதற்காக எழுதப்பட்டதாகும். மேலும், இக்கதையானது சைபுல்இஸ்லாம் பத்திரிகையில் ஏற்கனவே தொடராக வெளியானதுமாகும். படிக்க மிக இனிமையாகவுமிருக்கிறது. 200 பக்கங்களுக்கு மேற்பட்ட இப்புஸ்தகத்தின் விலை ரூ. 1-0-0.

கிடைக்குமிடம்:—மானேஜர்,
சைபுல் இஸ்லாம் புக்டிபோ,
சென்னை.

சன்மார்க்கன்.

கொங்குமண்டல சமரச சன்மார்க்க சங்கத்தின் மாத வெளியீடாக பழனியினின்று திரு சி. சுவாமி சிவநேசம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட "சன்மார்க்கன்" வெளியீட்டின் முதல் இதழ் வரப்பெற்றோம். எதிர்பார்த்தஅளவு சீர்திருத்தத்துறையில் முற்போக்குடையதாகக் காணப்படாவிடினும், கல்வி, கைத்தொழில், சுகாதாரம், சிசுபரிபாலனம் முதலியவைகளைப்பற்றிய பலகட்டுரைகள் காணப்படுகின்றன. காலத்தின் போக்கையும், நாட்டின் நலத்தையுமே தன்கடமையாகக்கொண்டு எத்தகைய எதிர்ப்பையும் பொருட்படுத்தாது சன்மார்க்கன் சீரிய வழியில்நேர்மையான தொண்டாற்ற துணிந்துமுற்படவேண்டுமென விரும்புகிறோம்

சந்தா உள்நாடு ரூ. 1-0-0.

விலாசம்:—
சன்மார்க்கன் காரியாலயம்,
பழனி. S. I.

பண்டிதஜவஹர்லால்நேரு.

மேற்குறிப்பிட்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்துளது. இதனை எழுதியவர் திருவாளர் டி. எஸ். சொக்கலிங்கம் அவர்களாகும். இதில் பண்டிதரின் இளமை, கல்வி, மேனாட்டுப் பிரயாணம் காங்கிரஸ் சம்பந்தம். தேசசேவை முதலியவை தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது. 32பக்கம் கொண்டது விலை அணு 0—1—0. 1½ அணு ஸ்டாம்பு அனுப்புவோருக்கு அனுப்பப்படும். கிடைக்குமிடம்:—
காந்திஆபீஸ்.
11-ஆண்டர்சன்தெரு சென்னை.

அறிவைத் திருத்தும் ஆராய்ச்சிக் கும்மி.

திருப்பத்தூர் திரு. அருளானந்தம் அவர்களால் எழுதப்பட்ட மேற்கண்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வந்துளது. இதில்ஜாதி, சமயம் கடவுள் கட்டுப்பாடுகளும் சகுனம் முதலிய குருட்டு நம்பிக்கைகளும் கும்மிப்பாடல் ரூபமாக இயற்றப்பட்டுள்ளது.

வேண்டுவோர் ஒரு அணு ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். கிடைக்குமிடம். டாக்டர் V.S. ஷண்முகானந்தம்
தமிழ் வைத்ய சாலை,
36-மாகாளிப்பட்டிரோடு
மதுரை.

தூத்துக்குடி

சுயமரியாதைச் சங்க அங்கத்தினர்களின் விஷயாலோசனைக் கூட்டம்:—ஷை சங்கத்தின் விஷயாலோசனைக் கூட்டமொன்று 10-6-31ந் தேதி இரவு 7-30 மணிக்கு காரப்பேட்டை சபாமண்டபத்தில், திரு. எம். வைகுண்டம் அவர்களின் தலைமையில் கூடி கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய்நிறைவேற்றப்பட்டது.

தீர்மானங்கள் "நமதியக்கக் கொள்கைகளைப் பரப்புவதற்கு தமிழ் தினசரிப்பத்திரிகை விஷயமாகத் தலைவர்கள் எடுத்துள்ள தீவிர முயற்சியை இக்கூட்டம் பாராட்டுவதோடு, 'குடி அரசு" [அல்லது 'பகுத்தறிவு'] யென்ற பெயரே அப்பத்திரிகைக்குப் பொருத்தமானதென்றும், பத்திரிகை சென்னையிலேயே நடத்தப்படவேண்டுமென்றும், நமதியக்கங்கண்ட கிழச்சிங்கமே கொள்கைக்குப் பொருப்பாளியாயிருக்கவேண்டுமென்றும், கூடுமானல் "ரிவோல்ட்" என்ற ஆங்கில வாரப் பத்திரிகையையும் மீண்டும் நடத்தத் தலைவர்கள் முயற்சிக்கவேண்டுமென்றும் இக்கூட்டம் தீர்மானிக்கிறது."

சீர்குடி வேளாளர் சங்கம்:—

ஷை சங்கத்தின் பொதுக்கூட்டமொன்று 14-6 31 இரவு 7 மணிக்குத் திரவியபுரம் பார்வதியம்மன் கோவில் தெரு முன்பாக திரு. மா. தெ. ஆறுமுகம் பிள்ளை அவர்களின் தலைமையில் கூடியது. அவ்வமயம் திரு. ந. சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் "அறத்தின் மாண்பு" என்பதைப்பற்றி சொற்பொழிவாற்றப்பட்டதும். திரு. செல்லையா பரமானந்தம்பிள்ளை அவர்களை ஷை சங்கத்திற்குக் காரியதரிசியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுக் கூட்டமினிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிருர்.

யாதவர் சங்கம்:—

தூத்துக்குடி வடபாகம் இராமயனசாவடியில் ஓர் பொதுக் கூட்டம் திரு சுந்தரபாண்டிய கோனர் அவர்களின் தலைமையில்கூடி, யாதவ வகுப்பினரின் கட்டுத்திட்ட முறைபாடுகளைப் பற்றிப்பேசி, அவைகளைத் தகர்த்தெறிய ஓர் சங்கம் அவசியமெனக் கருதி அவ்வாறே ஓர் சங்கம் நிறுவவேண்டுவதற்குறிய முயற்சி யெடுத்து, அதேதகூட்டத்தில் ஷை சங்கத்தை நிறுவுவதெனத் தீர்மானித்து கூட்டமினிது கலைந்ததென ஒரு நிருபர் எழுதுகிருர்.

(3-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் உங்களுக்கு பாத்தியமானபங்கைச் சரியாக உங்களுக்குக் கொடுப்பவர்கள் இங்கில்லையென்பது உண்மையிலும் உண்மை. நமது இந்தியத்தாய்க்குச் சில குழந்தைகள் அவர்களெல்லாம் மைனர்களென்றும் அவர்கள் சொத்தை கார்டியன் என்னும் பாத்திதையில் ஆங்கிலேயர்கள் பரிபாலித்துவந்ததும் இப்பொழுது அந்த பிள்ளைகள் மேஜர்களாய்விட்டார்களென்றும் அதனால் கார்டியன் சொத்தைத் திருப்பிக்கொடுப்பதாகவும் ஐதீகம் அப்படிக்கொடுப்பதில் கலியாணமான மேஜரானவர்கட்கு மர்மனர் பந்துக்கள் வீட்டுத்துணையும், சௌவுகரியங்களுமுண்டு. நாங்களோ மேஜராயும் கலியாண மாகாதவர்கள் அவர்களிடம் எங்கள் சொத்தையும் ஒப்புவித்தால் எங்களுக்கு மூத்த பிள்ளைகள், அவர்கள் பெண்ஜாதி பந்துக்கள் பேச்சைக்கேட்டுக்கொண்டு சிறு மேஜர்கள் சொத்தை அபகரித்துக் கொள்ளுவார்கள் ஆனதால் கார்டியனை நீங்களே அந்தசொத்தின்பாத்தியபாத்திதைகளை நிர்ணயித்து அதற்கு எல்லை கட்டியாரும் அதில் பிரவேசிக்காதபடியும் செய்து கொடுக்கவேண்டுமென்று வாள்வலிமையால் அல்லாது தரும மகிமையாலே ஜாதி மகிமை வருகிறதென்று நினைக்கும் அங்குள்ள ஆங்கிலேயர்களிடம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

உங்கள் சபையின் கூட்டத்தைக் கண்டு, காங்கிரஸ் மூலையில் தள்ளிவிட்ட தீண்டாமையைப்பற்றி இப்பொழுது சில காங்கிரஸ் மேடைகளில் ஒருவார்த்தை பேசுகிறார்கள் என்பதை நீங்கள் தெரிவீர்கள். மதுரையில் கூடின மாகாண மகாநாட்டில் உங்களுடைய பொதுஸ்தலப் பாத்தியங்களுக்கு வைதீகர்களிடம் கேட்டுக் கொள்ளவேண்டுமென்று தேசியவாதிகள் தீர்மானம் பண்ணினதை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இந்தியர்களுடைய பாத்தியதைகளை சர்ச்சில், டயர் முதலியவர்கள் அடங்கின கோஷ்டியைக்கேட்டுச் சொல்லுகிறோமென்று இங்கிலாண்டு, இந்திய கவர்ன்மெண்டு சொல்லிவிட்டால் அது நியாயம்தானென்று தேசிய வாதிகள் ஒத்துக் கொள்ளுவார்களா? பார்ப்பனர்களும், தேசியப் பார்ப்பனப் பத்திரிகைகளும் அதைக் கேட்டு சும்மா இருப்பதுபோல இதைக்கேட்டு சும்மாயிருக்குமா?

உங்கள் தலைவர்கள்கூட தைரியமாய்ப் பேசுவதில் பயமோ, தாக்ஷண்யமோ உடையவர்களா? உயர்ந்த ஜாதி இந்துக்களின் தாக்ஷண்யத்தால் தயவால், கருணையால், அபிநயத்தால், தாற்காலி யிருப்பும், வாங்கள், போங்களென்ற மரியாதையும் உங்கள் தலைவர்களுக்கு வந்துவிடவில்லை என்பதையும், நயமான பேச்சுக்கும், தாக்ஷண்யத்திற்கும், வஞ்சனையான வாய்மொழிக்கும் வசப்பட்டு, தன் சாதியிலுள்ள அநேக லக்ஷம் ஏழைகளின் பாத்தியங்களை எந்தவிதக் காரணத்தாலும் விட்டுக் கொடுக்கமால் இருக்கும்படியாக தெரியப்படுத்துங்கள். முன்னிருந்ததைவிட இப்பொழுது உங்கள் காரியங்களைச் சொல்லுவதில் துணிவு பெற்றிருக்கிறீர்கள். அந்தத்துணிபு எங்ஙனம் பெற்றீர்கள். உங்கள் பலத்தாலா? அன்று, உங்களுக்குப் பலமில்லை, உங்கள் வாக்கினலா? அன்று, அது நீங்கள் நினைக்கிற அளவு ஒலியில்லை. உங்களுக்குப் பக்கபலமுண்டா? கிடையாது. உங்கள் கட்சி தருமமா? ஆம். நியாயமா? ஆம். அதை நம்புங்கள், ஆங்கிலேயரிடம் சொல்லுங்கள். கனம் சர்ச்சிலுக்குப் பெரிய விண்ணப்பமெழுதுங்கள். கூடுமானல், அவர் கோஷ்டிகளுக்கெல்லாம் தெரியப்படுத்துங்கள். அது குற்றமன்று. இங்கே நம்முடைய மாகாண மகாநாடு மீனுட்சி சன்னதிக்கு முன்னுல் வைதீகர்களிடம் உங்களை ஒப்புவித்திருக்கையில் அங்கே மரியாள் சன்னதிக்குமுன்னுல் கனம் சர்ச்சில் வைதீகர்களிடம் உங்களை ஒப்புவிப்பதில் குற்றமென்ன? தன் நியாயம், பிறர் நியாயம் என்பது, தன் வித்தியாசமே யொழிய அதிலுள்ள நியாயந்தான் இதிலுமிருக்கிறது.

தற்காலத்துப் புறத்தோற்றம் யாதாயினும், கடைசிவரை நீங்கள் ஆங்கிலேயர்களை நம்பவேண்டும். அவர்களும் சதையும், இரத்தமுமுடைய மனிதர்கள்தான். கோபதாபங்களையும், அசூசையையும் வென்ற முனிவரல்லர். நாம் மன அதிர்ச்சியினுலும், பயத்தாலும் நிழலை உண்மையென்று நினைப்பதுபோல அவர்களும் நினைப்பவர்கள்தான். பொறுமையாட்களும், கடமைகளும், தைரியமும் உடைய அவர்களிடமுள்ள நல்ல அம்சங்களுடன் ஒட்டிக்கொள்ள வேண்டுமென்பதே எனது அபிப்பிராயமாகும். பிரிட்டிஷ் ராஜியத்தின் கொள்கை சனங்கள் ஆட்சியில் கலக்கவேண்டுமென்பதேயாகும். அன்னியர் யாரும் பொறுப்பின்றி அரசுசெய்யும் முறைமையை அக்கொள்கை கண்டிக்கிறது.

புது சீர்திருத்தத்தால் ஆயிரக்கணக்கான சம்பளத்தில் அநேகரை நியமித்தாலும் உங்களுக்கு நன்மையில்லை. வெள்ளைக்காரர்களின் கூட்டுறவிருந்தால் தீண்டாமை சிறிது தூரமாவதுமிருக்கும். ஒரு வெள்ளைக்கார உத்தியோகஸ்தன் போய்விட்டால் உங்கள் ஐந்தாறு குடும்பங்களுக்குப் பிழைப்பில்லை. இந்து உத்தியோகஸ்தன் தோட்டத்து வேலைக்குக்கூட உங்களை வைத்துக்கொள்ள மாட்டார்கள். உயர்ந்த ஜாதி இந்துவென்று நினைத்துக்கொள்ளும் உத்தியோகஸ்தன் தீண்டாமை முதலிய அசுத்தசுத்தங்களால்தான் தனக்குச் சுவாமி சம்பத்தைத்தந்ததாக நினைத்து இனியும் அதைக் கைக்கொண்டு பக்தியோடு நடந்தால் மேலான சம்பத்து வருமென்று நினைக்கிறான். அப்படி நினைக்கும் இந்த ஜாதிக்குள் அதிகாரங்கள் வந்துவிட்டால் உங்களுக்கு நியாயம் எப்படிக் கிடைக்கும். இதற்குமுன் சீர்திருத்தம் வந்து பத்து வருடமாயிற்றே, முனிசிபாலிட்டி, தாலூக்காபோர்டு, ஜில்லா போர்டு, முதலியவைகளில் உங்களுக்கு சேவகன்வேலை எத்தனை கொடுத்திருக்கிறார்கள், என்பதைக் கவனித்தால் உயர்ந்த ஜாதிகளின் யோக்கியதை விளங்கிவிடும். ஆனதால் இந்த சீர்திருத்தத்தில் உங்களுக்கு ஒவ்வொன்றிலும் உத்தியோகங்கள், பிரதிநிதித்துவங்கள் எல்லாம் தீர்மானமான கணக்காய்ப் போய்விட வேண்டும். உத்தியோகத்திற்கு யோக்யதைவேண்டுமென்றால், மரத்தடியிலும் உண்டைச் சோற்றிலு மிருந்தவர்களெல்லாம் பழக்கத்தில் வந்திருக்கையில் வெள்ளைக்காரர்களிடமே பழகுகிற எங்களுக்கும் வந்துவிடுமென்றும் குடியானவர்களிடமும், மணியக்காரர்களிடமும், மிராஸ்தாரர்களிடமும் இப்பொழுதிருக்கும் உத்தியோகஸ்தர்கள் எப்படி நடந்து கொள்ளுகிறார்களோ! அவ்விதம் வெகு இலகுவில் பழகிவிடுவோம் என்று சொல்லுங்கள். காலத்தை வீணுபோக்காதீர்கள். சமயம் நெருங்கிவிட்டது. உங்கள் காரியங்களை தெரியப்படுத்த வேண்டியவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். கனம் ராஜா அவர்கட்கும், மற்ற தலைவர்களுக்கும் என்னுடைய இரண்டு கடிதத்தையும் படித்துக்காட்டுங்கள். அவர்களை ஓய்வில்லாமல் உழைக்கநிர்ப்பந்தியுங்கள். அவர்கள் சொல்லுவதைக் கேளுங்கள்.

இன்ஜெக்ஷனிலும் இனிது எது? அதுவே
ஸ்ரீமத் R. K. பழனிஸ்வாமிகள் என்னும்
சித்தயோகீஸ்வரரால் தயாரிக்கப்பெற்ற,

இந்தியன் சக்தி மூக்தி ஆயில்.

சுமார் 1008 வியாதிகளுக்குமேல் அநேக கொடிய அபாய விபத்துகளுக்கும், விஷக்கடி, வெட்டுக்காயம் பற்பல ரணவியாதிகளுக்கும் பல அபமிர்த்து விற்கும், மேல் பிரயோகமாகத்தடவ, சகல வியாதிகளும் உடனே மாறும். கேட்டால் இனும்.

1 அவுன்ஸ் பாட்டில் 1-க்கு விலை	ரூ. 2—0—0
1/4 அவுன்ஸ்பாட்டில் 1-க்கு விலை	ரூ. 0—8—0

ஒவ்வோரிடங்களிலும் சோல் ஏஜண்டுகள் தேவை. மற்ற விபரங்களுக்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

வியாபாரிகளுக்கு தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
வி. பி. சார்ஜு பிரத்தியேகம்.

கோ. கோவிந்தராஜுலு செட்டியார்,
ஷாப் & மளிகை, துறையூர், (திருச்சி ஜில்லா.)

பண்டிட் எஸ். எஸ். ஆனந்தரின்

தமிழ் வைத்தியசாலை.

பலவகை வைத்தியர்களால் நிராசெனக் கைவிடப்பட்ட பல நோயாளர்கள் பண்டிட் ஆனந்தம் அவர்களின் மருந்துகளால் நோய் நீங்கி சுலமடைகின்றார்கள்.

மேகம், மதுமேகம, பக்கவாதம், குன்மம், காசம், க்ஷயம், காமாலை, சோகை, மகோதரம், ஆனைக்கால், குஷ்டம் முதலிய ரோகங்கள் மிகவிரைவில் நீக்கப்படுகின்றன.

அண்டவாதம் குடல்வாதம், கண்டமாலை, ராஜப்பிளவை, மூக்கில், தொண்டையில், நீர்த்தாரையில் சதை வளர்ச்சி முதலிய நோயாளர்களுக்கு, அறுவை (ஆபரேஷன்) இல்லாமல் வைத்தியம் செய்து சுலமடைந்து வருகின்றார்கள். இதன் விவரம் நமது கேட்லாக்கில் உள்ள தக்க மனிதர்களின் நற்சாட்சிப் பத்திரங்களில் காண்க.

நமது வைத்தியசாலைக்கு வருவதற்கு இயலாத நோயாளர்களை அவர்கள் இருக்குமிடத்தில் வந்து பார்க்கப்படும். நமது வைத்தியசாலையில் தங்கி நமது பார்வையில் வைத்தியம செய்துகொள்ளவேண்டியவர்களுக்கு இடம் முதலிய வசதிகள் செய்யப்படும்.

டெலிபோன் நெம்பர் 2584
தந்திவிலாசம் 'மருத்துவன்'' சென்னை.

மானேஜர்,
தமிழ் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலைக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி. ...	0—8—0
மனு நீதி மருமம் ...	0—2—0
இராமலிங்க சுவாமி பாடல் திரட்டு. ...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு. ...	0—2—0
சோதிடப் புரட்டு. ...	0—2—0
திரு ஈ. வெ ராமசாமியின் சீர்திருத்தமகாநாட்டு சொற்பொழிவு (2-பதிப்பு) ...	0—2—0
சுயமரியாதைப் பாடல் ...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம். ...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை ...	0—4—0
ஞானசூரியன் ...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்	0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம் ...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)	0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி ...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்? ...	0—2—0
*குறள் ...	0—8—0
* இயற்கைமதம் ...	0—8—0
* சிதம்பர ரகசியம் ...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது] ...	0—6—0
* ஆராய்ச்சி அணிகலம்	0--12--0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட் ...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்ப வேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி, கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம்	ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு

"குடி அரசு" ஏஜண்டுகள்.

R. ராமலிங்கம், வியாபாரம்
கோட்டார்.

*ராஜரத்னம், தமிழன் ஆபீஸ்,
ஆண்டர்சன் பேட்டை.

*காஸ்மாபாலிட்டன் கிளப்
விருதுநகர்.

*A. V. பாலசுப்ரமணியம்
23, எடயதெரு,
திருவாரூர்.

பி. சாமுவேல் பிள்ளை,
கிரேட்காட்டன் ரோடு,
தூத்துக்குடி.

*எஸ். மாசிலாமணி பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்,
பாலக்கரை திருச்சி.

S. குற்றாலலிங்கம் பிள்ளை
நியூஸ் ஏஜண்ட்
மீனாச்சிபுரம் திருநெல்வேலி.

S. P. கிருஷ்ணசாமி,
நாகப்பட்டணம்.

P. பழனியாண்டி செட்டியார்,
நாகூர்.

T. சேத்துநாயடு
சித்திரக்காரத் தெரு,
மதுரை.

K. கணபதி, சாக்கோட்டை
கும்பகோணம்.

மானேஜர், 'புதுவைமுரசு'
புதுச்சேரி.

வி. கண்ணன்,
சீமை எரு டிபோ,
காஞ்சீவரம்.

A. S. முருகேசம், பஜார்
திண்டுக்கல்.

*T. சுப்ரமணியபிள்ளை,
17 பாரிஸ் வெங்கிடாஜல
அய்யர் தெரு
சென்னை.

A. R. M. சுந்திர பாண்டியன்
கடைவீதி,
அருப்புக்கோட்டை.

G. V. ராமசாமி
பெரிய கடைவீதி,
கரூர்.

*B. ரங்கசாமி, டைலர்
பெரிய கடைவீதி,
கோயமுத்தூர்.

ஹாஜி முகமது ஷேக் உசேன்,
57. சுண்ணாம்புக்காரத்தெரு,
காரைக்கால்.

*M. ரத்னம்,
கிரோசினாயில் டிபோ,
நெல்லிக்குப்பம்.

K. N. தங்கவேலு,
காரியதரிசி
சமூகசீர்திருத்த சங்கம்
கல்லிடைக்குறிச்சி.

C. S. ஜோசப்
159 கேவல்ரி ரோடு,
பெங்களூர் Cant.

S. ராமசாமி
செங்குந்தர் தெரு,
துறையூர்.

முத்துசாமி
நாடார் ஹைஸ்கூல்,
பொறையார்.

P. S. ஜீவரத்னம் பிள்ளை,
2. மலாய்வீதி, ஸ்லேவ்ஜலண்டு,
கொழும்பு.

A. S. பரமசிவம்
34. காரிக் ஹவுஸ்
டிபன்சிகா ரோடு
ஹேவ்லக் டவுன்
கொழும்பு

எட்வர்ட்பால்
திருமலாபுரம்

செல்வராய கவுண்டர்
திருப்பத்தூர்

S. அப்பாதுரை
மண்டி, ராசிபுரம்.

M. N. M. பாவலர்
நியூஸ் ஏஜண்ட்,
திருப்பாபுலியூர்.

* இந்த புள்ளியுள்ள விலாசதார்களிடம் குடி அரசு பதிப்பக புஸ்தகங்களும் கிடைக்கும்.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road.

கோலாலம்பூர்.

R. S. Naidu,
86, Ampang St.

O. M. Ali Saiboo & Co,
27, Java Stree

The Selanger Stamp Co.,
Market Street.

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club.
85: Paul Street,
Seramban N. S

The Central stores
61, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

வேற்றுமை விருக்ஷம் வேரோடு வீழ்க.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0

வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0

வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—

மானேஜர், "குமரன்" காரைக்குடி

ராமநாதபுரம் ஜில்லா

—

'முன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0

இந்தியாவுக்கு ரூ.5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—

மானேஜர், "முன்னேற்றம்"

152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: S. குருசாமி B.A.

மானேஜர், "புதுவைமுரசு"

4 லல்லிதொலாந்தால் வீதி

புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0

வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,

"நாடார்குல மித்திரன்"

அருப்புக்கோட்டை

ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"

ஆண்டர்சன் பேட்டை P.O.

கோலார் தங்கவயல் (S. I.)

'சண்டமாருதம்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0

வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: அ. பொன்னம்பலம்

மானேஜர், "சண்டமாருதம்"

கோட்டையூர்,

ராமனுதபுரம் ஜில்லா,

—

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

—

"முன்னேற்றம்" ஆபீஸ்,

152, சிலிகி ரோட்,

சிங்கப்பூர்.

—

100 வேளை தாம்பர பற்பங்கள் சாப்பிட்டும் தீராத குஷ்ட மெல்லாம் தீர்ந்து குணமாகி விட்டதென்று ஏராளமான நற்சாட்சிகள் வந்துகொண்டிருக்கின்றன.

சித்தா தயிலம்

குஷ்டம், குறைநோய், குழிப்புண், கண்டமாலை, விஷ குஷ்டம், நீர் வடிதல், தோல் உரிதல், மூக்கடைப்பு, மூக்குபள்ளம், செம்மேகப் பற்றுகள், தடிப்பு, வீக்கம், சொரி, வெண் குஷ்டம், கருமேக ஊரல், கருங்குஷ்டம், கிரந்தி, சூலை, முடக்கு, குன்மம் முதலிய வியாதிகள் கண்டிப்பாய் தீரும். பந்தயம்போட்டு பரீக்ஷிக்கக்கூடியது. இதற்கு மேலானமருந்தே பார்க்கமுடியாது. 1 புட்டி ரூ. 5-8-0 அனுபானம் ரூ. 1-8-0 ஆக ரூ. 7.

விலாசம்:—கே. எஸ். பதி, வைத்தியசாலை பழனி, S I Ry

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பெற்று உலகமெங்கும் புகழ்பெற்று விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், கபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கழுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்றமுடையவர்கள், ஆணிப்புண்கள், கிராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் விலை ரூ. 50. 50-வேளை ரூ. 25. 25-வேளை ரூ. 12-8-0. ஏழைகளுக்குப் பாதிவிலை. பிரபுக்களுக்கு ரேட் வேறு.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது

மன்மத குளிகையை

உபயோகியுங்கள் திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், ரத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் செந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மலையப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாளால் வெளியிடப்பட்டது.